# புதிய கலாச்சாரம்

மார்ச், 2013
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 10.00



## அன்னலட்சுமி - திருவோட்டுத் தமிழன்!



# காஷ்மீர்: போலீஸ் கொடுமையால் உருவாகும் போராளிகள்!

அப்சல் குரு தூக்கிலிடப்பட்டதைத் தொடர்ந்து காஷ்மீர் குமுறிக் கொண்டிருக்கிறது. நாடாளுமன்றத் தாக்குதல் வழக்கில் குறிப்பிட்ட சில போலீசு அதிகாரிகள் தன்னை சிக்க வைத்து விட்டனர் என்ற அப்சல் குருவின் குற்றச்சாட்டு விசாரிக்கப் படாமலேயே கள்ளத்தனமாகவும் இரகசியமாகவும் அவர் தூக்கிலிடப் பட்டு விட்டார். அப்சல் குருவின் வழக்கு நாடறிந்த கதை. ஆனால் போலீசாலும் இராணுவத்தாலும் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தப்பட்டு கொல்லப்பட்ட இளைஞர்களின் கதைகள் காஷ்மீரில் ஏராளம். பொய் வழக்கு, சிறை, சித்திரவதை ஆகியவற்றிலிருந்து தப்பிக்க வேண்டுமானால், தலைமறைவாவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலையை காஷ்மீரின் இளைஞர்களுக்கு போலீசும் இராணுவமும் தொடர்ந்து உருவாக்கி வருகின்றன. பல இளைஞர்களை கொடுமைப் படுத்தி போராளிகளாக மாற்றுவதே அரசின் அடக்குமுறைதான் என்கிறார்கள் காஷ்மீர் மக்கள்.

காஷ்மீரின் இளைய தலைமுறை போராளிகள் எப்படி உருவாக்கப் படுகிறார்கள் என்ற சித்திரத்தை 'தெகல்கா' ஆங்கில வார இதழ் வெளியிட்டுள்ள கீழ்க்காணும் எடுத்துக்காட்டுகள் விளக்குகின்றன.

**1. சித்திரவதையும் அவமானமும் உருவாக்கிய போராளி**

பெயர் : முசாமில் அகமது தர்
வயது : 24
ஊர் : சோப்போர்
தொழில் : மருத்துவ உதவியாளர்

2009-ம் ஆண்டு மருத்துவ உதவியாளர் பட்டம் பெற்று சோப்போர் மருத்துவமனை ஒன்றில் வேலைக்கு சேர்ந்தார் முசாமில். ஆனால் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு அவர் ஏ.கே.47 துப்பாக்கியை காதலிக்க ஆரம்பித்திருந்தார். 'முசாமில் ஒரு தலைமறைவான லஷ்கர்-ஈ-தொய்பா போராளி' என்று அப்போது உள்துறை அமைச்சராக இருந்த ப. சிதம்பரம் அறிவித்தார். 2012-ம் ஆண்டு அக்டோபர் 21-ம் தேதியன்று ஸ்ரீநகருக்கு வடக்கே 66 கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் சோப்போர் நகரத்தில் பாதுகாப்பு

முசாமில் கொல்லப்பட்டார்.

இடையில் என்ன நடந்தது? நடுத்தர வர்க்க குடும்பத்தைச் சேர்ந்த முசாமில் ஒரு காலத்தில் ராஜீவ்காந்தி எழுத்தறிவு இயக்கத்தில் ஆசிரியராக பணியாற்றியவர். அவர் கொல்லப்படுவதற்கு பல மாதங்களுக்கு முன்பு எடுக்கப்பட்ட புகைப்படத்தில் வெள்ளைத் தொப்பி தரித்த குறுந்தாடி வைத்த நம்பிக்கையான முகத்துடன் காட்சியளிக்கிறார். 'மருத்துவமனையில் வேலைக்கு சேர்ந்து குடும்பத்தின் கடன்களை அடைக்க உழைத்துக் கொண்டிருந்தார்' என்கிறார்கள் அவரது நண்பர்கள்.

ஆனால் நவம்பர் 17, 2010-ல் நடந்த ஒரு சம்பவம் அவரது வாழ்க்கையையே மாற்றி விட்டது. அன்று போலீசிடமிருந்து தப்பி ஓடிக் கொண்டிருந்த யாரோ இரண்டு பேர் ஒரு மூட்டையை முசாமில் வீட்டு தோட்டத்தில் தூக்கி எறிந்து விட்டு போனார்கள். அதைப் பார்த்து பயந்து போன அவரது அம்மா, யாருக்கும் தெரியாமல் அதை கிணற்றில் தூக்கி போட்டு விட்டார். அந்த செயலில் ஆரம்பித்த தொடர் நிகழ்வுகள் முசாமிலின் உயிரை பறிப்பதில் கொண்டு விட்டன.

விரைவிலேயே போலீசும் பாதுகாப்பு படையினரும் முசாமில் வீட்டுக்கு வந்தனர். முசாமிலின் அப்பா மொகமது அமீன் தர், முசாமில் மற்றும் அவரது இரண்டு சகோதரர்களையும் அழைத்துச் சென்றனர்.

காவல் நிலையத்தில் முசாமில் சித்திரவதை செய்யப்பட்டார். அவரை ஒரு நாற்காலியில் கட்டி வைத்து சகோதரர்கள் இருவரையும் இரண்டு கால்களையும் இரண்டு பக்கம் இழுக்கும்படி செய்தனர். அவர்களது தந்தை இதைப் பார்க்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டார். முசாமிலின் கதறல்களை கேட்டு போலீஸ்காரர்கள் கிண்டல் செய்தார்கள். 'மிகவும் அவமானமான மறக்க முடியாத சம்பவம்' என்கிறார் மொகமது அமீன் தர்.

பொது பாதுகாப்பு சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்பட்டு முசாமில் 10 மாதங்கள் போலீஸ் காவலில் வைக்கப்பட்டிருந்தார். இறுதியில் வழக்கு ஆதாரமற்றது என்று தள்ளுபடி செய்யப்பட்டது.

சென்ற ஆண்டு முசாமில் ஒரு தீவிரவாதி என்று அறிவிக்கப்பட்ட போது

**தொடர்ச்சி 35-ஆம் பக்கம்**

**காஷ்மீர் தெருக்களில் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களை கல்லெறிய வைத்து பின்னர் போராளியாக்கி இறுதியில் கொல்கிறார்கள்.**



கலை இலக்கியம் யாவும் மக்களுக்கே!

- புதிய கலாச்சாரம்
- மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்

- போர் : **29**
- குரல் : **9-10**
- பிப்.2013 - மார்ச் 2013

உள்நாடு: ரூ. 10.00
ஆண்டுச் சந்தா: ரூ. 150.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா ரூ. 750.00

*சந்தா, படைப்புகள் அனுப்பவும் தகவல்களுக்கும்*



கண்ணையன் ராமதாஸ்,
16, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
(15-ஆவது தெரு அருகில்),
அசோக் நகர்,
சென்னை - 600 083.

தொலைபேசி: 044-23718706
9941175876

மின் அஞ்சல் முகவரி:
pukatn@gmail.com.



அலுவலக நேரம்:
காலை 10 முதல் மாலை 5 மணி வரை

*அட்டை வடிவமைப்பு:*
ராஜன்


# மாணவர் எழுச்சி: போராடும் பண்பு வளரட்டும்!

ஜெனிவாவில் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வர இருக்கும் தீர்மானத்தையொட்டி, 'ராஜபக்சேவை இனப்படுகொலைக் குற்றவாளியாக அறிவித்து தண்டிக்க வேண்டும், போர்க்குற்றத்துக்காகத் தண்டிக்க வேண்டும், தமிழீழத்துக்கான பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும்' என்பன போன்ற கோரிக்கைகளை முன்வைத்து தமிழகம் முழுவதும் மாணவர்கள் போராட்டம் நடந்து வருகின்றது. சட்டக் கல்லூரி மற்றும் கலைக் கல்லூரி மாணவர்கள் மத்தியில் தொடங்கிய போராட்டம் தனியார் பொறியியல் கல்லூரி மாணவர்கள் முதல் பள்ளி மாணவர்கள் வரை அனைவரையும் ஈர்த்திருக்கிறது.

தமது கோரிக்கைகள் பற்றிய தெளிவான புரிதல் இல்லையெனினும், அமெரிக்க தீர்மானம் ஒரு மோசடித் தீர்மானம் என்பதும், இந்திய அரசு இந்த இன அழிப்புப் போருக்கு உடந்தையாக இருந்திருக்கிறது என்ற உண்மையும் குறிப்பிடத்தக்க அளவுக்கு மாணவர்கள் மத்தியில் சென்றிருக்கிறது. இந்திய அரசின் தயவைச் சார்ந்துதான் ஈழத்தமிழ் மக்கள் விடுதலை பெற முடியும் என்ற அடிமைத்தனமான கருத்தை முறியடிக்க முடியும் என்பதற்கான துவக்கமாக இதனைக் கொள்ளலாம்.

பொதுவான மனிதாபிமானக் கண்ணோட்டம் அல்லது தமிழின உணர்வு போன்றவற்றால்தான் பல மாணவர்கள் வழிநடத்தப் படுகின்றனர். இருப்பினும், 2009 இனப்படுகொலை தோற்றுவித்த தமிழக மக்களின் கோபத்தை கருணாநிதி எதிர் ஜெயலலிதா, காங் எதிர் பாஜக என்ற சட்டகத்துக்குள் அடக்கி, எதிர்ப்பு வாக்குகளை அறுவடை செய்து ஜெயலலிதாவின் பொற்பாதங்களில் சமர்ப்பித்த ஆழ்வார் கூட்டத்தின் அரசியல் தந்திரத்திற்கு வெளியில் இந்தப் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. அந்த அளவில் இது ஓட்டுப்பொறுக்கி அரசியலின் காலடியில் சரணடைவதிலிருந்து வெளியே வந்திருக்கிறது. இருப்பினும் இதனை அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் ஆதாயத்துக்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதில் குறியாக இருக்கும் நெடுமாறன் வகையறாவைச் சேர்ந்த ஜெயலலிதாவின் ஐந்தாம் படை, மாணவர் போராட்டம் நடக்கும் இடங்களுக்கெல்லாம் சென்று வாழ்த்துரை வழங்கி வருகிறது.

2009 தேர்தலில் இராணுவத்தை அனுப்பி தனி ஈழம் வாங்கித் தருவதாக வாக்குறுதி அளித்த ஜெயலலிதா, ஒன்றுபட்ட இலங்கை என்று பேசுவது மட்டுமின்றி, அமெரிக்க தீர்மானத்துக்கு திருத்தம் சொல்வதோடு நிறுத்திக் கொண்டிருக்கிறார். போராட்டம் நடைபெறும் எந்த இடத்திலும் வன்முறையோ பொதுச்சொத்துக்கு சேதமோ நிகழவில்லை என்ற போதிலும், ஆகப் பெரும்பான்மையான இடங்களில் மாணவர்கள் உண்ணாவிரதம்தான் நடத்தி வருகிறார்கள் என்ற போதிலும், 525 பொறியியல் கல்லூரிகள் உள்ளிட்ட அனைத்துக் கல்லூரிகளுக்கும் விடுமுறை அறிவித்து, விடுதிகளைக் காலி செய்யச் சொல்லி உத்திரவிட்டிருக்கிறது ஜெயலலிதா அரசு. இருந்த போதிலும், அம்மாவின் ஐந்தாம்படை இவை குறித்து சதித்தனமான மவுனம் சாதிப்பதுடன், மாணவர்களின் கோபம் அம்மாவுக்கு எதிராகத் திரும்பி விடாமல் கவனமாகப் பார்த்துக் கொள்கிறது.

நடைபெற்று வரும் இந்த மாணவர் போராட்டம் இனப்படுகொலை, போர்க்குற்றம், இந்திய இலங்கை உறவு என்ற எல்லைகளைத் தாண்டி ஆளும் வர்க்கம் மற்றும் அரசு எந்திரத்தின் கவலைக்குரியதாகியிருக்கிறது. கிரிமினல் குற்ற நடத்தை கொண்டோரின் விவரங்களைத் திரட்டி வைப்பதன் மூலம் குற்றப் புலனாய்வு மற்றும் குற்றத்தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது போல, தற்போது போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் மாணவர்களின் பெயர், ஊர், முகவரி உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் சேகரித்து வருவதாக மத்திய மாநில புலனாய்வுத் துறையினர் வெளிப்படையாகவே அறிவித்திருக்கின்றனர். (தினத்தந்தி, 17.3.2013) போராட்ட எண்ணத்தில் இருக்கும் மாணவர்களின் டேட்டா (விவரங்கள்) போலீசுக்கு அவசியம் தேவைப்படுவதாகவும், எங்காவது குற்றம் நடந்தால் குற்றவாளிகள் பட்டியலில் உள்ளோரை அழைத்து விசாரிப்பதைப் போல போராட்டம் நடக்கின்ற இடங்களில் இவர்களை அழைத்து விசாரிக்க முடியும் என்றும் கூறியிருக்கின்றனர்.



இலங்கை விமானங்களை முற்றுகையிடச் செல்லும் மாணவர்கள்.

இது மட்டுமின்றி, இத்தகைய போராட்டங்களில் ஈடுபடும் மாணவர்களுடைய பெயர்கள் மேற்படி பட்டியலில் ஏற்றப்பட்டு விட்டால், பின்னாளில் அவர்கள் அரசு வேலைக்கு தெரிவு செய்யப்படும்போது, மாணவப் பருவத்தில் அரசுக்கு எதிரான போராட்டங்களில் அவர்கள் ஈடுபட்டது குறித்த விவரத்தையும், போராட்டத்தின் தன்மை, கோரிக்கைகள், எழுப்பிய முழக்கங்கள், போராட்ட நாள் ஆகிய அனைத்தையுமே உளவுத்துறை தொகுப்பான முறையில் அரசுக்கு அளிக்கும் என்றும், இதன் காரணமாக இத்தகைய போராட்டங்களில் ஈடுபடும் மாணவர்கள் இந்தியா முழுவதும் எந்த இடத்திலும் அரசு வேலைவாய்ப்புக்கு செல்ல இயலாது என்றும் எச்சரித்திருக்கின்றனர் உளவுத்துறையினர்.

'போராட்ட குணம் கொண்ட மாணவர்களை அடையாளம் காண்பது' என்பது தான் இந்த உளவுத்துறை எச்சரிக்கையின் முக்கியமான பகுதி. மனிதாபிமான நோக்கிலோ, இன உணர்விலோ அல்லது பாலச்சந்திரன் என்ற குழந்தை படுகொலை செய்யப்பட்டிருக்கும் அநீதியைக் கண்டு பதைத்தோ ஒரு மாணவன் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கலாம். இந்தக் குறிப்பிட்ட போராட்டம் அல்லது கோரிக்கையின் நியாய அநியாயங்களைக் காட்டிலும், 'மாணவர்களின் போராட்ட குணம்' என்பது தான் ஆளும் வர்க்கத்தையும், அதிகார வர்க்கத்தையும் எச்சரிக்கையடையச் செய்திருக்கிறது.

இன்று ஈழத்தமிழ் மக்களுக்கு நீதி கேட்டுப் போராடும் இந்த மாணவர்கள், நாளை தமிழக மக்களின் உரிமை பறிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகப் போராடக் கூடும். மறுகாலனியாக்க கொள்கைகளால் உணவு, கல்வி, மருத்துவம் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் உரிமைகள் பறிக்கப்பட்டு வரும் சூழலில், பொதுத்துறைகள், இயற்கை வளங்கள், விளைநிலங்கள் உள்ளிட்ட மக்களின் பொதுச்சொத்துக்கள் பன்னாட்டு நிறுவனங்களின் உடைமையாக மாற்றப்பட்டு வரும் சூழலில், எல்லா ஓட்டுச்சீட்டு அரசியல் கட்சிகளும் இந்த மறுகாலனியாக்க கொள்கையின் ஏவலர்களே என்ற உண்மை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அம்பலமாகி வரும் சூழலில், 'மாணவர்களின் போராட்ட குணம்' தலையெடுத்திருப்பது ஆளும் வர்க்கத்தை கவலையடையச் செய்திருக்கிறது. கண்ணுக்கு முன்னால் தெரிகின்ற ஈழப்பிரச்சினை என்ற வரம்பைத் தாண்டி, வரவிருக்கும் பிரச்சினையின் உண்மையான பரிமாணத்தை உளவுத்துறை அடையாளம் கண்டிருக்கிறது. ஆளும் வர்க்கங்களின் நலனுக்காக இந்த நாட்டை பரிபாலனம் செய்பவர்கள் ஓட்டுக்கட்சிகள் அல்லர்; ஆளும் வர்க்க நலனுக்காகவே வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டிருக்கும் அரசு எந்திரம்தான் என்ற உண்மையை உளவுத்துறையின் இந்த அறிக்கையிலிருந்து மாணவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

பாசிச நடவடிக்கையான இந்தக் கண்காணிப்பை எதிர்க்க வேண்டும், முறியடிக்க வேண்டும் என்கிற அதே நேரத்தில், நாம் இந்த சூழ்நிலையை எதிர்கொண்டுதான் தீர வேண்டும். சுமுகமான அரசுப்பணி அல்லது உத்திரவாதமான வாழ்க்கை, அவற்றுக்கு குந்தகம் நேராத வண்ணம் மனச்சாட்சியின் ஆறுதலுக்காக சில போராட்டங்கள் என்ற மாய்மாலத்தைப் பேணிக்கொள்வதற்கு நடுத்தர வர்க்கம் விரும்பினாலும், அதனை அனுமதிக்க ஆளும் வர்க்கம் தயாராக இல்லை. இருக்கின்ற வாழ்க்கையையே பறித்து விரட்டும் நடவடிக்கை ஈழத்தில் மட்டுமின்றி உலகம் முழுவதும் நடந்து கொண்டிருக்கிறது.

உத்திரவாதமான வாழ்க்கை என்ற மாயைதான் துப்பாக்கியை விடவும் ஆபத்தான ஆயுதம். உயிரை மட்டுமின்றி மானத்தையும் பறிக்கும் ஆயுதம். அப்படியொரு வாழ்க்கையை, அரசு வேலைவாய்ப்பை இழந்து விடுவீர்கள் என்று மிரட்டுவதன் மூலம் போராட்டக் குணத்தின் மீது தண்ணீர் ஊற்றுகிறது உளவுத்துறை. அரசுப் பதவி என்பது ஆளும் வர்க்கத்துக்குச் செய்யும் ஊழியம். அங்கே மக்கள் விரோத நடவடிக்கைகள் மட்டுமே சாத்தியம். அத்தகைய பதவிகளைப் பெறுவதை வாழ்க்கை இலட்சியமாகக் கொண்டதனால்தான் ஓட்டுக்கட்சிகள் பிழைப்புவாதிகளாக இருக்கிறார்கள். மக்களின் கண்ணீரைத் தன் சொந்த ஆதாயத்துக்கு பயன்படுத்தும் இழிபிறவிகளாக இருக்கிறார்கள்.

நடைபெற்று வரும் இந்த மாணவர் போராட்டத்திலிருந்து மக்கள் விடுதலையை நோக்கமாகக் கொண்ட, போராட்ட குணம் கொண்ட ஒரு புதிய தலைமுறை உருவாக வேண்டும். உருவாக்குவோம்.

*உத்திரவாதமான வாழ்க்கை என்ற மாயைதான் துப்பாக்கியை விடவும் ஆபத்தான ஆயுதம். உயிரை மட்டுமின்றி மானத்தையும் பறிக்கும் ஆயுதம். அப்படியொரு வாழ்க்கையை, அரசு வேலைவாய்ப்பை இழந்து விடுவீர்கள் என்று மிரட்டுவதன் மூலம் போராட்டக் குணத்தின் மீது தண்ணீர் ஊற்றுகிறது உளவுத்துறை.*

# அன்னலட்சுமி – திருவோட்டுத் தமிழன்!

சென்னை நகரில் அம்மாவின் அரசு தற்போது ஐம்பதுக்கும் மேற்பட்ட மலிவு விலைச் சிற்றுண்டிக் கடைகளைத் திறந்திருக்கிறது. அடுத்த சில மாதங்களில் வார்டுக்கு ஒன்று என சென்னைக்குள் மட்டும் இரு நூறு கடைகள் திறக்கப்பட இருக்கின்றன. இந்தக் கடைகளில் காலை ஏழு மணி முதல் பத்து மணி வரை காலைச் சிற்றுண்டியாக இட்லியும், மதியம் பன்னிரெண்டு மணி முதல் மூன்று மணி வரை தயிர்ச் சோறும், சாம்பார் சாதமும் வழங்கப்படுகின்றன - முறையே ஒரு ரூபாய், மூன்று ரூபாய் மற்றும் ஐந்து ரூபாய் விலையில்.

எல்லா இடங்களிலும் காலை ஏழு மணிக்கே கூட்டம் அலைமோதுகின்றது. மக்கள் ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் நாணயங்களை உள்ளங்கைகளில் வைத்து உருட்டியபடியே நீண்ட வரிசையில் காத்துக் கொண்டிருக்கிறார்கள். சரியாக பத்து மணிக்கு உணவுச் சீட்டு வழங்கும் அறை மூடப்படுகிறது. அதே போல மதியம் மூன்று மணிக்கும் சடாரென்று கதவு சாத்தப்படுகின்றது. அதற்கு அடுத்த விநாடியே வந்தாலும் அவர்கள் துரதிர்ஷ்டசாலிகள் தான். இப்படிக் கடைசி நொடிகளில் ஏமாந்து திரும்புபவர்களே நூற்றுக்கணக்கில் இருக்கிறார்கள். கடை திறப்பதற்கு முன்னதாகக் காத்திருப்பவர்களும் கிட்டத்தட்ட இதே எண்ணிக்கையில் இருக்கிறார்கள்.

ஆட்டோ ஓட்டுநர்கள், இரவு நேரக் காவலர்கள், தச்சர்கள், பெயிண்டர்கள், கொத்தனார்கள், மூட்டை தூக்குபவர்கள், அலைந்து திரிந்து விற்பனை செய்பவர்கள், பல்வேறு கூலி வேலைகளுக்கு செல்பவர்கள் என்று உதிரி வேலை செய்பவர்கள் தான் இங்கு எழுபது சதவீதத்திற்கும் அதிகமாக வருகின்றனர். இவர்களைத் தவிர அரசுக் கல்லூரி மாணவர்கள், படித்து விட்டு வேலை தேடுபவர்கள், மாநகராட்சிப் பள்ளிச் சிறுவர்கள், கீழ் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த பெற்றோருடன் வரும் தனியார் பள்ளிகளில் படிக்கும் சிறுவர் சிறுமியர், சிறிய நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்கள், பெண்கள், உழைத்து நைந்து போன நடுத்தர வர்க்கம், கொஞ்சம் ஐ.டி. துறை ஊழியர்கள் என்று பல்வேறு தரப்பினரையும் இங்கு பார்க்க முடிகிறது.

கடந்த பத்தாண்டுகளில் தனியார்மய, தாராளமயக் கொள்கை பிரம்மாண்டமான அளவில் இந்திய கிராமங்களை நகர்ப்புறங்களுக்கு பெயர்த்தெடுத்திருக்கிறது. கிராம மக்களில் கணிசமான பகுதியினரை நகர்ப்புற வேலைகளைச் சார்ந்து வாழும்படி நிர்ப்பந்தித்திருக்கிறது. இவர்களின் உணவுத் தேவைகளுக்காக கடந்த 5,6 ஆண்டுகளில் மட்டும் பல்லாயிரக் கணக்கில் கையேந்தி பவன்கள் என்று அழைக்கப்படும் தள்ளுவண்டிக் கடைகள் நகரங்களில் பல்கிப் பெருகியுள்ளன.

சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னர் இத்தகைய சாலையோரத் தள்ளுவண்டிக் கடைகளில், கைகளில் தட்டை ஏந்தி நின்று சாப்பிடுபவர்கள் அடிப்படை உழைக்கும் வர்க்கத்தினராகத் தான் இருந்தனர். இன்றோ வளர்ச்சி, வல்லரசு ஆகியவற்றின் அடையாளமாகக் சித்தரிக்கப்படும் ஐ.டி துறை, பன்னாட்டு நிறுவனங்கள், விமானக் கம்பெனிகள் உள்ளிட்ட நிறுவனங்களில் வெள்ளைக் காலர் பணிகளில் அமர்ந்திருக்கின்ற, நாக்கில் ஆங்கிலம் புழங்குகின்ற இளைஞர்களும், பெண்களும் கையேந்தி பவன் இட்லிக்கு காத்திருப்பதை சென்னையில் மிகச் சாதாரணமாகக் காண முடிகிறது.

ஆங்கிலம் பேசினாலும், தமிழ் பேசினாலும், இந்தி பேசினாலும், டை கட்டியிருந்தாலும், லுங்கி கட்டியிருந்தாலும், கையில் கரண்டி பிடித்தாலும், மவுஸ் பிடித்தாலும், பேனா பிடித்தாலும், யாராயிருந்தாலும் அன்றாட சராசரி ஊதியம் ரூ.200 என்று உழைப்பின் சந்தை விலையை நிர்ணயித்திருக்கிறது மன்மோகன் சிங்கின் பொருளாதாரக் கொள்கை. சித்தாள் முதல் ஐ.டி துறை ஊழியர்கள் வரை மட்டுமின்றி, எம்.பி.பி.எஸ் முடித்த மருத்துவர்களுக்கும் கூட தனியார் மருத்துவமனைகள் வழங்கும் ஊதியம் கிட்டத்தட்ட இது தான்.

**‘அம்மா’ உணவகத்தில் தமிழர் கூட்டம்!**
**திருவோட்டுத் தமிழர்களை உருவாக்கிய அன்னலட்சுமி!**



விலைவாசி உயர்வு என்று கூறப்படுகின்ற முதலாளித்துவக் கொள்ளையும், தீவிரமடைந்து வரும் உழைப்புச் சுரண்டலும் உழைப்பாளிகளின் உண்மை ஊதியம் மற்றும் வாங்கும் சக்தியில் ஏற்படுத்தியிருக்கும் இந்த வீழ்ச்சியானது உட்கார்ந்து சாப்பிடுவதைக் கூட மக்களின் கைக்கு எட்டாத ஒரு ஆடம்பரமாக்கி விட்டது.

இத்தகைய கையேந்தி பவன்கள் பெருகியிருக்கும் அதே நேரத்தில் மெக் டொனால்ட்ஸ், கெ.எப்.சி கடைகளும், சைனிஸ்,மெக்சிகன், தாய் உணவு வகைகளுக்கான தனித்தனிக் கடைகளும், 30,40 வகை காப்பிகளை வழங்குகின்ற காபி பார்களும், சரவண பவன் போன்ற உயர்தர சைவ உணவகங்களும் இதே சென்னையில் பெருகியிருப்பதைப் பார்க்கிறோம். உணவுத் திருவிழாக்கள் நடக்கின்றன. சென்னையின் எந்தக் கடையில் என்ன உணவு சிறப்பு என்பதைப் பற்றி, 'நாவன்மை' கொண்ட வல்லுநர்கள் எச்சில் ஊற வைக்கும் எழுத்துகளை நாளேடுகளிலும், வார ஏடுகளிலும் துப்புகிறார்கள். மாதம் ஒரு நாளாவது இத்தகைய கடையொன்றில் அமர்ந்து சாப்பிடுவது மக்களின் வாழ்க்கை இலட்சியங்களில் ஒன்றாக வடிவெடுத்திருக்கிறது.

உணவு விடுதிகளில் சாப்பாடு மற்றும் சிற்றுண்டி உணவு வகைகளை ஒரு குறிப்பிட்ட விலைக்கு மேல், அடாத விலைக்கு விற்கக் கூடது என்ற கட்டுப்பாடு முன்னர் பெயரளவிலாவது இருந்தது. புதிய பொருளாதாரக் கொள்கையின் படி, இது சுதந்திரச் சந்தையில் தலையிடும் நடவடிக்கை. அதாவது ஒரு இட்லி 20 ரூபாய் என்ற விலைக்கு விற்று மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பை உயர்த்த ஒரு தொழிலதிபர் முயற்சிக்கும்போது, இட்லியின் அதிகபட்ச விலை 10 ரூபாய் என்று அரசு உச்சவரம்பு நிர்ணயிக்குமானால் அது நாட்டின் வளர்ச்சி வீதத்தைப் பாதியாக முடக்கும் பயங்கரவாத நடவடிக்கை ஆகி விடுகிறது.



மேலும் 20 அல்லது 30 ரூபாய் கொடுத்து உயர்தரமான இட்லியை வாங்கிச் சாப்பிடும் ஜனநாயக உரிமையை வசதியுள்ளவர்களிடமிருந்து பறிக்கின்ற அரசியல் சட்டத்துக்கு விரோதமான நடவடிக்கையாகவும் இது ஆகி விடுகின்றது. எனவேதான் 30 ரூபாய் இட்லி சாப்பிடுவோரின் உரிமையைப் பறிக்காமலேயே ஒரு ரூபாய் இட்லியையும் அறிமுகப்படுத்தியிருக்கிறார் அம்மா.

•••

'நாடு வல்லரசாகிறது' என்ற கூச்சல் எந்த அளவுக்கு எழுகிறதோ அதே அளவுக்கு சமூகத்தில் வர்க்கப் பிளவும் ஆழமாவதை தான் முப்பது ரூபாய் இட்லியும், ஒரு ரூபாய் இட்லியும் காட்டுகின்றன. கையேந்தி பவன்களிலேயே முந்தின நாள் வரை சாப்பிட்ட கடையை விட்டு அடுத்த, தரம் சற்றுக் குறைவானாலும் விலை குறைவான கடைக்கு நகரும் அளவுக்கு மக்களின் வாழ்க்கைத் தரம் வீழ்ச்சி அடைந்து வருகிறது. இந்த வீழ்ச்சியின் எல்லை தான் அம்மா தொடங்கியிருக்கும் ஒரு ரூபாய் இட்லி கடை.

முன்னர் எம்.ஜி. ஆரின் சத்துணவுத் திட்டம் தொடங்கியபோது, ''பெத்தவனால் பிள்ளைக்கு சோறு போட முடியாதா? இது மக்களை இழிவுபடுத்தும் செயல் அல்லவா? '' என்ற விமரிசனம் எழுந்தது.

ஆனால் மக்களின் வாங்கும் திறன் குறையக் குறைய, கையேந்துகின்ற நிலைக்கு மிகப் பெரும்பான்மையான மக்கள் தள்ளப்பட்டிருந்தனர். நாளடைவில் இதை மக்களும் அங்கீகரித்து எம்.ஜி.ஆரை ஏழைப் பங்காளன் ஆக்கினர். இந்த 'பொறுப்புமிக்க' செயலை உலக வங்கி உடனே பாராட்டியது. புரட்சித் தலைவர் மகனுக்கு உணவளித்தார், புரட்சித் தலைவியோ தந்தைக்கும் உண்டியளிக்கும் உயர்ந்த நிலைக்குச் சென்றிருக்கிறார்.

ஆடு, மாடுகளுக்கும், முதுமலையில் யானைகளுக்கும் உணவிடும் அம்மாவின் 'கருணை' உள்ளம் அதே வகையில் மனிதர்களுக்கும் உணவிடுவது, அம்மாவை உயர்த்துகிறதா? மனிதர்களைத் தாழ்த்துகிறதா? பெரும்பான்மையான மக்களால் இது அம்மாவின் கருணை என்றே அங்கீகரிக்கப்படுகிறது.

இறந்த பின் சொர்க்கம் செல்ல விரும்பிய செல்வந்தர்கள், பட்டினி

யில் வாடிய ஏழை மக்களுக்கு சோறிடுவதற்காக சோழ வள நாட்டில் அறக்கூழ்ச் சாலைகள் அமைத்திருந்ததை பட்டினப்பாலை குறிப்பிடுகின்றது. ஆயிரம் ஆண்டுகள் கடந்த பின்னரும் நிலைமை மாறி விடவில்லை. அன்று ஆற்றுப்படை பாடிய பாணர்களைப் போல, ஒரு ரூபாய் இட்லிக்கு வரிசையில் நிற்பவர்கள் அம்மாவின் கருணையைப் போற்றுகிறார்கள்.

இது மனிதர்களுக்குரிய நிலை அல்ல; எதுவுமற்ற நிலைக்குத் தள்ளப்பட்ட மனிதர்களை நடைப் பிணங்களாகப் பராமரிக்கும் நிலை. இது வாழ்வதற்குரிய ஏற்பாடல்ல; உடலில் உயிர் ஒட்டிக் கொண்டிருப்பதற்கான ஏற்பாடு. இது கோசாலைகளில் மாட்டைக் கட்டி தீனி போடுவதைப் போன்ற விலங்கு நிலைக்கு மக்களைத் தாழ்த்துவது.

அரசின் இது போன்ற 'மனிதாபிமான' நடவடிக்கைகளை ஏழைகள் மீதான அக்கறை, இரக்கத்தால் செய்யப்படுகிறது என்று மக்கள் அறியாமையால் கருதுகிறார்கள். மக்கள் அவ்வாறு கருதுவதாலேயே இவையெல்லாம் மனிதாபிமானச் செயல்களாகி விடாது. சோறு போடுவது மனிதாபிமான நடவடிக்கை என்றால், குடிநீர் கேட்டு போராடும் போது எலும்பை முறிப்பது என்ன வகையான நடவடிக்கை ?

இலவச அரிசியோ, ஒரு ரூபாய் இட்லியோ இவையனைத்துமே மக்களின் கோபம் எல்லை மீறாமல் இருப்பதற்காக வீசப்படும் எலும்புத் துண்டுகள், கொந்தளித்து விடாமல் தடுப்பதற்கான வடிகால்கள், உரிமைகளைக் கேட்கும் மனித நிலைக்கு உயர்ந்து விடாமல் இருத்தி வைக்கும் தடைகள்.

நிதி மூலதனக் கும்பல்களால் பொருளாதார திவால் நிலைக்கு ஆளாக்கப்பட்ட கிரீஸ், ஸ்பெயின் போன்ற நாடுகளில், பொருளாதாரத்தை தூக்கி நிறுத்தும் சிக்கன நடவடிக்கைகள் என்ற பெயரில் மக்களின் ஓய்வூதியத் தொகை வெட்டப்பட்டது; சுரங்கத் தொழிலாளர்கள் ஆயிரக்கணக்கில் வேலை நீக்கம் செய்யப்பட்டு சுரங்கங்கள் தனி உடைமை ஆக்கப்பட்டன. ஊதியங்கள் குறைக்கப்பட்டன. கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட அனைத்துக்குமான மானியங்கள் வெட்டப்பட்டன.

இந்த நடவடிக்கைகள் தோற்றுவித்த கோபம் எரிமலையாய் வெடித்து கிரீஸ் எங்கும் தீப்பிழம்பாய் ஓடியது.

*இத்தகைய கையேந்தி பவன்கள் பெருகியிருக்கும் அதே நேரத்தில் மெக்டொனால்ட்ஸ், கெ.எப்.சி கடைகளும், சைனிஸ், மெக்சிகன், தாய் உணவு வகைகளுக்கான தனித்தனிக் கடைகளும், 30,40 வகை காப்பிகளை வழங்குகின்ற காபி பார்களும், சரவண பவன் போன்ற உயர்தர சைவ உணவகங்களும் இதே சென்னையில் பெருகியிருப்பதைப் பார்க்கிறோம்.*

இருப்பினும் அரசும், ஆளும் வர்க்கமும் பின்வாங்கவில்லை. தாங்கள் திட்டமிட்டிருந்த சிக்கன நடவடிக்கைகள் அனைத்தையும் அமல்படுத்தினார்கள். மக்கள் போராட்டங்களை ஒடுக்கினார்கள்.

இப்போது முற்றிலுமாக வாங்கும் சக்தி இழந்து பட்டினிச் சாவை நோக்கித் தள்ளப்படும் மக்களுக்கு இலவச ரொட்டித் துண்டுகளும், காய்கறிகளும் வழங்குகிறார்கள். ஜெயலலிதாவின் மலிவு விலைச் சிற்றுண்டி ரகம் தான். இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் இங்கே விலை, அங்கே இலவசம்.

ஜெயலலிதா இப்படி ஒரு கடையைத் திறந்த மறுகணமே ஆயிரக்கணக்கான மக்கள் ஏன் கூடுகிறார்கள் என்பது புரிந்து கொள்ள முடியாததல்ல. மக்களின் வாழ்நிலையில் ஏற்பட்டு வரும் இந்த வீழ்ச்சியைப் புரிந்து கொண்டுதான் ஜெ. அரசு இந்த சிற்றுண்டிச் சாலைத் திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறது.

ஆளும் வர்க்கங்கள் எதிர்பார்க்கும் சமூக அமைதி நாளுக்கு நாள் குலைந்து வருகின்றது. உடமையை இழந்த, ஓட்டாண்டி நிலையிலுள்ள, வாங்கும் சக்தியற்ற வர்க்கங்களின் அதிருப்தியை, கலக உணர்வை, கொந்தளிப்பை மட்டுப்படுத்தும் வடிகால்களாகவே இத்தகைய இலவசத் திட்டங்களும், மலிவு விலை சிற்றுண்டி சாலைகளும் பயன்படுகின்றன. இதனை மக்களை மயக்கத்தில் ஆழ்த்தும் இன்னொரு டாஸ்மாக் என்றும் சொல்லலாம்.

தனது குடும்பத்தினரின் பசியைப் போக்குவதற்கு, வறுமையின் காரணமாக வேறு வழியில்லாமல் குப்பைக் கீரையைக் கொணர்ந்து, அதில் உப்புப் போட்டு வேக வைப்பதற்குக் கூட வழியில்லாத காரணத்தினால் வெறுமனே வேக வைத்து உணவு தயாரிக்கும் பெண்ணைப் பற்றி சிறு பாணாற்றுப் படை கூறுகிறது. அது மட்டுமல்ல, தனது குடும்ப வறுமை வெளியே தெரிந்தால் கேலி செய்வார்களே என்று கூச்சப்பட்டுக் கொண்டு கதவையும் தாளிட்டுக் கொள்கிறாள் அந்தப் பெண் என்கிறது சிறுபாணாற்றுப் படை. இது சங்க இலக்கியம்.

பல நூற்றாண்டுகள் தாண்டி இன்று நவீன தொழில் வளர்ச்சியும், உற்பத்தியும் பெருகியிருக்கும் சூழலில், ஒரு ரூபாய் இட்லிக்காக 'அன்ன இலட்சுமித் தாயே' என்று திருவோட்டைக் கையிலேந்தி குரல் கொடுக்கிறது தமிழகம்.

**• வையவன்**

*ஆளும் வர்க்கங்கள் எதிர்பார்க்கும் சமூக அமைதி நாளுக்கு நாள் குலைந்து வருகின்றது. உடமையை இழந்த, ஓட்டாண்டி நிலையிலுள்ள, வாங்கும் சக்தியற்ற வர்க்கங்களின் அதிருப்தியை, கலக உணர்வை, கொந்தளிப்பை மட்டுப்படுத்தும் வடிகால்களாகவே இத்தகைய இலவசத் திட்டங்களும், மலிவு விலை சிற்றுண்டி சாலைகளும் பயன்படுகின்றன.*

# கும்பமேளா: இந்தியாவின் புனிதமா, அழுக்கா?

**வ**ட இந்தியாவைப் போல தமிழகத்தில் கும்பமேளா குறித்து அத்தனை ஆர்வம் இருப்பதில்லை. ஒரு வேளை குடந்தை குளத்தில் அம்மா கைங்கைரியத்தில் சில பல தமிழர்கள் முக்தி அடைந்ததின் கசப்பான நினைவுகள் தமிழ் மக்களைக் கிலியடைச் செய்திருக்குமோ என்னவோ தெரியவில்லை.

அலகாபாத், நாசிக், உஜ்ஜையினி, ஹரித்துவார் என நான்கு நகரங்களிலும் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்த கும்பமேளா நடக்கிறது. கும்பமேளா தோன்றிய புராணக்கதையே நம்மூர் எச்சிக்கலை கதைகளை விஞ்சி விடும் தரம் கொண்டது.

தன்னை மதிக்காத இந்திரனைக் கண்டு கோபமடையும் துர்வாசர் அவனைப் 'பிச்சைக்காரனாக ஒழிந்து போ' என்று சாபம் கொடுக்கிறார். இதனால் இந்திரன் மட்டுமல்ல, தேவர்கள் அத்தனை பேரும் தங்களது சுகமான தேவலோக வாழ்க்கையை இழந்தனர். அது என்ன சுகபோகம்? ரம்பா, ஊர்வசி, மேனகைகளால் ஆடப்படும் இந்திரலோகத்து குத்தாட்டங்களை இனி பார்த்து மகிழ முடியாது.

இதனால் அசுரர்கள் கை ஓங்கியதாம். இதனால் கலங்கிய தேவர்கள் பிரம்மா தலைமையில் வந்து சிவனிடம் புகார் கொடுத்தார்களாம். அவர் கொடுத்த ஆலோசனையின் படி விஷ்ணுவிடம் வழி கேட்க, அவரோ பாற்கடலை கடைந்து அமுதத்தை எடுத்து அருந்தினால் இழந்த சுகபோக வாழ்க்கை, பலம் அனைத்தும் மீண்டும் கிடைக்கும் என்றாராம்.

ஆனால் அமுதத்தை தனியாகக் கடைந்து எடுக்க முடியாது என்பதால் அசுரர்களையும் துணைக்கழைத்துக் கொண்டு தேவர்கள் பாற்கடலைக் கடைய, இறுதியில் தன்வந்திரி அமுதக் கலசத்துடன் தோன்றுகிறார். கடைவதற்கு துணை நின்ற அசுரர்களுக்கு பாதிப் பங்கை கொடுக்காமல் ஏமாற்றுகிறார்கள் தேவர்கள். இதற்காகவே விஷ்ணு மோகினி அவதாரம் எடுத்து அமுதக் குண்டானை எடுத்துக் கொண்டு ஓடுகிறார். அசுரர்கள் துரத்துகிறார்கள். இந்த ஓட்டம் தேவலோக கணக்குப்படி 12 நாளுக்கு நடந்ததாம். நமது கணக்கின் படி 12 ஆண்டுகளாம். இந்த 'சேசிங்கில்' அமுதக் குண்டானிலிருந்து நான்கு துளிகள் மேற்படி கும்பமேளா இடங்களில் விழுந்ததாம். இதனால் அந்த தலங்கள் புனிதமடைந்து, அமுதத் துளி விழுந்த தினத்தில் கும்பமேளா நடக்கிறதாம்.

அமுதத் துளி விழுந்த நீர்நிலைகளில் நீராடினால் சகல பாவங்களும் நீங்கி, முக்தி அடையப் பெறுவார்களாம். ஆக சிந்திய நான்கு துளிகளுக்கு இப்படி ஒரு நிகழ்வை நடத்தி, அதையும் உலகில் அதிகம் மக்கள் ஒன்று கூடும் மதத் திருவிழா என்று வேறு பெருமை பேசித் திரிகிறார்கள். அந்த அமுதத்தின் பிறப்பே ஒரு மோசடியில் குடி கொண்டிருக்கிறது எனும் போது அதன் எச்சில் துளிகள் எப்படி பாவத்தைப் போக்கும்?

மூன்று கோடி மக்கள் நீராடினார்கள், அரசு ஆயிரம் கோடி செலவழித்தது, வர்த்தக முதலாளிகள் பத்தாயிரம் கோடிகளை அள்ளினார்கள் என்று கும்பமேளாவின் கணக்குகள் எல்லாம் கோடிகளில் தான். கூடவே அலகாபாத் ரெயில் நிலைய நெரிசலில் முப்பது, நாற்பது பேர் இறந்து போயிருக்கின்றனர் என்ற கணக்கும் உண்டு. மதக் கூடல் நடக்கும் மெக்காவோ, இல்லை கங்கையோ எங்கும் இத்தகைய பலிகளை ஆண்டுதோறும் பார்க்கிறோம்.

*அலகாபாத் நகர கங்கையில் குளித்தால் ஏழு பிறவிகளில் செய்த பாவங்கள் விலகி, பிறப்பில்லா முக்தி நிலை கைவரப் பெறுமாம். இந்தக் குறுக்கு வழி முக்தியில் பெரிய அளவு சிரமப்படத் தேவையில்லை என்பதால் வட இந்தியாவில் இருக்கும் எல்லா வகை சாமியார்களும் கும்பமேளாவில் ஆஜராகிறார்கள்.*


அலகாபாத் நகர கங்கையில் குளித்தால் ஏழு பிறவிகளில் செய்த பாவங்கள் விலகி, பிறப்பில்லா முக்தி நிலை கைவரப் பெறுமாம். இந்தக் குறுக்கு வழி முக்தியில் பெரிய அளவு சிரமப்படத் தேவையில்லை என்பதால் வட இந்தியாவில் இருக்கும் எல்லா வகை சாமியார்களும் கும்பமேளாவில் ஆஜராகிறார்கள். பாவத்தையே தொழிலாகக் கொண்ட நித்தியானந்தா, ஜெயேந்திரன் போன்ற தென்னிந்திய மோசடி சாமியார்களும் கூட கும்பமேளாவில் குளிக்கிறார்கள். பாவம் கங்கை!


வாழ்நாள் முழுக்க மௌன விரதம் இருக்கும் பரிவாஜக சாமியார்கள் தங்கள் வருகையை மணி அடித்துத் தெரிவிப்பார்களாம். தங்களது உடலை வருத்தி முக்தியடையலாம் எனும் ஊர்த்துக வாஹூரெ சாமியார்கள், தலைகீழாக தவம் செய்யும் சிரசாசன சாமியார்கள், திசைகளை ஆடையாகத் தரித்த திகம்பர சாமியார்கள், நிர்வாணிகள், அப்புறம் நிர்வாண நாகா சாமியார்கள் என்று கும்பமேளாவின் கவர்ச்சியே இத்தகைய வேடிக்கை சாமியார்கள் தான்.

இவர்கள் அனைவரும் பிரம்ம முகூர்த்தமான அதிகாலையில் கங்கையில் குளிப்பார்களாம். இவர்களை பார்ப்பதற்கென்றே பெரும் கூட்டம் கும்பமேளாவிற்கு வருகிறது. விளம்பர நடிகை பூனம் பாண்டே கூட இந்த ஆண்டு கும்பமேளா சென்று குளித்து, சாமியார்களின் ஆசிகளை வாங்கியிருக்கிறாராம். இருவரது தொழிலிலும் உடை குறைவு என்பது ஒரு ஒற்றுமை.

வண்டலூர் உயிரியில் பூங்கா போல தினுசு தினுசான இந்த சாமியார்களுக்கும் ஒரு மிருகக் காட்சி சாலை திறந்தால் நாட்டு மக்கள் அனைவரும் ஒரே இடத்தில் இந்த ஜந்துக்களைப் பார்க்கலாம். நிர்வாண சாமியார்கள் பணம் கொடுத்தால் ஆசிர்வாதம் மட்டுமல்ல, காமராவுக்கு போசே கொடுப்பார்களாம். இவர்களில் சிலர் பைக்கெல்லாம் வைத்து ஓட்டுகிறார்கள். சமயங்களில் நவநாகரிக ஆடைகளும் அணிகிறார்கள். காமரவாவைத் திறந்தால் உடன் ஆடைகளைக் களைந்து கொண்டு ரெடியாகிறார்கள்.














கஞ்சா முதலான போதைப் பொருட்கள், மக்கள் கொடுக்கும் பணம் என்று சாமியார்களின் வாழ்க்கை பேஷாகவே கழிகிறது. அரசர்களைப் போல அலங்காரத்துடன் ருத்திராட்சக் கொட்டை, காவிப் பட்டையுடன் வலம் வரும் சாமியார்களும் இங்கு உண்டு. இவர்கள் கார்ப்பரேட் சாமியார்கள் போல பரிவாரங்களுடன் வருவார்கள். அடுத்து கும்பமேளாவின் விசித்திரக் காட்சிகளை பார்ப்பதற்கென்றே வெளிநாட்டாரும் கணிசமாக வருகின்றனர். அவர்களில் சிலர் 'இந்தியாவில் ஏதோ ஆன்மீக மர்மம் குடிகொண்டிருக்கிறது, அதைக் கண்டு கொண்டால் நிம்மதி' என்ற அறியாமையிலும் வருகிறார்கள்.

இருப்பினும் இந்தியா பாம்பாட்டிகளின் தேசம் என்று வெளிநாட்டவர்களால் கேலி செய்யப்படுகிறது என்று சங்க பரிவார பக்தர்கள் சினமுறுவார்கள். ஆனால் அந்தக் கேலி போதாது என்பதைத்தானே கும்பமேளா காட்டுகிறது?

● **வேல்ராசன்**

# சொல்வதெல்லாம் பொய்! செய்வதெல்லாம் ஃபிராடு!!

'சொல்வதெல்லாம் உண்மை' - இந்தப் பெயரில் ஜீ (Zee) தமிழ் தொலைக்காட்சியில் ஒரு நிகழ்ச்சி ஒளி பரப்பாகிக் கொண்டிருக்கிறது.. தமிழ் நாட்டின் பல வீடுகளில் இரவு நேரங் களை ஆக்கிரமிக்கத் தொடங்கியிருக் கும் இந்த நிகழ்ச்சியின் உள்ளடக்கம் ஒன்றும் புதியது அல்ல.. ஏற்கெனவே விஜய் டி. வி. யில் 'கதையல்ல நிஜம்' என்ற பெயரில் நடிகை லஷ்மி தொகுத்து வழங்கிய அதே அக்கப் போர்தான்.. அன்றாட குடும்பப் பிரச்சி னைகளில், உறவுச் சிக்கல்களில் சிக்கி, மீள வழியின்றி விழி பிதுங்கி நிற்கும் மக்களை ஸ்டுடியோவுக்கு அழைத்து வந்து ஒளி வெள்ளத்தில் கேமராவின் முன்பு நியாயம் கேட்டுக் குமுற வைக் கும் அதே பழைய மசாலா.. கண்ணீர், கோபம், ஆவேசம், அடிதடி எல்லாம் இதிலும் உண்டு.. விஜய் தொலைக்காட் சியில் லஷ்மி செய்த வேலையை ஜீ (Zee) தமிழில் இப்போது நடிகை லஷ்மி ராமகிருஷ்ணன் செய்து வருகி றார் (முன்பு நிர்மலா பெரியசாமி செய் தார்). தாங்க முடியாத அருவருப்பும், ஏழை மக்களின் அந்தரங்க வாழ்க் கையை அம்பலமேற்றி காசு பண்ணும் வக்கிரமும் நிறைந்த இந்த நிகழ்ச்சி சமூக உளவியலில் பாரதூரமான விளை வுகளை உண்டு பண்ணக் கூடியது.

அடுத்தவர்களின் அந்தரங்கத்தைத் தெரிந்துகொள்ளத் துடிக்கும் மனித மனதின் வக்கிரத்தை வளர்த்தெடுப்பது தான் இதன் முதல் அபாயம். அரசல் புர சலாகவும், தாங்கள் ஒரு தவறிழைக்கி றோம் என்ற குற்றவுணர்வுடனும் புறணி பேசும் மக்களை, அந்த மனத் தயக்கத்தில் இருந்து இந்த நிகழ்ச்சி விடு விக்கிறது. கள்ள உறவுகள், விடலை களின் காதல் பஞ்சாயத்துகள், குடும்பச் சிக்கல்கள்... இவற்றைத் தொடர்ந்து பார்க்கும் மக்களின் மனம் 'தான் மட்டும் தவறிழைக்கவில்லை; ஊரே இப்படித் தான் இருக்கிறது' என எண்ணுகிறது.

'வீட்டுக்கு வீடு வாசல்படி' என இதை எடுத்துக்கொள்வது ஒரு வகை.. மாறாக, தொடர்ந்து இந்த நிகழ்ச்சி யைப் பார்க்கும் மக்களின் மனம் தன் கணவனை, தன் மனைவியை, உறவு களை, சுற்றங்களைச் சந்தேகிக்கிறது. புதிய குடும்பச் சிக்கல்களை உருவாக் குகிறது. இந்த இரண்டு வகைகளையும் தாண்டி, 'எல்லாரும் செய்யுறான்.. நாமளும் செய்வோம்' என எண்ண வைத்து ஒழுக்கக்கேட்டுக்கு ஓபன் பாஸ் கொடுக்கிறது.

முதலில் சொல்வதெல்லாம் உண்மை நிகழ்ச்சிக்கு வரும் பங்கேற் பாளர்கள் யார்? பார்வையாளர்கள் யார்? தங்கள் சொந்தக் குடும்பப் பிரச் னையைப் பொதுவில் வைத்துப் பேசத் தயங்காத உழைக்கும் வர்க்கத்து ஆண் களும், பெண்களும்தான் இந்த நிகழ்ச் சியின் பங்கேற்பாளர்கள்.. போலி கவுர வத்தை காப்பாற்றுவதையே வாழ்நாள் லட்சியமாகக் கொண்ட நடுத்தர வர்க் கத்தினர் இதன் பார்வையாளர்கள்.. தங் கள் வீட்டின் ரகசியங்கள் வாசல் வரை யிலும் கூட சென்று விடக் கூடாது என அப்பார்ட்மெண்டின் கதவுகளை இறுக மூடிக் கொண்டு முடைநாற்றத்தை அடைத்துக் கொள்ளும் நடுத்தர வர்க் கத்தினர், ஏழைகளின் வாழ்க்கைச் சிக் கல்களை இரவு நேரப் பொழுதுபோக் காக ரசித்துப் பார்க்கிறார்கள்.

இந்த நிகழ்ச்சியில் தீர்ப்பு வழங் கிய; வழங்கும் லஷ்மி, நிர்மலா பெரி யசாமி, லஷ்மி ராமகிருஷ்ணன் போன் றோர் இந்த இரண்டு வர்க்கங்களை சேர்ந்தவர்களும் அல்ல, அவர்கள் அசல் மேட்டுக்குடிகள். ஏழைகளின் வாழ்க்கைச் சிக்கல்களை அனுபவத் தில் அல்ல, கேள்வி ஞானத்தில் கூட அறிந்துகொள்ள விரும்பாத இவர்கள் தான் ஏழைக் குடும்பங்களின் பிரச் சினைகளுக்குத் தீர்ப்பு எழுதுகிறார்கள். அதுவும் அலசி ஆராய்ந்து அளிக்கப் படும் அறிவார்ந்த தீர்ப்பு அல்ல. ஏற்கெ னவே நிலவும் ஆணாதிக்க மதிப்பீடு களை அப்படியே ஏற்றுக் கொண்டு அதன் அடிப்படையிலேயே பேசுகின்ற னர்.

ஏழைகளின் பிரச்னைகளை நடுத் தர வர்க்கம் பார்த்து ரசிக்க, மேட்டுக்கு டிகள் தொகுத்து வழங்க, முதலாளிகள் கல்லா கட்டும் இந்த நிகழ்ச்சியில் இது வரை ஒரே ஒரு பணக்காரக் குடும்பம் கூட கலந்து கொண்டது இல்லை.

ஆனால் தங்கள் சொந்தப் பிரச்சி னைகளை கேமராவின் முன்பு மக்கள் எப்படி கூச்சமின்றிப் பேசுகின்றனர்? நீங்களும், நானும் பேசுவோமா? ஆனால் இவர்கள் பேசுகிறார்களே, எப்படி? ''அவங்க காசு வாங்கியிருப் பாங்க'' என்றோ, ''எல்லாம் செட்- அப்'' என்றோ பார்ப்பவர்கள் நினைக் கிறார்கள். இதற்கு விடை காண 'சொல் வதெல்லாம் உண்மை' எப்படி உருவா கிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

சமாதானம், சண்டை, பேச்சு வார்த்தை, போலீஸ் புகார் எனப் பல வழிகளிலும் தங்கள் குடும்பச் சிக்கல் களுக்கு தீர்வு தேடி முயற்சித்து, எதிலும் தீர்வு கிடைக்காமல் உச்சக்கட்ட வெறுப் பில் இருக்கும் மக்கள்தான் இவர்களின் இலக்கு. 'ஏதேனும் ஒரு வழியில் பிரச்சினை தீராதா?' என ஏங்கிக் கிடப் பவர்களை அணுகி, 'உங்களுக்காக

> *ஏழைகளின் பிரச்னைகளை நடுத்தர வர்க்கம் பார்த்து ரசிக்க, மேட்டுக்குடிகள் தொகுத்து வழங்க, முதலாளிகள் கல்லா கட்டும் இந்த நிகழ்ச்சியில் இதுவரை ஒரே ஒரு பணக்காரக் குடும்பம் கூட கலந்து கொண்டது இல்லை.*

நாங்கள் இருக்கிறோம்' என ஆசை காட்டி அழைத்து வருகிறார்கள்.

ஒவ்வொரு நாளும் செய்தித்தாள்களைத் திறந்து, தங்களுக்கு டி.ஆர்.பி. தரக் கூடிய செய்திகளைக் கண்டறிவது தான் இவர்களின் அதிகபட்ச ஆய்வுப் பணி. அடுத்த கட்டமாக அந்தந்த ஊரில் இருக்கும் அவர்களின் நிருபர், சம்பந்தப்பட்ட குடும்பத்தினரைச் சந்தித்து தேன் ஒழுகப் பேசுவார். மனைவியை மடக்கி விட்டால் போதும், கணவனை அழைத்து வருவது எளிது.

''உங்கள் மனைவி எங்கள் நிகழ்ச்சிக்கு வருகிறார், அவர் உங்களைப் பற்றி இப்படி எல்லாம் பேசுகிறார். நீங்கள் வந்து உங்கள் தரப்பு நியாயத்தை சொல்லவில்லை எனில் அவர் சொல்வது மட்டும்தான் வெளியே வரும். டி.வி. பார்ப்பவர்களுக்கு அது தான் நியாயம் என்று தோன்றும்'' என்று தர்க்கப்பூர்வமாக மடக்குவார்கள்.

''எங்கள் நிகழ்ச்சியில் வந்து பேசி விட்டால் உங்களுக்கு நீதி கிடைத்து விடும். அதற்கு நாங்கள் உத்தரவாதம்'' என்று ஆசை காட்டுவார்கள்.

'படித்தவர்கள் ஏமாற்ற மாட்டார்கள்' என்று நம்பி வரும் ஏழைகளைத் திட்டமிட்டு உணர்ச்சிவசப்படச் செய்து, அறிவின் தந்திரத்தால் அழ வைத்து அனைத்தையும் படம் பிடிப்பார்கள். நிகழ்ச்சியின் படப்பிடிப்பு இடைவேளையில், பங்கேற்பாளர்களின் நடவடிக்கை பகுப்பாய்வு செய்யப்பட்டு, நிகழ்ச்சித் தயாரிப்புக் குழுவினரால் உளவியல் உத்திகள் வகுக்கப்படும்.

குறைந்தபட்சம் கண்ணீர், அதிகபட்சம் அடிதடி... எதுவும் சிக்கவில்லையா? ஒரு சென்டிமெண்ட் டிராமாவுக்கு உத்திரவாதம் கிடைத்து விட்டால் தயாரிப்புக் குழுவுக்கு நிம்மதி. அதன் பிறகு அந்தக் குடும்பம் சேர்ந்ததா, பிரிந்ததா, நடுத்தெருவில் நிற்கிறதா என்பதைப் பற்றி இவர்களுக்கு எந்த அக்கறையும் இல்லை.

பொதுவாக உங்கள் வீட்டில் யாராவது அடித்துக் கொண்டால் என்ன செய்வீர்கள்? உடனே ஓடிச் சென்று விலக்குவீர்கள். அதையும் மீறி சண்டை நடந்தாலும் 'நான்கு பேருக்குத் தெரிந்தால் அவமானம்' என்று கண்டிப்பீர்கள். இது மனிதர்களின் பொதுப்பண்பு. ஆனால் இவர்களைப் பொறுத்தவரை நிகழ்ச்சிக்கு வருபவர்கள் அடித்துக் கொண்டால் உற்சாகம் அடைகிறார்கள். முடிந்தவரை அதை உசுப்பேற்றி அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்கிறார்கள். ஏதேனும் ஒரு வகையில் பிரச்னையை தீர்த்துக் கொள்ளலாம் என நம்பி வருபவர்கள் நிகழ்ச்சி முடியும் போது பெருத்த ஏமாற்றத்துக்கு உள்ளாகின்றனர்.

இங்கு வருவதால் பிரச்சினை தீர்வதில்லை; அதிகமாகிறது என்பதை அவர்கள் உணரும்போது நிலைமை கைமீறிச் சென்று விடுகிறது. கொட்டிய வார்த்தைகளும், அழுத கண்ணீரும் நாளை தொலைக்காட்சியில் வரப்போகிறது என்ற எண்ணமே அவர்களை அச்சுறுத்துகிறது. தாங்கள் ஒரு சூழ்ச்சி வலையில் சிக்கியதைப் போல உணர்கிறார்கள்.




**மேட்டுக்குடி நிர்மலா பெரியசாமி ஏழைகளின் கதைகளை விற்கிறார்!**

''சார், டி.வி.ல போட்றாதீங்க சார். பேசுன வரைக்கும் பேசுனதா இருக்கட்டும். இப்படியே விட்ருங்க சார்'' என்று கெஞ்சிக் கதறினால் அதையும் படம் பிடிப்பார்களே தவிர நீதி கிடைக்காது.. மாறாக நிகழ்ச்சிக்கு அழைத்து வரும் வரை கருணை முகம் காட்டியவர்களின் உண்மை முகம் அப்போதுதான் வெளியே வரும்.. இதுதான் 'தி மேக்கிங் ஆஃப் சொல்வதெல்லாம் உண்மை'..

### இவர்கள் சொல்வது எல்லாம் உண்மையா?

பஞ்சாயத்துக்கு வருகின்ற பிரச்சினைகள் ஒரே விதமாக இருந்தபோதும், பார்வையாளர்களைப் பார்க்க வைப்பது எப்படி என்பதே இவர்களது பிரச்சினை. எனவே தனியே அழைத்துப் போய் உசுப்பேற்றி விடுவதும், மோதலை உருவாக்குவதும் இத்தகைய நிகழ்ச்சிகளில் சர்வ சாதாரணமானது. இதை கேமராவுக்குப் பின்னே சென்று தெரிந்துகொள்ள வேண்டும் என்பதில்லை. நிகழ்ச்சியிலேயேப் பார்க்க முடியும்.

சமீபத்தில் ஒரு விடலைப் பையனும், பெண்ணும் காதல் பஞ்சாயத்துக்கு வந்திருந்தனர். பெண்ணின் அம்மா எதிரே அமர்ந்திருக்கிறார். தன் அம்மா ஒரு விபச்சாரி என்று பட்டவர்த்தனமாக அந்தப் பெண் குற்றம் சாட்டுகிறார். உடனே நிகழ்ச்சியை நடத்தும் லஷ்மி ராமகிருஷ்ணன், ''இந்தப் பொண்ணு சொல்றது பொய்யா இருந்தா இந்நேரத்துக்கு எழுந்து அடிச்சிருப்பீங்க'' என அந்தப் பெண்ணின் அம்மாவை உசுப்பேற்றி விடுகிறார். சற்று நேரத்தில் அந்த அம்மா, செருப்பைக் கழற்றி மகளை அடிக்கிறார். அனைத்தும் ஒளிபரப்பப் படுகிறது. இனி சாகும் வரையிலும் அந்த அம்மாவும், மகளும் சேரப் போவது இல்லை.

இத்தகைய நிகழ்ச்சிகளில் பங்கெடுப்பவர்களின் வாழ்க்கைச் சிக்கல்கள், டி.வி-யில் ஒளிபரப்பான பிறகு என்ன வாகிறது என்பதை யாரும் பேசுவதில்லை. என்.டி.டி.வி-ல் 'ராக்கி கா இன்சாப்' என்ற பெயரில் இந்தி நடிகை ராக்கி சாவந்த் நடத்திய நிகழ்ச்சியில் ஒரு பெண், தன் கணவனை ஆண்மையற்றவன் என்று கூறியதால் பிறகு




**‘சொல்வதெல்லாம் உண்மையில்’ கலந்து கொண்ட ஒரு பெண்!**
**ஜீ டி.வி.யின் விற்பனைப் பொருள்.**

அவன் தற்கொலை செய்து கொண்டான். இதுபோன்ற உதாரணங்கள் ஏராளம்.

இன்னொரு பக்கம் இந்த மேட்டுக்குடி பாப்பாத்திகள் நடத்தும் பஞ்சாயத்தின் மூலமாக, சாதாரண மக்கள் நெறி கெட்டவர்கள் போலவும், நாட்டாமை செய்யும் வர்க்கத்தினர் பெரிய ஒழுக்க சீலர்கள் போலவும் ஒரு தோற்றம் ஏற்படுத்தப்படுகிறது. இதில் பார்வையாளர்கள் நீதிபதிகளாகச் செயல்படுகின்றனர். அதனால்தான் பல வீடுகளில் ‘சொல்வதெல்லாம் உண்மை’ நிகழ்ச்சி ஒளிபரப்பாகும்போது, அதில் கலந்து கொள்ளும் மனிதர்களுடன் மக்கள் தங்களை ஐக்கியப்படுத்திக் கொள்கின்றனர். ‘அவன் மேலதான் தப்பு’ என்றோ, ‘ஐயோ பாவம் இந்தப் பொண்ணு’ என்றோ திரையில் விரியும் காட்சிகளுக்காக உண்மையாகவே மனம் இரங்குகின்றனர். கற்பனைக் கதைகளே பார்வையாளர்களின் கருத்தையும், கண்ணோட்டத்தையும் பாதிக்கும் என்னும் போது ரியாலிட்டி ஷோக்கள் பற்றிச் சொல்லத் தேவையில்லை.

சித்தரிக்கப்பட்ட டி.வி. சீரியல் பாத்திரங்களுக்காகப் பாவப்படும் மக்களின் மனம், அதை விடக் கூடுதலாக இந்த நிகழ்ச்சிகளோடு தன்னை இணைத்துக் கொள்கிறது. காரணம், சீரியல்களில் குடும்பத்தில் சண்டை நடக்கும். இதில் குடும்பமே நேரடியாக வந்து சண்டை போடுகிறது.

தன் கண்ணீரையும், இரக்கத்தையும், ரசனையையும் கோரும் ஒரு கதை, கற்பனையாய் இருப்பதை விட உண்மையாய் இருப்பது பார்வையாளனின் ஈகோவை கூடுதலாகத் திருப்திப்படுத்துகிறது. சொல்வதெல்லாம் உண்மை மட்டுமல்ல, மானாட மயிலாட, சூப்பர் சிங்கர், உங்களில் யார் அடுத்த பிரபுதேவா என அனைத்து ரியாலிட்டி ஷோக்களும் வெற்றி பெறுவதற்கான அடிப்படை மக்களின் இந்த மனநிலைதான்.

ஆனால் உண்மையான மனிதர்கள், உண்மையான பிரச்சினைகள் என்பது வரைதான் இது உண்மை. அந்த உணர்ச்சிகள் உண்மையானவை அல்ல. அது நிகழ்ச்சிக்காகத் திட்டமிட்டு தூண்டப்பட்டு, மிகையாக சித்தரிக்கப்படுகிறது. அந்த வகையில் இது ஒரு ஃபோர்னோகிராபி. இதைப் பார்க்கும் ரசனையும் சாவித் துவாரம் வழியே பார்க்கும் அதே ரசனைதான்.

பொதுவாக இத்தகைய நிகழ்ச்சிகளில் அப்பாவி ஏழைகளின் அந்தரங்கம் மட்டுமே அலசப்படுவதாகத் தெரியலாம். ஆனால் ஊடக வியாபாரத்தில் பணக்காரர்களின் அந்தரங்கமும் தப்புவதில்லை. பத்திரிகைகளின் சினிமா கிசுகிசு, மேற்குலகின் டயானா விவகாரம் போன்றவை இத்தகையவைதான்.

‘ராக்கியின் சுயம்வரம்’ போன்ற நிகழ்ச்சிகள் அப்பட்டமாக ஒத்திகை பார்க்கப்பட்டு, திரைக்கதை எழுதப்பட்டு ஒளிபரப்பப் படுகின்றன. பணத்துக்காக சினிமாவில் ஆடைகளை அவிழ்த்து ஆபாச நடனம் ஆடும் ராக்கி சாவந்த், தனது திருமணத் தெரிவையும் டி.வி.யில் லைவ் ஆக நடத்தினார்.

‘யார் வேண்டுமானாலும் விண்ணப்பிக்கலாம்’ என்ற அறிவிப்பு பரபரப்பான செய்தியாக மாற்றப்பட்டதே தவிர இது ஒரு அப்பட்டமான விபச்சாரம் என்பதை யாரும் பேசவில்லை. சபலத்துடன் பலரும் விண்ணப்பித்தார்கள். முடிவில் ராக்கி ஒரு கனடா தொழிலதிபரைத் தெரிவு செய்தார். திருமணம் தள்ளிப் போடப்பட்டு, கடைசியில் ‘நடிக்கக்கூடாது என்று சொன்னதால் திருமணம் ரத்து’ என்று அறிவிக்கப்பட்டது.

அதற்குப் பின்னர் இது நாடகம் என்றும், இதில் பணத்துக்காக தானும், பிரபலத்துக்காக தொழிலதிபரும் நடித்ததாகவும் ராக்கி கூறினார். கோடிக் கணக்கான ரசிகர்களை ஏமாற்றிய குற்றத்துக்கு எந்த தண்டனையும் இல்லை. இதை வைத்து இவர்கள் கொள்ளையடித்த பணத்துக்கும் கணக்கில்லை.

2009-ம் ஆண்டு இந்திய தொலைக்காட்சிகளின் மொத்த வருமானம் சுமார் 5.5 பில்லியன் டாலர்கள். இதில் ரியாலிட்டி ஷோக்களின் வருமானம் கணிசமானது. இவர்களுக்கு 70 கோடி இந்திய செல்போன் வாடிக்கையாளர்கள்தான் முக்கிய இலக்கு. ‘உங்கள்

*ஹிட்லர் காலத்தில் அவர் உரையாற்றும்போது,*
*கூட்டத்தில் அமர்ந்திருக்கும் அவரது ஆட்கள்*
*குறிப்பிட்ட இடத்தில் கை தட்டுவார்களாம்.*
*அதைப் பார்த்து மற்றவர்களும் தட்டவேண்டும்;*
*தட்டுவார்கள். அதற்குப் பெயர் பாசிசம்.*
*இதற்குப் பெயர் கருத்துச் சுதந்திரமாம்!*

மனம் விரும்பிய போட்டியாளர் இவர் என்றால்… என்று டைப் செய்து இந்த எண்ணுக்கு எஸ்.எம்.எஸ். அனுப்புங்கள்' என்ற வேண்டுகோளுக்கு செவி சாய்த்து மக்கள் அனுப்பும் எஸ்.எம்.எஸ்-ல் இருந்துதான் ரியாலிட்டி ஷோக்களின் 30 முதல் 40 சதவிகித வருமானம் வருகிறது. இந்த வருமானத்தின் அளவு குறைந்தால் ரியாலிட்டி ஷோக்களுக்காக இவர்கள் செய்யும் பித்தலாட்டங்களும் அதிகரிக்கும்.

இன்றைய நிலையில் தொழில்முறை ஆபாசப் படங்களைக் காட்டிலும் செல்போன்களில் எடுக்கப்பட்ட 'கேண்டிட் வீடியோக்களுக்குதான்' மவுசு அதிகம்.. யூ-டியூப் உள்ளிட்ட இணைய தளங்களில் இத்தகைய ஒரிஜினல் 24 கேரட் வீடியோக்களுக்கான பார்வையாளர்கள் சர்வ சாதாரணமாக லட்சங்களைத் தொடுகிறார்கள். பள்ளி மாணவர்களின் செல்பேசிகளில் கூட இத்தகைய கேண்டிக் கேமரா காட்சிகள் இருக்கின்றன. இதற்கும் 'ரியாலிட்டி ஷோ'க்களுக்கும் நேரடி தொடர்பு இருக்கிறது.

எப்போதுமே, நிலவும் டிரெண்டை பயன்படுத்தி கல்லா கட்டும் நிறுவனங்கள் 'உண்மையை' விரும்பும் மக்களின் மனநிலையை மட்டும் விட்டு வைக்குமா? பல தொலைக்காட்சி விளம்பரங்கள் கேண்டிட் கேமராவால் எடுக்கப்பட்டதைப் போல திட்டமிட்டு எடுக்கப்படுகின்றன. பஞ்சாராஸ் அழகு சாதனப் பொருள், இந்துலேகா எண்ணெய், ஆரோக்கியா பால் உள்பட பல விளம்பரங்கள் இப்படி ஒளிபரப்பாவதைக் காணலாம். இதை 'ஒரு விளம்பர யுத்தி' என்றோ, சொல்வதெல்லாம் உண்மை போன்ற நிகழ்ச்சிகளை 'ஒரு கிரியேட்டிவ் கான்செப்ட்' என்றோ சிலர் சொல்லக்கூடும். ஆனால் உண்மை வேறு.

டி.வி.யை நிறுத்தியதும், அதுவரை பார்த்துக் கொண்டிருந்த நிகழ்ச்சி தோற்றுவித்த உணர்வு மறைந்து விடுவது இல்லை. மாறாக, அது உங்களைப் பயிற்றுவிக்கிறது. குரூரத்தை ரசிப்பதற்கு, வக்கிரத்தை விரும்புவதற்கு கற்றுத் தருகிறது. அது உருவாக்கும் உணர்வுதான் ஒரு போரைப் பொழுதுபோக்காக; போலீஸ் அராஜகத்தை ஹீரோயிசமாக புரிந்துகொள்ள இட்டுச் செல்கிறது.

இவர்கள் இத்தனை தூரம் மெனக்கெட்டு செட் போட்டு, கான்செப்ட் பிடித்து ரியாலிட்டி ஷோ நடத்தத் தேவையில்லாமல், சொல்ல வேண்டிய நடைமுறை உண்மைகள் ஏராளமாக நாட்டுக்குள் இருக்கின்றன. சாதித் தீண்டாமை முதல் சில்லறை வர்த்தகத்தில் அந்நிய முதலீடு வரை 'உண்மைகளுக்கா' பஞ்சம்? இவற்றை சொல்வதற்கு எந்த ரியாலிட்டி ஷோவிலும் இடம் இல்லை. எனில் இவற்றை 'ரியாலிட்டி ஷோ' என்ற சொல்லால் அழைப்பதே தவறானது.

உண்மையில் இவற்றின் ஒவ்வொரு நொடியும் முன்கூட்டியே திட்டமிடப்பட்டு திரைக்கதை எழுதப்படுகின்றன. வட இந்திய சேனல்களில் இது

இத்தகைய ஆடியன்ஸ் சப்ளை சர்வீசில் ஆறு ஆண்டு கால அனுபவம் பெற்ற ராஜீ கபூர், ''ரசிகர்களாக வருபவர்களுக்கு ஏன் சம்பளம் கொடுக்க வேண்டும்?'' என்று பலர் என்னிடம் கேட்கிறார்கள். ஓர் அறிவிப்பு வெளியிட்டால் கூட்டம் வரும்தான். ஆனால் ரியாலிட்டி ஷோக்களின் படப்பிடிப்பு நேரம் மிக மிக அதிகம். சாதாரண பார்வையாளர்கள் அவ்வளவு நேரம் பொறுமையாக இருக்க மாட்டார்கள். எந்த நேரமும் எழுந்து சென்று விடுவார்கள். அதனால்தான் இப்படி பணம் கொடுத்து அழைத்து வருகிறோம். அது மிகக் குறைந்த தொகை




**மேற்கத்திய ரியாலிட்டி ஷோக்கள்!**
**உண்மையின் பெயரில் மலிவான ரசனை!!**

இன்னும் பச்சையாக நடக்கிறது. பொதுவாக இந்த ரியாலிட்டி ஷோக்களில் சுற்றி உட்கார்ந்து கைதட்டிக் கொண்டே இருக்கிறார்களே, அவர்களை ரசிகர்கள் என்றா நினைக்கிறீர்கள்? இல்லை.. அவர்கள் தினக்கூலி அடிப்படையில் ரசிகர்களாக நடிக்கிறார்கள்.

வியப்பதும், சிரிப்பதும், கை தட்டுவதும், பயப்படுவதும்தான் அவர்களின் வேலை. தமிழ் சேனல்களை பொருத்தவரை இந்த ரசிகர்களை பிடித்து வருவது அந்தந்த ரியாலிட்டி ஷோவின் புரடியூசரின் வேலை. வட இந்தியச் சேனல்களில் இத்தகைய பணி அவுட் சோர்ஸ் செய்யப்படுகிறது. அங்கு டி.வி. நிகழ்ச்சிகளுக்கான பார்வையாளர்களை சப்ளை செய்வதற்கு என்றே தனிப்பட்ட ஏஜென்சிகள் செயல்படுகின்றன.

தான் என்ற போதிலும், சிலிர்ப்பு மிக்க ரசிகராக நடிப்பதற்கு அவர்களுக்கு அந்தப் பணம் கொடுக்கப்படுவதில் என்ன தவறு?'' என்று கேட்கிறார்.

அதாவது நிகழ்ச்சியைப் பார்க்கும் ரசிகர்கள் எந்த இடத்தில் அழ வேண்டும், எங்கு சிரிக்க வேண்டும், எப்போது கை தட்ட வேண்டும் என்ற அனைத்தும் முன்கூட்டியே திட்டமிடப்படுகிறது.. ஹிட்லர் காலத்தில் அவர் உரையாற்றும்போது, கூட்டத்தில் அமர்ந்திருக்கும் அவரது ஆட்கள் குறிப்பிட்ட இடத்தில் கை தட்டுவார்களாம். அதைப் பார்த்து மற்றவர்களும் தட்டவேண்டும்; தட்டுவார்கள். அதற்குப் பெயர் பாசிசம். இதற்குப் பெயர் கருத்துச் சுதந்திரமாம்!

● வளவன்

# ஆண்ட பரம்பரையால் அழிக்கப்படும் இந்திய விளையாட்டு!

**நூ**ற்று முப்பது கோடி மக்கள் தொகை கொண்ட இந்தியா கடந்த ஆண்டு இறுதியில் லண்டனில் நடந்த ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொண்டு ஆறு பதக்கங்களுடன் திரும்பியது. ஒவ்வொரு நான்காண்டுகளுக்கும் இந்தியளவிலான ஊடகங்களில் இதற்காக வைக்கப்படும் 'ஒப்பாரி' இந்த முறை சிறு முனகல்களோடும் வழக்கமான சடங்குகளோடும் முடிந்து விட்டது. பெண்களுக்கான குத்துச்சண்டைப் போட்டியில் பதக்கம் வென்ற மேரி கோமின் உருக்கமான வாழ்க்கைப் பின்னணி பற்றிய நெகிழ்வூட்டும் விவரிப்புகளோடு ஆங்கில ஊடகங்களின் சம்பிரதாயமான கடமைகள் நிறைவு பெற்றன.

இருப்பினும் இந்தியாவுக்கு ஆறு பதக்கம் என்பது நிச்சயம் அதிகம்தான். சமீபகால ஒலிம்பிக் எதிலும் இத்தகைய 'சாதனை' இந்தியாவுக்கு இல்லை. எனினும் இந்த சாதனைச் செய்திகள் பேசப்படும் போதே இந்திய விளையாட்டுத் துறையின் அசிங்கமான முகத்தை சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி அம்பலப்படுத்திக் காட்டியது. இந்திய ஒலிம்பிக் சங்கத்தை, அதன் தேர்தல்களில் நடந்துள்ள முறைகேடுகளுக்காக தடைசெய்திருக்கிறது சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி. இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் தேர்தல்களில் அரசியல் தலையீடு இருப்பதும் ஊடகங்களில் விவாதிக்கப்பட்டது.

இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் கீழ் 39 விளையாட்டுக்களுக்கு தனிச்சிறப்பான சங்கங்கள் உள்ளன. ஒலிம்பிக் கனவுகளுக்காக அரசு ஒதுக்கீடு செய்யும் நிதியைத் தின்று கொழுக்கும் இவற்றில் சில சங்கங்களுக்கான விளையாட்டுக்கள் ஒலிம்பிக் போட்டிகளிலேயே இடம்பெறாதவை. பல்வேறு சங்கங்களின் வாக்குகளைப் பெற்றுத் தான் இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் பதவிகளைப் பெற முடியும். இதற்காகவே ஒலிம்பிக்கில் இல்லாத மேட்டுக்குடி துக்கடா விளையாட்டுக்களான ஸ்நூக்கர், பௌலிங் போன்ற விளையாட்டுக்களுக்குக் கூட சங்கங்களை அமைத்து, அவற்றை இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் கீழ் இணைத்துள்ளனர்.

தற்போது சங்கத்தின் தலைவராக இருக்கும் அபய் சவுதாலா, ஹரியாணாவின் முன்னாள் முதல்வர் ஓம்பிரகாஷ் சவுதாலாவின் மகன். இவர் இதற்கு முன் இந்திய குத்துச்சண்டை சங்கத்தின் தலைவராக இருந்துள்ளார். பின் அதே பதவியை தனது மைத்துனரும் பி.ஜே.பி எம்.எல்.ஏவுமான அபிஷேக் மட்டோரியாவுக்கு கொடுத்துள்ளார். அபய் சவுதாலாவின் சகோதரர் அஜய் சவுதாலா டேபிள் டென்னிஸ் விளையாட்டுக்கான கூட்டமைப்புக்குத் தலைவர். இவ்விரு சங்கங்களும் இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் தேர்தல்களில் அபய் போட்டியிட்ட போது அவருக்குச் சாதகமாக ஓட்டளித்துள்ளன. அண்ணன் அபய் சவுதாலாவும், அப்பா ஓம்பிரகாஷ் சவுதாலாவும் ஆசிரியர் நியமன ஊழல் வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டு இப்போது உள்ளே இருக்கின்றனர். கல்வியில் விளையாடிய இந்தக் குடும்பம்தான் விளையாட்டிலும் விளையாடுகிறது.

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் விளையாட்டுத் துறை அமைச்சராக இருந்த எஸ்.எஸ். திண்சா தற்போது பஞ்சாப் ஒலிம்பிக் சங்கத்தின் தலைவர்; இவரது மகன் சைக்கிள் போட்டிகளுக்கான கூட்டமைப்புக்குத் தலைவர். படகுப் போட்டிகளுக்கான கூட்டமைப்பில் தலைவராக 2008 வரை இருந்த கே.பி.சிங் தியோ என்கிற முன்னாள் காங்கிரஸ் அமைச்சர், தனது பதவிக் காலத்துக்குப் பின் அந்தப் பதவியை தனது மச்சானிடம் கொடுத்து வைத்தார்; அவரது பதவிக் காலத்துக்குப் பின் தற்போது கே.பி. சிங்கின் மனைவியிடம் அப்பதவி உள்ளது.

39 சங்கங்கள் - 33 மாநிலங்கள்; இவையனைத்தும் செல்வாக்கான அரசியல்வாதிகள் மற்றும் முன்னாள் ஜமீன்தாரிகளான பழம் பெருச்சாளிகளின் குடும்பத்தினரின் பிடியில். இந்தச் சங்கங்களெல்லாம் தேர்தல் நடத்தி இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்தால் எப்படியிருக்கும்? காமன்வெல்த் போட்டிகளில் கொழுத்த தேட்டையடித்து கையும் களவுமாக மாட்டிக் கொண்டிருக்கும் லலித் பென்னாட் இந்தத் தேர்தல்களின் மூலம் சங்கத்தின் பொதுச் செயலாளராகத் தேர்வாகியிருக்கிறார் என்பதிலிருந்தே இதைப் புரிந்து கொள்ள முடியும்.

இவர்களெல்லாம் இத்தனை முனைப்பாக விளையாட்டுச் சங்கங்களின் பதவிகளைப் பெற முண்டியடிப்பது விளையாட்டை ஊக்குவிப்பதற்கோ அல்லது வளர்ப்பதற்கோ அல்ல. இவர்களுக்கும் விளையாட்டுக்களுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. வேறு எதற்காக முண்டுகிறார்கள்?

இந்திய சமூகமும் அதன் அரசியல் அரங்கும் இன்னமும் நிலவுடைமை மற்றும் தரகு முதலாளித்துவ வர்க்கங்களால்தான் ஆதிக்கம் செய்யப்படு

> *கோடிக்கணக்கான மக்கள் நாளுக்கு 20 ரூபாய் வருமானத்தோடும் பட்டினியோடும் பரிதவித்துக் கிடக்கும் போது, காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை முன்வைத்து இந்திய அதிகார வர்க்கத்தினரின் அரசவைக் கோமாளிக் கூத்துகளுக்காக மக்களின் ரத்தப்பணம் அள்ளி இறைக்கப்பட்டது.*

கின்றன. இந்திய அளவிலும், மாநில அளவிலுமான அரசியல் அதிகாரப் போட்டிகளில் தலைவர்களின் வாரிசு களே கோலோச்சுகின்றனர். பல்வேறு மாநிலங்களில் பழைய மன்னர்கள், ஜமீன்தார்கள் மற்றும் முதலாளிகளின் வாரிசுகளே அரசியல் பீடங்களை அலங்கரித்து வருகின்றனர்.

இவர்களுக்கு விளையாட்டு என் பது ஒரு அந்தஸ்து. கிராமப்புறங்களின் வாழ்ந்து கெட்ட பண்ணையார்கள் இன்றளவும் ரேக்ளா பந்தைய மைதா னங்களின் மேடைகளையும், ஜல்லிக் கட்டு மைதான மேடைகளையும் அலங் கரிக்கிறார்கள் என்றால், இவர்களில் இருந்து செல்வாக்குப் பெற்று அரசியல் மையங்களின் அடுக்குகளின் பல்வேறு படிநிலைகளைக் கைப்பற்றி அமர்ந்தி ருப்பவர்களோ விளையாட்டு சங்கங்க ளின் பதவிகளை அலங்கரிக்கின்றனர்.

அந்தக் காலத்து ஜமீன்தார்களின் வீடுகளில் அவர்களின் 'வீரத்தைப்' பறைசாற்ற உரித்துப் பதப்படுத்தப்பட்ட புலித் தோல்களும் கரடித் தலைகளும் அலங்கரித்ததென்றால், அவர்களின் நவீன கால பிரதிநிதிகளின் வாரிசு களான யுவராஜ் சிங்குகளும் அபிநவ் பிந்த்ராக்களும் தமது பங்களாக்களை பதக்கங்களால் அலங்கரிக்கின்றனர். அன்றைய மன்னர்களின் அரண்மனை மைதானத்தில் மல்லர்கள் போட்டி யிட்டு தங்கச் சங்கிலிகளைப் பிச்சை யாகப் பெற்றுச் சென்றனரென்றால், அந்த மன்னர்களின் வழித்தோன்றல் களான இன்றைய அரசியல்வாதிகள் விளையாட்டுச் சங்கங்களின் தலைவர் களாயிருந்து சான்றிதழ்களை வழங்கு கின்றனர். திறமை உள்ள எந்த ஒரு விளையாட்டு வீரரும் கூட இந்த சங்கத் தலைவர்களின் 'ஆசி' பெற்றிருப்பது அவசியம்.

மேற்கத்திய நாடுகளில் விளை யாட்டு என்பது மனித உடலின் சாத்தி யங்களைக் கடப்பது பற்றிய அறிவிய லாக ஓரளவுக்கு வளர்ந்துள்ளது. இந்தி யாவிலோ அது பரிதாபத்திற்குரிய நிலையில் உள்ளது.

முதலாளித்துவ நாடுகளில் வர்த்தக நலனுக்கு உட்பட்டு ஒரு விளையாட்டு வீரனின் உருவாக்கத்தில் நவீன விஞ் ஞானத்தின் சகல சாத்தியங்களையும் பயன்படுத்துகிறார்கள். ஒரு ஓட்டப்பந் தைய வீரன் என்றால், அவனது உடலின் தன்மை, தசை நார்களின் தன்மை, மரபணுக்களின் தன்மை என் பவற்றை அறிவியல்பூர்வமாக ஆய்ந் தறிந்து அதற்கேற்ற உணவுத் திட்டங் களையும் பயிற்சித் திட்டங்களையும் வகுக்கிறார்கள்.



காமன்வெல்த் ஊழல் புகழ் கல்மாடிக்கும் விளையாட்டுக்கும் என்ன சம்பந்தம்?

வீரர்கள் பயிற்சி பெறுவதற்காக அமைக்கப்படும் ஓடுகளங்கள் விஞ் ஞானப்பூர்வமாக அமைக்கப்படுகின் றன. இவ்வீரர்களின் பாத அமைப்பு, கால் அமைப்பு ஆகியவற்றைக் கணக் கிட்டு, இவர்களுக்காவே பிரத்யேக மாக காலணிகள் மற்றும் காலுறைகள் தயாரிக்கப்படுகின்றன. விளையாட் டின் மேம்பாட்டுக்காக பன்னாட்டு நிறு வனங்கள் தமது விளம்பர நோக்கத்திற் காக ஒதுக்கும் தொகைதான் பயன்படு கிறது என்றாலும் ஏதோ ஒரு வகையில் அங்கே விளையாட்டு வளர்கிறது.


தன்ராஜ் பிள்ளை

மேலும் அரசால் ஒதுக்கப்படும் நிதி இது போன்ற விளையாட்டு அறிவிய லின் ஆராய்ச்சிகளுக்காகவும், பிற உள் கட்டமைப்புகளுக்காகவுமே பயன் படுத்தப்படுகிறது. ஆனால் ஆளும் கும்பலின் வெட்டிப் பெருமிதங்களால் பீடிக்கப்பட்ட இந்தியாவிலோ நிலைமை தலைகீழாக உள்ளது.

சமீபத்தில் நடந்த காமன்வெல்த் போட்டிகளின் உள் கட்டுமானப் பணி களுக்காக மத்திய அரசு ஒதுக்கீடு செய்த 2,500 கோடி ரூபாய்களில் சுமார் 1,325 கோடி ரூபாய்கள் தில்லி நகரை அழகுபடுத்தவும், சுவர்களுக்கு வெள் ளையடிக்கவும், துவக்க நிகழ்ச்சியிலும் இறுதி நிகழ்ச்சியிலும் பாலிவுட் நடிகை களின் கவர்ச்சி நடனங்களுக்காகவுமே செலவிடப்பட்டுள்ளன. இதில் ஒரு சில நிமிடங்களுக்கு மட்டும் நடந்த ஷில்பா ஷெட்டியின் கவர்ச்சி நடனத் திற்காக சுமார் ரூ. 75 லட்சம் செலவு செய்துள்ளார்கள்.

கோடிக்கணக்கான மக்கள் நாளுக்கு 20 ரூபாய் வருமானத்தோ டும் பட்டினியோடும் பரிதவித்துக் கிடக்கும் போது, காமன்வெல்த் விளை யாட்டுப் போட்டிகளை முன்வைத்து



**லண்டன் ஒலிம்பிக்கில் டேபிள் டென்னிஸில் வென்ற சீன வீரர்கள்!**

இந்திய அதிகார வர்க்கத்தினரின் அரசவைக் கோமாளிக் கூத்துகளுக்காக மக்களின் ரத்தப்பணம் அள்ளி இறைக்கப்பட்டது.


ஹாக்கி விளையாட்டுப் பயிற்சிகளில் பந்து வீசுவதற்காகப் பயன்படுத்தப்படும் கருவி பழுதடைந்து விட்டதால் கோல்ப் விளையாட்டில் பயன்படுத்தப்படும் பந்தை வைத்து பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது நடந்த விபத்தில் கோல் கீப்பர் பல்ஜித் சிங்கின் கண்ணில் அடிபட்டது. சுமார் இரண்டாண்டு காலம் போராடியும் அவரது பார்வையை முழுமையாக மீட்க முடியாமல், கொஞ்சம் கொஞ்சமாக ஓரங்கட்டப்பட்டு இன்று அவர் எங்கேயிருக்கிறார், என்னவானார் என்கிற தகவலே இல்லை.

ஒரு பக்கம் கார்ப்பரேட்டுகளின் படியளப்புகளால் கிரிக்கெட் கொழித்துக் கிடக்கும் நிலையில் இந்தியாவுக்காக ஒலிம்பிக் போட்டிகளில் தங்கம் பெற்றுத் தந்த ஹாக்கியின் நிலை இன்று கோவில் பிச்சைக்காரனை விடக் கீழ்த்தரமானதாக உள்ளது. உள்கட்டமைப்பு வசதிகள் இல்லை என்பதோடு தேசிய அணி வீரர்களுக்கே அடிப்படையான பாதுகாப்பு உபகரணங்கள் கூட போதுமான அளவுக்கு இல்லை. ஹாக்கி உள்ளிட்ட எந்த விளையாட்டுக்களுக்கும் விஞ்ஞானப்பூர்வமாகப் பயிற்சியளிக்கத் தகுதியான பயிற்சியாளர்களும் இல்லை.

சுமார் நூற்று முப்பது கோடி மக்கள் தொகை கொண்ட இந்தியாவில் வெறும் 1577 பயிற்சியாளர்களே உள்ளனர். இவர்களும் பழைய பாணியிலான பயிற்சி முறைகளை மட்டுமே கற்றறிந்தவர்கள். மாறாக சீனாவிலோ சுமார் 3.5 லட்சம் பயிற்சியாளர்களை அந்நாட்டின் அரசு உருவாக்கியுள்ளது. எழுபதுகளின் இறுதியில் இருந்து விளையாட்டை ஒரு அறிவியலாகக் கற்கும் பொருட்டு ஆண்டுதோறும் சுமார் 2000 தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூர் பயிற்சியாளர்களை ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பி திட்டமிட்ட ரீதியில் அவர்களை தயார்ப்படுத்தியுள்ளனர்.

இன்றைய நிலையில் சுமார் 48 கோடி சீனர்கள் (மக்கள் தொகையில் 37 சதவீதம்) ஏதாவது ஒரு விளையாட்டோடு இணைந்திருக்கின்றனர். இதன் விளைவு 84-ம் ஆண்டு நடந்த ஒலிம்பிக் போட்டியில் 32 பதக்கங்கள் பெற்ற சீனா, கடந்தாண்டு 88 பதக்கங்களை வென்றுள்ளது.

இந்தியாவின் அரசியல், அதிகார வர்க்கத்தினரின் பிடியில் சிக்குண்டு



**விஞ்ஞானத்தோடு வளரும் மேற்கத்திய விளையாட்டு!**

கிடக்கும் விளையாட்டுத் துறையில் சாமானிய, நடுத்தர வர்க்கக் குடும்பப் பின்னணியிலிருந்து வரும் ஒரு வீரர் பங்கேற்று தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்பது என்பது குருட்டு முடவன் இமயமலையில் ஏறுவதற்கு ஒப்பான சாதனைதான். தாழ்த்தப்பட்டவர்கள் உள்ளிட்ட உழைக்கும் மக்களுக்கோ இந்தக் கனவுகள் கற்பனைக் கெட்டாதவை. அன்றாடப் பிழைப்பும், வாழ்வும், மூன்று வேளை உணவுமே போராட்டமாக இருக்கும் ஒரு நாட்டில் விளையாட்டுக்களில் பங்கேற்க நேரமோ மனமோ எப்படியிருக்கும்? இவ்வளவோடும் சேர்த்து மொத்த சமூகமும் பார்ப்பனிய ஆணாதிக்க விழுமியங்களில் ஊறிப் போயிருக்கும் நிலையில் சாதாரண உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த பெண்கள் விளையாட்டுக்களில் பங்கேற்பது என்பதே கற்பனைக்கும் எட்டாத விசயம்.

இத்தனை தடைகளையும் தாண்டி விளையாட்டுக்களில் அபூர்வமான நட்சத்திரங்களாய் ஒளிவீசத் துவங்கும் சாதாரண குடும்பப் பின்னணி கொண்ட ஒரு சிலர் தமது வாழ்வின் மிக முக்கியமான இளமைப் பருவத்தை மூன்றாம் தர மைதானங்களில் விரயமாக்கி விட்டு மாநில அளவிலோ அதிகபட்சம் தேசிய அளவிலோ சில பதக்கங்களுடனும், ரயில்வேயில் டிக்கெட் பரிசோதகர் வேலையுடனும் திருப்திப் பட்டுக் கொள்ள வேண்டியிருக்கிறது. இவர்களிடம் இயல்பாக இருக்கும் திறமைகளை இந்த அமைப்பு முறையே ஒரு கட்டத்திற்கு மேல் அழித்தொழித்து விடுகின்றது.

மானியங்களுக்காகவும் சலுகைகளுக்காகவும் நடையாய் நடந்து, சலிப்பும் சோர்வுமுற்று விளையாட்டிலிருந்தே விலகுகிறார்கள். கடந்த ஆண்டு நடந்த தேசியளவிலான தடகள போட்டிகளில் பெண்களுக்கான ஓட்டப் பந்தையத்தில் 11.85 விநாடிகளில் நூறு மீட்டர் தூரத்தைக் கடந்த ஆஷா ராய் இன்றைய தேதியில் இந்தியாவிலேயே மிக வேகமாக ஓடும் பெண். ஆஷா ராய் தற்போது மேற்கு வங்க மாநிலத்தின் சிங்கூர் மாவட்டத்தில் உள்ள ஞான்ஷாம்பூர் கிராமத்தில் சாதாரண குடிசை வீட்டில் வசிக்கிறார். இவரது தந்தை போலாநாத் ராய் வீடு வீடாகக் காய்கறிகள் விற்று மாத வருமானமாக ஈட்டும் 3,000 ரூபாய்களில் தான் ஆறு பேர் கொண்ட அவர்கள் குடும்பம் பிழைத்துக் கொண்டிருக்கிறது.

ஒரு தரமான டென்னிஸ் மட்டையின் விலை 12,000 ரூபாய்கள். விளையாட்டு வீரர்கள் பயன்படுத்தும் காலணியின் விலை சுமார் ரூ. 3000. இவை போக சரிவிகித ஊட்டச்சத்து உணவு, சிறப்பு உணவுகள், பயிற்சிக் கட்டணம், சர்வதேச வசதிகள் கொண்ட மைதானங்களுக்கு நுழைவு கட்டணம் என்று அத்தியாவசியமாகச் செய்யப்படும் செலவுகளே விளையாட்டின் தரத்தைப் பொறுத்து மாதம் ஒன்றுக்கு பல ஆயிரங்களில் இருந்து சில லட்சங்கள் வரை ஆகலாம். இது போக, ஒரு மாவட்ட அளவிலான அணியிலோ மாநில அணியிலோ இடம் பிடிப்பதற்குத் தேவைப்படும் சிபாரிசுகளும், அளிக்கப்படும் லஞ்சங்களும் தனி.

ஆக, இந்த வாய்ப்புகளும் சாத்தியங்களும் மேட்டுக்குடியினருக்கும், நகர்ப்புற மேல் நடுத்தர வர்க்கத்தினருக்குமே சாத்தியம். இத்தனை முதலீடுகள் செய்து தேசிய அளவிலான போட்டிகளுக்கான அணிகளில் தமது பிள்ளைகளைத் திணித்து விடும் பெற்றோர் போட்ட காசை எடுக்க வேண்டுமென்றால், அது இந்தியாவைப் பொறுத்தவரையில் கிரிக்கெட்டில் மாத்திரமே சாத்தியம்.

இந்தியாவில் வேறு விளையாட்டுக்களே இல்லையெனும் வகையில் ஆளும் வர்க்கமும் அதன் ஊடகங்களும் கிரிக்கெட்டை ஒரு போதையைப் போல் பரப்பியுள்ளனர். இதற்குக் கிடைக்கும் அங்கீகாரமும், வருமானமும் இந்தியாவில் வேறு எந்த விளையாட்டுக்கும் கிடைப்பதில்லை. கிரிக்கெட்டிலும் சச்சின், தோனி போன்ற ஒரு சில விதிவிலக்குகள் தவிர்த்து பெரும்பாலானோர் வசதியான குடும்பப் பின்னணியில் இருந்தே வருகின்றனர். இதற்கு விதிவிலக்கானவர்களும், அவர்களின் தோற்றப் பொலிவின் தன்மைக்காக முதலாளிகளது விளம்பரங்களை வைத்து முன்னேறுகிறார்கள். பலர் காணாமல் போகிறார்கள்.

சர்வதேசப் போட்டிகளில் குறிப்பிடத்தக்க சாதனைகள் ஏதும் புரிந்திராத சானியா மிர்ஸாவுக்குக் கிடைக்கும் அங்கீகாரமும், புகழும் அவரை ஒரு கவர்ச்சியான பெண்ணாக விளம்பரங்களில் காட்ட முடியும் என்பதற்காகத் தான். ஹாக்கி மைதானங்களில் சூறாவளியாய்ச் சுழன்றடித்து இந்திய ஹாக்கியின் மதிப்பை சர்வதேச அளவில் நிலைநாட்டிய தன்ராஜ் பிள்ளை போன்றவர்கள் காணாமல் போனது ஏன்? ஏனெனில், கார்ப்பரேட்டுகளுக்குத் தேவைப்படும் விற்பனைப் பிரதிநிதிகளாக இருக்கத் தேவையான முக வெட்டுடைய வீரர்கள் தவிர்த்து பிறருக்கு அங்கீகாரமோ, புகழோ கிடைப்பதில்லை.

கிரிக்கெட் வீரர்களின் வாழ்க்கை விளம்பர ஒப்பந்தங்களால் ஒளியூட்டப்பட்டுப் பிரகாசிக்கிறது. பிற விளையாட்டுக்களோ கார்ப்பரேட்டுகளின் வியாபார நோக்கிற்குப் பயன்படாத குப்பைகளாகக் கருதப்பட்டு அரசினாலும் புறக்கணிக்கப்படுகின்றன; திறமையான வீரர்கள் அடிப்படை வசதிகள் கூட செய்து தரப்படாமல் தீண்டத்தகாதவர்கள் போல் நடத்தப்படுகின்றனர்.

> *இந்திய சமூகம் கீழிருந்து மேல் வரை முற்றிலுமாக மாற்றியமைக்கப்பட்டு, எளிய மக்களுக்கும் ஜனநாயகம் சென்றடைந்து, அவர்களின் அடிப்படையான வாழ்க்கைக்கு ஒரு உத்திரவாதம் கிடைக்கும் போது தான் கல்வி, விளையாட்டு, விஞ்ஞானம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் நம்மால் சாதனைகளைப் படைக்க முடியும்.*

இந்த வீரர்கள் தங்கள் சாதனை வாழ்வின் உச்சத்திலிருந்த போதும் சரி ஓய்வு பெற்ற பின்னும் சரி, புறக்கணிப்பு எனும் துயரத்தை மட்டுமே ருசித்துள்ளனர். மேற்குலகில் தொழில்முறை விளையாட்டுக்களில் கார்ப்பரேட்டுகளின் வியாபார நலன் இருந்தாலும் கீழ் மட்டத்தில் விளையாட்டு வீரர்கள் உருவாவதற்கான கட்டுமான வசதிகளை அந்நாட்டு அரசாங்கங்கள் உத்திரவாதப்படுத்தியுள்ளன; விளையாட்டு என்பது அடிப்படை ஆரோக்கியம் என்பதோடு இணைத்துப் பார்க்கப்படுகிறது.

இவையனைத்தோடும் சேர்ந்து இந்தியாவுக்கே உரித்தான பிரத்யேகமான பார்ப்பனிய சாதி சமூகமும் சேர்ந்து கொள்கிறது. ஒரு புறம் பார்ப்பன சாதியவாதத்தின் வேர் அகமண முறைகளால் தன்னை உறுதிப்படுத்திக் கொண்டு மக்களை நோஞ்சான்களாகப் பெற்றுத் தள்ளுகிறது; இன்னொரு புறம் ஆகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்கள் சாதியின் பெயரால் கல்வி, மருத்துவம், சுகாதாரம், தொழில் என்று வாழ்வின் சகல அம்சங்களில் இருந்தும் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளனர். விளையாட்டின் அடிப்படையே குழு உணர்வையும், அதன் வழி சமூக உணர்வையும் உண்டாக்குவதே. இங்கே சமூகமே பெட்டி பெட்டியாகப் பிளவுண்டு கிடக்கும் போது விளையாட்டு உணர்வு மட்டும் அந்தரத்திலிருந்து உருவாக முடியாது.

இந்திய விளையாட்டுத் துறையைப் பீடித்து ஆட்டும் பக்கவாதம் என்பதை வெறும் அரசியல், லஞ்ச ஊழல் என்பதோடு மட்டும் சுருக்கிப் பார்க்கக் கூடாது. விளையாட்டுத் துறை மேட்டுக்குடியினரின் பெருமிதமான பொழுதுபோக்காகவும், அதில் பதவிகள் பெறுவது நிலபிரபுத்துவ கால அந்தஸ்தின் நவீன அடையாளமாகவும் நீடிக்கும் நிலையில், உள்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்காமல் இருப்பது வெறும் நிர்வாக ரீதியிலான சில்லறைப் பிரச்சினையல்ல. மொத்த சமூகமும் வர்க்கம் மற்றும் சாதியின் அடிப்படையில் பிரிந்து அதன் கீழடுக்குகளில் உள்ளோர் பிழைக்க வழியின்றித் தவித்து வரும் நிலையில் நூற்று முப்பது கோடி மக்களுக்கு ஆறு பதக்கங்கள் என்பதே இமாலய சாதனையே.

இந்திய சமூகம் கீழிருந்து மேல் வரை முற்றிலுமாக மாற்றியமைக்கப்பட்டு, எளிய மக்களுக்கும் ஜனநாயகம் சென்றடைந்து, அவர்களின் அடிப்படையான வாழ்க்கைக்கு ஒரு உத்திரவாதம் கிடைக்கும் போது தான் கல்வி, விளையாட்டு, விஞ்ஞானம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் நம்மால் சாதனைகளைப் படைக்க முடியும். சாதனையாளர்களை அடையாளம் காணவும் முடியும். அது வரையில் ஆஷா ராய் பி.டி உஷா, பல்ஜித் சிங், தன்ராஜ் பிள்ளை போன்ற அடையாளமற்ற எண்ணற்றோரின் உழைப்பும், அவர்கள் சிந்தும் வியர்வையும் விழலுக்கு இறைத்த நீர் தான்.

● **தமிழரசன்**

# தீம் திருமணங்கள்! அழகின் வக்கிரம்!!

**உ**ண்மையாகவே அது வித்தியாச மான திருமணம் தான். அந்தத் திருமண வரவேற்பிற்காக மண்டப அலங்காரங் களுக்கு மாத்திரம் 10 லட்சம் ரூபாய் வரை செலவு செய்திருப்பார்கள். தமிழ கத்தில் வாழும் பரம்பரைத் தமிழர் களில் ஒருவரான என் நண்பரின் திரும ணம் தான் அது. ஆனால் திருமணத்தில் தமிழின் அடையாளம் எதுவும் இல் லை. திருமண வரவேற்பு முழுக்கவும் வடநாட்டு பாணியில் இருந்தது. உண் மையில் அது திருமணம் மாதிரியே இல்லை. ஏதோ சினிமா செட்டுக்குள் நுழைந்தது போல இருந்தது. இதன் பெயர் தான் ''தீம் மேரேஜ்''. அதாவது ஒரு கரு அல்லது குறிப்பிட்ட வகை அழகியல் கண்ணோட்டத்தின் அடிப்ப டையிலான திருமணம் என்று பொருள் கொள்ளலாம்.

திருமணம் என்றால் வசதி படைத்த வர்கள் ஆடம்பரமாகவும், ஏழைகள் எளிமையாகவும் செய்வார்கள் என்று தான் நினைத்திருந்தேன். ஆனால் பணக்காரர்களின் காசு வெறுமனே ஆடம்பரம் என்று இல்லாமல் இப்படி தீம் அடிப்படையில் 'அழகுணர்ச்சியு டன்' அவதாரமெடுத்திருக்கிறது என் பதை இந்தத் திருமணத்தை பார்த்த பிறகுதான் தெரிகின்றது. பிறகென்ன, இந்த தீம் திருமணங்கள் குறித்து தொழில்முறை விற்பன்னர்களிடம் விசாரித்த போதுதான் இந்த தனி உலகு குறித்து தெரிய வந்தது.

பொதுவாக திருமணம் என்றாலே, வாழை மரம் கட்டி வரவேற்கும் மண்டப வாசல், சந்தனம் தெளித்து வர வேற்பு, நீலம் அல்லது சந்தன நிறத் துணியைக் கட்டி புகைப்படத்திற்கு பின் னணியாக ஆக்கப்பட்ட மேடை, சம்பிர தாய சடங்குகள், ஐயர், புகைப்படங் கள், வீடியோக்கள் என்று எல்லா திரும ணங்களும் இப்படி ஒரே மாதிரியாக தொடங்கி, முடிவடைந்து விடுகின்றன. இவற்றில் மற்றவர்களுக்கும் நமக்கும் எந்த வித்தியாசமும் இல்லாமல் போய் விடுகிறதே என்ற மனக்குறை பணக் கார வர்க்கத்தை வாட்டியிருக்கும் போலும்.

'பத்து இலட்சம் மதிப்புள்ள ரூபாய் காரென்றாலும் பக்கத்து வீட்டுக்காரன் வாங்கிய அதே காரை நாமும் வாங்க முடியுமா? பிறகு அவனுக்கும் நமக் கும் என்ன வித்தியாசம்? சாப்பிடும் இட்லியிலே 100 வகைகள் வந்து விட்டன; போடும் உடைகள் மட்டு மல்ல உள்ளாடைகளிலும் கூட, வித்தி யாசமும் தனித்துவமும் வேண்டும் என்று விளம்பரங்கள் கூறும்போது திரு மணத்தில் மட்டும் வித்தியாசம் வேண் டாமா?'

இன்று இருபதுக்கும் மேற்பட்ட 'தீம்கள்' வந்து விட்டன. திருமணத்தின் போது மணமக்கள் என்ன உடை உடுத்த வேண்டும் என்பதில் தொடங்கி, மணமக்களின் பெற்றோர் எப்படி காட்சியளிக்க வேண்டும், மண் டபம் எப்படி அலங்கரிக்கப்பட்டிருக்க வேண்டும், திருமணத்தில் எப்படி முக பாவனைகளை வைத்திருக்க வேண் டும், உறவினர்களை எந்த முறையில் வரவேற்க வேண்டும் என்பது வரை தீர் மானித்து, சொல்லிக் கொடுக்க இன்று திருமண நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து ஒருங்கிணைக்கும் நிறுவனங் கள் வந்து விட்டன.

மேற்சொன்ன திருமணத்தில் ரூ. 20 லட்சம் வரை செலவு செய்து நண்பரின் குடும்பத்தார் வித்தியாசத்தை காட்டியி ருந்தனர். இதற்கு கரு ''ஜோதா அக்பர்''. அக்பர் உண்மையில் ஜோதா எனும் ஹிந்து மகராணியை காதலித் தாரா என்பதல்ல பிரச்சினை. இசுலாமி யரான அக்பருக்கும் ஹிந்துவான ஜோதாவுக்குமான காதலை பாலிவுட் டில் படமாக எடுத்தார்கள். ஹிருத்திக் ரோஷனும் ஐஸ்வர்யா ராயும் நடித்த அந்த வெற்றிப்படத்தில் அவர்கள் அணிந்த உடைகள், மாட மாளிகை அலங்காரங்கள் தான் இந்தத் திரு மணக் கருவிற்கான அடிப்படை.

குறிப்பிட்ட வெற்றிப்படத்தில் கதா நாயகிகள் கட்டும் சேலை அந்த ஆண்டு தீபாவளி சேலை டிசைனில் பிர பலமாக்கப்படுவது போலத்தான் இது வும். இருந்தாலும் இந்தியப் பொருளா தாரத்தின் வளர்ச்சிவீதம் அதிகரித்தி ருப்பதால் டிசைன் டிசைனாகப் புடவை என்பதிலிருந்து, டிசைனை டிசைனாக கல்யாணம் என்பதை நோக்கி தேசியப் பண்பாடும் வளர்ந்திருக்கிறது.

'ஜோதா அக்பர் தீம்' (கரு) என்ப தால், மணமேடை அந்தக் காலத்து அர சவை மாதிரி இருந்தது; பெண்ணைப் பல்லக்கில் வைத்து மேடைக்கு தூக்கி வந்தார்கள்; மணமகன் அக்பர் போல் வேடமணிந்து உட்கார்ந்திருந்தார்; மணமகள் அந்தக் காலத்து ராணியைப் போல் முக்காடு எல்லாம் போட்டு, நிறைய நகைகள் அணிந்திருந்தார்; மணமகனின் தந்தை வட நாட்டு ஷெர் வாணியைப் போன்ற மேல் அங்கியை அணிந்திருந்தார். நண்பனின் மாமா அதை உடுக்க மறுத்து விட்டதால் கோட் சூட் போட்டிருந்தார். அந்த மண்டபத் தில் அக்பர் அவையில் நுழைந்த அந்நி யர் போல் அவர் காட்சியளித்தார். உள்ளே நுழையும் போது சாமரம் வீசுப வர், சந்தனம் தெளிப்பவர், பழச்சாறு கொடுப்பவர் என அனைவரும் முக லாயர் காலத்திற்கு நம்மை அழைத்துச் சென்றனர். வந்திருந்த விருந்தினர் களுக்கும் உடையை மாற்றி விடுவார் களோ என்று நினைத்தேன். அப்படி எதுவும் நடக்கவில்லை.

ஜோதா அக்பர் தீமுக்கு விருந்து எப் படி இருக்கும், அக்பர் அசைவம் ஆச்சே என்று யோசித்த போது அதில் மட்டும் சம்பிரதாயமான சைவத்தைக் கைவிடவில்லை. சரக்கடிப்பவன் கூட சாக்கனாவில் சைவத்தை கைவிடுவதில் லையே. இருந்த போதிலும் அக்பர் தீம் என்பதால், வட நாட்டு சைவ உணவு கள் வைக்கப்பட்டிருந்தன. ஜோதா அக் பர் கரு கொண்ட திருமணம் என்றால் என்ன, வருபவர்கள் நம் மக்கள் தானே? விருந்து பரிமாறுமிடம் நாமே எடுத்து உண்ணும் சுயசேவை மாதி ரியை கொண்ட ''பஃபே''. (''பஃபே'' என்பது பிரெஞ்சு வார்த்தை, அதற்கு அர்த்தம் ''உணவு''. இந்த முறையில் மேசையில் வைத்திருக்கும் உணவு வகைகளை நாமே எடுத்து உண்ண வேண்டும்).

எல்லாம் வடநாட்டு உணவுகள்; சில உணவுகளைத் தவிர பல நமக்குப் பழக்கமில்லாதவை. பானி பூரி முதல் பாவ் பாஜி, வடா பாவ், ரோட்டி தால், லஸ்ஸி, ராஜ்மா, பாலக் எல்லாம் ஒவ்வொரு நிறம் ஒவ்வொரு சுவை. வாய்க்குள் உணவின் பெயரும் நுழையவில்லை, உணவும் நுழையவில்லை.

அக்பர் காலத்தில் ஸ்பூன், முள் கரண்டியால்தான் சாப்பிட்டார்களா என்று தெரியவில்லை. இருந்தாலும் கவுரவம் கருதி ரொட்டியை அதை வைத்துப் பிய்த்து சாப்பிட முனைந்த ஒருவர், ரொட்டியுடன் முதலாம் பானிபட் போர் நடத்தித் தோற்றார். பிறகு, அந்நிய ஆயுதத்தைத் துறந்து தன் சொந்த ஆயுதமான கையில் அதைப் பிய்த்து வாயில் போட்டபின், ஒரு போரில் நாட்டை பிடித்த மகிழ்ச்சியை அவர் அடைந்தார்.

உணவு வகையில் பஞ்சாபி, குஜராத்தி, ராஜஸ்தான், உத்திர பிரதேசம் என்று சகல ஊர்களும் இணைந்ததால் அதைப் புதிதாகச் சாப்பிட்ட நம் மக்கள் வயிற்றைப் பதம் பார்க்கத் தொடங்கி விட்டது. பெண்ணின் அம்மாவுக்கு சர்க்கரை வியாதியாம். என்ன ஏதென்று தெரியாமல் பார்க்க அழகாய் தெரிந்த ஏதோ ஒன்றை இரண்டு துண்டு வாயில் போட்டவுடன் மயக்கமாகி விட்டார். தீம் மேரேஜ் காண்டிராக்டில் ஆம்புலன்ஸ் சேவை சேர்க்கப்படவில்லை என்பதால், என்ன செய்வதென்று தெரியாமல் பதறிக் கொண்டிருந்தார்கள்.

நண்பனின் குடும்பத்தினர் எங்கே குண்டு வெடித்தாலும் அதற்கு இசுலாமியர்கள் தான் காரணம் என்று நம்பும் 'தேசபக்தர்கள்'. இருந்தாலும் ஜோதா அக்பர் தீமை தெரிவு செய்திருக்கிறார்கள் என்றால், மதச்சார்பின்மை நமது பண்பாட்டில் எவ்வளவு ஆழமாக வேரோடியிருக்கிறது என்று புரிந்து கொள்ளலாம்.

நண்பனின் குடும்பத்தினர் எங்கே குண்டு வெடித்தாலும் அதற்கு இசுலாமியர்கள் தான் காரணம் என்று நம்பும் 'தேசபக்தர்கள்'. இருந்தாலும் ஜோதா அக்பர் தீமை தெரிவு செய்திருக்கிறார்கள் என்றால், மதச்சார்பின்மை நமது பண்பாட்டில் எவ்வளவு ஆழமாக வேரோடியிருக்கிறது என்று புரிந்து கொள்ளலாம்.

இருப்பினும், ஒரு கரு என்று எடுத்துக்கொண்டால், வடிவம் உள்ளடக்கம் இரண்டுமே பொருந்திப் போக வேண்டுமல்லவா? மணமகன் இந்து, மணமகளோ முசுலிம் இல்லை என்பது மட்டுமல்ல, குறைந்த பட்சம் சாதி கூட வேறு இல்லை. சாதிக்குள் எந்த உட்பிரிவு என்பது வரை எந்த சமரசம் கிடையாது.

இன்று இது போன்ற தீம்கள் எத்தனையோ வந்து விட்டன! ஜோதா அக்பர் தீமோடு, அலங்காரத்தில் அதிரடி செய்யும் இங்கிலாந்து அரச பரம்பரை தீம், தசாவதார தீம் (தசாவதாரம் படம் போல் மணமகன் பத்து வேடங்களில் மேடையில் தோன்றுவார் என நினைக்க வேண்டாம், மேடையின் பின்னனியில் விஷ்ணு எடுத்ததாக சொல்லப்படும் தசாவதார சிலைகள் வைக்கப்பட்டிருக்கும்), கடற்கரை ஓரம் திருமணம் செய்து கொள்ளும் பே தீம், வட நாட்டு தீம், பஞ்சாபி தீம், ஆந்திரா தீம், செட்டிநாட்டு தீம், என்று 'தீம்'கள் பல.

தசாவதார 'தீம்'-ல், வரவேற்பவர்கள் பார்ப்பனர்கள் போல் இருப்பதும், பஞ்சாபி 'தீம்'-ல் பாங்க்ரா நடனம் ஆடுவதும், கடற்கரை 'தீம்'-ல் நீச்சல் உடையில் இருப்பதும் அந்த 'தீம்'களின் சிறப்புகள். இந்த ''தீம்''களில் சில உதிரியாக மற்ற திருமணங்களிலும் நுழைந்து விட்டன. மருதாணி இட்டுக் கொள்ளும் ''மெகந்தி அலங்காரம்'' சிற்றுண்டிகளாகப் பரிமாறப்படும் பானி பூரி, மணமகன் உடுத்திக் கொள்ள ஷெர்வாணி எனும் வட நாட்டு உடை போன்றவற்றைச் சொல்லலாம்.

முன்னர் பெரும் நிலவுடைமையாளர்களாக இருந்தவர்கள், ஊரையே கூட்டி பத்து நாள் திருமணம் நடத்தியிருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். கரகாட்டம் முதல் கர்நாடக இசைக் கச்சேரி வரையில் பெரிய செட்டுகளைக் கொண்டு வந்து இறக்குவதும், எத்தனை பேருக்கு சோறு போட்டோம் என்பதும்தான் அன்று ஆடம்பரத்தின் இலக்கணமாக இருந்தது. இதைத் தாண்டி திருமணங்களில் புதுமை எதுவும் இருந்ததில்லை.

புதிய பொருளாதாரக் கொள்கையில் புதுப் பிறப்பெடுத்திருக்கும் முதலாளித்துவம் முன்னைப் போல பத்து நாள் திருமணம் நடத்தா விட்டாலும், ஒரே நாளில் பணத்தை வாண வேடிக்கை விடுகிறது. அதை வித்தியாசமாகச் செய்வது எப்படி என்பதுதான் இவர்களது கவலை. திருமணத்திற்கான இந்தப் புதுமைத் தேடலை நுகர்வுக் கலாச்சாரத்தின் வாயிலாக, வாழ்க்கையின் முக்கியமான அங்கமாக மாற்றி விட்டார்கள்.



**இது அரண்மனையல்ல, ஹைதராபாத் திருமணம் ஒன்றின் நுழைவாயில்!**



**இது சினிமா அல்ல, திருமணம் ஒன்றின் மணமேடை!**

எழுதும் பேனாவிலும் பார்க்கும் தொலைக்காட்சியிலும், பேசும் செல் பேசிலும் இன்று என்ன விசேசம் என்று பார்ப்பவர்களை இந்த தீம் திருமணங் கள் சுலபமாகக் கவர்ந்து விடுகின்றன. பணக்காரர்களைப் பொறுத்த வரை நுகர்வுக் கலாச்சாரத்திற்காக செலவழிப் பதை அத்தியாவசியம் என்றே கருதுகி றார்கள். தான் பெறாத வசதியை இந்தக் காலத்தில் தமது குழந்தைகள் பெறு வதை முன்னேற்றமாகப் பார்க்கிறார்கள்.

சாதி,மத பிற்போக்குத் தனங்களில் இம்மியவளவு கூட விட்டுக் கொடுக்கா தவர்கள்தான் இத்தகைய ஆடம்பர புது மைத் திருமணங்களை செய்து கொள்வ தோடு, அப்படிச் செய்து கொண்டதை யும் பெருமையாகப் பேசிக் கொள்கி றார்கள். எனினும் கொஞ்ச காலத்தி லேயே இந்த தீம்கள் கசந்து போய் புதிய தீம்கள் வரலாம். ஆனால் விசயமென் னவோ, கருப்பொருளுக்கு எவ்வளவு செலவழிக்க முடியும் என்பதுதான்.

கடந்த பிப்ரவரி - 2013 -இல் மத்திய அமைச்சர் சரத் பவாரின் தேசிய வாத காங்கிரசு கட்சியைச் சேர்ந்த, மராட்டிய மாநில நகர்ப்புற மேம்பாட் டுத்துறை அமைச்சர் பாஸ்கர் ஜாதவ் தனது மகன் மற்றும் மகளுக்கு ஒரு ஆடம்பரத் திருமணத்தை நடத்தினார். ஆனால் அந்த ஆடம்பரம் உங்கள் கற் பனைக்கும் அப்பாற்பட்டது.

மும்பையில் இருந்து 300 கிமீ தொலைவில் உள்ள சிப்லன் பகுதியில் 5 லட்சம் சதுர அடியில் ஒரு பிரம் மாண்ட கோட்டை போன்ற செட் போடப்பட்டிருந்தது. ஒரு லட்சம் பேர் வரை திருமணத்திற்கு அழைக்கப்பட்டி ருந்தனர். விருந்தினர்களின் விருப்பப் படி சாப்பிடும் வண்ணம் 60 விதமான சிற்றுண்டி சாலைகளை அமைத்திருந் தார்கள். வந்து போகும் ஹெலிகாப்டர் களுக்காக 22 ஹெலிபேடுகள் - இறங்கு தளங்கள் அமைக்கப்பட்டிருந் தன. இந்த விருந்தில் வெட்டப்பட்ட ஆடுகள், கோழிகள், வழங்கப்பட்ட பரிசுப் பொருட்களின் மதிப்பு, ஆபர ணங்கள் மற்றும் மது வகைகளைப் பற் றிய கணக்கை மத்திய வருமான வரித் துறையினர் கவனமாக ஆராய்ந்து வந் தாலும் கணக்குப் போட்டு முடிய வில்லை.

இதே மராட்டிய மாநிலத்தின் விதர்பா பகுதிதான் விவசாயிகளின் தற் கொலைக்கும் புகழ் பெற்றது. இந்தப் பகுதியில் நடக்கும் மக்கள் திருமணங்க ளும் கூட நிறைய மாறியிருக்கின்றன. பல கிராமங்களில் திருமணம் என்பது ஒரு குறிப்பிட்ட வீட்டிற்குரிய விசேச மாக இல்லை. தனியாகத் திருமணம் நடத்தி கடன் படுவது தற்கொலைக்கு ரிய முக்கியக் காரணமாக இருப்பதால், பல கிராமங்களில் யாரும் தனியே திரு மணம் நடத்தக் கூடாது என்று ஊர்க்கட் டுப்பாடே போட்டிருக்கிறார்கள். பல திருமணங்களை சேர்த்து ஒரே மேடை யில் நடத்துகிறார்கள். திருமணத்திற்கு வரும் விருந்தினர்களின் எண்ணிக்கை யும் இவ்வளவு பேருக்கு மேல் போகக் கூடாது என்று கட்டுப்பாடு விதித்திருக் கிறார்கள்.

படிக்காத விவசாயிகள் மத்தியில் வறுமையின் காரணமாகப் பிறப்பெடுத் திருக்கும் இந்த 'தீம்', குடும்பத்தின் அடித்தளமான திருமணத்தை, தனிநபர் விவகாரம் என்பதிலிருந்து கூட்டுத்து வம் நோக்கி முன்னேற்றியிருக்கிறது. படித்த மேட்டுக்குடி வர்க்கத்தினர் மத் தியில், மிதமிஞ்சிய பணத்திமிர் பெற் றெடுத்திருக்கும் தீம் மேரேஜ்களோ, அக்பர், பாபர், சேர சோழ பாண்டியன் என்று பின்னோக்கிச் செல்கின்றன. இருப்பினும் இதுதான் 'முன்னேற்றம்' என்று அழைக்கப்படுகிறது.

• **ஆதவன்**

**மேலிருந்து கீழ்வரை பரவும் மெகந்தி! காசுக்கேற்ற அழகு!**



# கம்பெனி காத்தாடும் இந்திய இராணுவம்!

இந்திய இராணுவம் வரலாறு காணாத நெருக்கடியில் சிக்கித் தவிப்பதாக முதலாளித்துவ ஊடகங்கள் கவலைப்படுகின்றன. சுமார் 11 லட்சம் வீரர்களைக் கொண்டுள்ள இந்திய இராணுவத்தில் வேலைக்குச் சேர இளைஞர்கள் தயங்குவதாகச் சொல்கிறார்கள். இராணுவத்தில் சுமார் 10,500 அதிகாரிகள் மட்ட பணியிடங்களும், 32,500 கீழ்மட்ட வீரர்கள் பணியிடங்கள் காலியாக உள்ளன. கடந்த மூன்று ஆண்டுகளில் சுமார் 25,000 வீரர்கள் இராணுவத்திலிருந்து விருப்ப ஓய்வு பெற்று விலகி விட்டனர். இளைஞர்களிடையே இராணுவப் பணி மதிப்பிழந்து போயிருப்பதாகவும் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சரிந்து போயிருக்கும் இராணுவத்தின் பிம்பத்தைத் தூக்கி நிறுத்துவதற்காக ஐந்து அம்சத் திட்டம் ஒன்றை பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே அந்தோனி 2009-ம் ஆண்டு முன்வைத்துள்ளார். 'பணிக்கால மற்றும் ஓய்வுக் கால சலுகைகளைக் கூட்டுவது, புதிய இராணுவப் பயிற்சி நிலையங்களைத் துவக்குவது, இராணுவம் பற்றிய நல்லெண்ணத்தை உருவாக்கும் பிரச்சாரத்தை முன்னெடுப்பது' உள்ளிட்ட இந்தத் திட்டங்கள் இன்று வரை நடைமுறைக்கே வரவில்லை என்று ப்ரண்ட்லைன் பத்திரிகை தெரிவிக்கிறது. 'படை வீரர்களுக்கும் அதிகாரிகளுக்கும் வழங்கப்படும் சம்பளத்தை உயர்த்த வேண்டும்' என்று ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் சிலர் தெரிவிக்கின்றனர்.

ஆள் பற்றாக்குறை தவிர, தற்போது இராணுவ அதிகாரிகள் மற்றும் படையணியினரிடையே தற்கொலைகளும், கலகங்களும் அதிகரித்து வருகின்றன. காஷ்மீரில் மட்டும் 2009-2011-ல் 2000 சிப்பாய்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் என்று கூறுகிறது காஷ்மீர் பல்கலைக்கழகத்தின் ஒரு ஆய்வு. வீரர்கள் தற்கொலை குறித்த விவரங்களை இராணுவம் எப்போதுமே வெளியிடுவதில்லை. கடந்த இருபது ஆண்டுகளில் 20,000 பேர் காஷ்மீரில் மட்டும் தற்கொலை செய்து கொண்டிருப்பர் என்பது காஷ்மீர் பல்கலைக்கழகப் பேராசிரியர் பஷீர் அகமது தப்லாவின் மதிப்பீடு. வட கிழக்கிந்தியாவுக்கும் மற்ற பகுதிகளுக்குமான தற்கொலைக் கணக்கு தனி.

மேலும் பல்வேறு முகாம்களில் இராணுவ அதிகாரிகள் வழங்கும் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய மறுத்து படைச் சிப்பாய்கள் கலகம் புரிந்து வரும் செய்திகளும் அதிகரித்துள்ளன. ஜம்முவில் நிலை கொண்டிருக்கும் 16-ம் படைப்பிரிவில் கடந்த ஆண்டு தோன்றிய கலகத்தைச் சான்றாகக் குறிப்பிடலாம்.

1772-ம் ஆண்டு ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனியால் தோற்றுவிக்கப்பட்ட இந்தப் படையணியில் பல்வேறு உயரதிகாரிகள் பணிபுரிந்துள்ளனர். போர்க்காலங்களில் எண்ணற்ற தியாகங்களையும், வீர தீரங்களையும் வெளிப்படுத்தி பெருமைக்குரிய அணியாகக் கருதப்படும் இந்தப் பிரிவின் வீரர்களிடையே கலகம் மூண்டது இராணுவ உயரதிகாரிகள் மட்டத்திலும், ஓய்வு பெற்ற அதிகாரிகள் மத்தியிலும் திகைப்பை ஏற்படுத்தியுள்ளது. அதிகாரிகளுக்கும், வீரர்களுக்கும் இடையே அதிகரித்து வரும் முரண்பாடுகளுக்கும் கூட ஆள்பற்றாக்குறையே காரணம் என்று ஊடகங்கள் எழுதுகின்றன. விரைவில் இந்தப் பணியிடங்களை நிரப்பாவிட்டால் மீள முடியாத பெரும் சிக்கலில் இந்திய இராணுவம் சிக்கிக் கொள்ளும் என்று இவர்கள் கவலைப்படுகிறார்கள்.

படையினருக்குக் கூடுதலாக சில சலுகைகளை அளிப்பது, சம்பளத்தை உயர்த்துவது, இராணுவம் பற்றிய விளம்பரம் உள்ளிட்ட நடவடிக்கைகளின் மூலமே இந்தச் சிக்கலைத் தீர்த்து விட முடியும் என்று அரசு நம்புகிறது. ஆனால் எதார்த்தம் அத்தனை எளிமையாக இல்லை.

இராணுவத்தில் கீழ்மட்டப் படை வீரர்களாகச் சேரும் பெரும்பான்மையினர் சிறு நகரங்கள் அல்லது கிராமப் புறங்களைச் சார்ந்தவர்கள். நிலத்தோடும் விவசாயத்தோடும் பிணைக்கப்பட்டவர்கள். கிராமப் பொருளாதாரக் கட்டமைப்பைச் சார்ந்து வாழ்பவர்கள். தொண்ணூறுகளின் துவக்கத்திலிருந்து ஆளும் வர்க்கத்தால் அமுலாக்கப்பட்டு வரும் புதிய பொருளாதாரக் கொள்கைகளின் விளைவால் திட்டமிட்ட ரீதியில் துரிதப்படுத்தப்பட்டிருக்கும் விவசாயத்தின் அழிவும், கிராமப் பொருளாதாரக் கட்டமைப்பு தகர்ந்து போயிருப்பதும் இரண்டு விதமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

முதலாவதாக விவசாயம், நெசவு மற்றும் விவசாயம் சார்ந்த பிற தொழில்களைப் பிரதான பொருளாதார உற்பத்தியாகக் கொண்டிருக்கும் மாநிலங்களில், கிராமப்புற மக்கள் மத்தியில் கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடு காணப்படுவது பல்வேறு ஆய்வுகளில் தெரிய வந்துள்ளது. இந்தக் காரணத்துடன் நூற்றாண்டுகளாகப் பின்பற்றப்பட்டு வரும் சாதிவாரியான அகமண முறையின் விளைவான பூஞ்சையான இந்திய உடலமைப்பும் சேர்ந்து கொள்கிறது. விளைவு - சமீபத்தில் நடந்த இராணுவ ஆள்சேர்ப்பு முகாமில் வேலைக்காக விண்ணப்பித்திருந்த 40,000 பேரில் நாற்பதுக்கும் குறைவானவர்களே தேர்வாகியிருக்கிறார்கள். இராணுவ வேலைக்குத் தேவைப்படும்

*காஷ்மீரில் மட்டும் 2009-2011-ல் 2000 சிப்பாய்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் என்று கூறுகிறது காஷ்மீர் பல்கலைக்கழகத்தின் ஒரு ஆய்வு. வீரர்கள் தற்கொலை குறித்த விவரங்களை இராணுவம் எப்போதுமே வெளியிடுவதில்லை.*




**ரியல் ஹீரோக்கள் சாகசம் செய்கிறார்களோ இல்லையோ, தற்கொலை செய்கிறார்கள்.**

குறைந்தபட்ச உடல் திறனைக் கூட இவர்களால் தேர்வில் வெளிப்படுத்த இயலவில்லை.

இரண்டாவதாக, படையில் கீழ் மட்ட சிப்பாய்களாகச் சேர்பவர்களில் சுமார் 80 சதவீதம் பேர் 35-லிருந்து 40 வயதுக்குள் விருப்ப ஓய்வு பெற்றுச் செல்கிறார்கள். தேசபக்தி கொழுந்து விட்டு எரிவதாலோ லட்சிய ஆவேசத்தாலோ இவர்கள் இராணுவத்தில் சேர்வதில்லை - நடுத்தர வயது வரை ஒரு அரசு வேலை, வயதான பின் ஓய்வூதியம் என்பதே படைவீரர்களாகச் சேர்பவர்களின் அதிகபட்ச லட்சியம். பட்டாளத்தில் சேர்ந்து பத்துப் பதினைந்து ஆண்டுகள் கஷ்டப்பட்டாலும் பிறகு கிடைக்கும் ஓய்வூதியத்தை வைத்துக் கொண்டு விவசாயம் செய்து பிழைத்துக் கொள்ளலாம் என்பதே அநேகமாக பலரது திட்டமாக உள்ளது.

ஏற்கெனவே விவசாயம் அழிக்கப்பட்டு, விளைநிலங்கள் நகரங்களால் விழுங்கப்பட்டு வருகின்றன. ஆக, வாழ்வின் மத்திய பகுதியில் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்று வரும் போது சொற்ப ஓய்வூதியத்தையும் செத்துப் போன விவசாயத்தையும் வைத்துக் கொண்டு பிழைக்க முடியாது என்கிற எதார்த்தமே இவர்களை இராணுவ வேலையிலிருந்து விலக்கி வைக்கிறது. இராணுவப் படைவீரர்கள் மத்தியில் எடுக்கப்பட்ட ஆய்வு ஒன்றின் படி, பெரும்பான்மையான தற்கொலைகள் விடுப்புக்காக தமது கிராமங்களுக்குச் சென்று திரும்பிய சில நாட்களிலேயே நடப்பதாகத் தெரிய வந்துள்ளது.

இராணுவத்தில் அதிகாரிகள் மட்டத்திலான வேலைகளுக்கு பெரும்பாலும் படித்த நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த இளைஞர்களே முன்வருகிறார்கள். ஏற்கெனவே இராணுவத்தில் அதிகாரிகளாக இருப்பவர்களின் வாரிசுகளோ அரசின் காசில் தின்று விட்டு, அமெரிக்க வேலைகளைத் துரத்திச் சென்று விடுகின்றனர். இவர்கள் பெரும்பாலும் இராணுவம் சார்ந்த வேலைகளில் அதிக ஆர்வம் காட்டுவதில்லை. இதற்கு முதலாளித்துவ ஊடகங்களும், ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகளும் சொல்வதைப் போல் சம்பளம் ஒரு பிரதான காரணம் இல்லை.

ஏனெனில், கடந்த ஆண்டு மட்டும் சுமார் ரூ. 3 லட்சம் கோடிகளை விழுங்கி ஏப்பம் விட்டிருக்கும் இந்திய இராணுவம் உலகிலேயே ஏழாவது பணக்கார இராணுவம் என்று மதிப்பிடப்படுகிறது. இதில் அந்நிய நாடுகளில் இருந்து ஆயுதங்கள் கொள்முதல் செய்யவும், உள்கட்டமைப்பு வசதிகளுக்கும், ஊழலுக்கும் செலவானது போக, கணிசமான தொகை அதிகாரிகள் மற்றும் சிப்பாய்களின் சம்பளத்துக்காகவும் பிற சலுகைகளுக்காகவும் செலவிடப்படுகிறது. சம்பளம் தவிர்த்து ஒரு இராணுவ அதிகாரிக்குக் கிடைக்கும் சலுகை எண்ணிலடங்காதவை. பயிற்சிக் காலத்திலேயே 21,000 ரூபாய்கள் வரை சம்பளமாகப் பெரும் ஒரு அதிகாரி அவரது தகுதிக்கேற்ப சுமார் ரூ. 39,000 வரை துவக்கச் சம்பளமாகப் பெறுகிறார்.

மாதச் சம்பளம் தவிர்த்து பல்வேறு படிகள், சலுகைகள், குறைந்த வட்டிக் கடன், இலவசப் பயணச் சீட்டுகள், மலிவு விலையில் பொருட்கள் வாங்குவதற்கான கேண்டீன், குடியிருப்பு வசதி, உயர் கல்வி பெறுவதற்கு இரண்டாண்டுகள் வரை சம்பளம் மற்றும் சலுகைகளுடன் கூடிய விடுப்பு என்று ஏராளமான சலுகைகளை இராணுவ அதிகாரிகள் அனுபவித்து வருகின்றனர். இத்தனை சலுகைகளையும், வருமான வாய்ப்புகளையும் தாண்டி இராணுவத்தில் அதிகாரிகளாகச் சேர நடுத்தர வர்க்க இளைஞர்கள் முன்வருவதில்லை.

நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த படித்த இளைஞர்களுக்கு வெளியே இராணுவ சம்பளத்துக்கு இணையாகவோ அதை விட அதிகமாகவோ சம்பளம் கிடைக்கிறது. புதிய பொருளாதாரக் கொள்கைகளின் விளைவாய் ஏற்பட்டிருக்கும் ஐ.டி மற்றும் ஐ.டி சார்ந்த சேவைத்துறை ஒரு சிறிய பிரிவினருக்கு வளமான வாய்ப்புகளைத் திறந்து விட்டுள்ளது. நகர்ப்புற நடுத்தரவர்க்கம் மட்டுமின்றி கிராமப்புறங்களைச் சேர்ந்த நடுத்தர விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களையும் இது கவர்ந்திழுக்கிறது. இராணுவத்தோடு ஒப்பிடும்போது இந்த விதமான வேலைகளே, தற்போதைய நவீன கலாச்சாரத்துக்கும் அதைச் சார்ந்த தீவிர நுகர்வியத்துக்கும் ஏதுவானதாக இருக்கிறது.

நினைத்த நேரத்தில் நினைத்தபடி அனுபவிப்பது, வார இறுதியில் குடித்

*நினைத்த நேரத்தில் நினைத்தபடி அனுபவிப்பது, வார இறுதியில் குடித்துக் கும்மாளமிடும் பப் கலாச்சாரம், விதவிதமான பைக்குகள், செல்போன்கள், உடைகள் என்று நீளும் இந்த 'வண்ணமயமான' வாழ்க்கையை இராணுவ முகாம்களில் கற்பனை செய்து கூட பார்க்க முடியாது.*

துக் கும்மாளமிடும் பப் கலாச்சாரம், விதவிதமான பைக்குகள், செல்போன்கள், உடைகள் என்று நீளும் இந்த ‘வண்ணமயமான’ வாழ்க்கையை இராணுவ முகாம்களில் கற்பனை செய்து கூட பார்க்க முடியாது. நாளையைப் பற்றியோ, எதிர் காலத்தைப் பற்றியோ கவலைப்படாமல், எந்த இலட்சியத்துக்காகவும் கேளிக்கைகளைத் தியாகம் செய்யாமல், இளமையைக் கொண்டாட வேண்டும் என்கிறது பரவி வரும் மறுகாலனியாக்க நுகர்விய கலாச்சாரம். தொடர்ச்சியான முனைப்பையும், உழைப்பையும், அர்ப்பணிப்பு உணர்வையும் கோரும் எந்த வேலையும் இந்தப் பிரிவினரிடையே இன்று செல்வாக்கிழந்துள்ளது. இதற்கு இராணுவம் மட்டும் விதிவிலக்காகி விட முடியாது.

மேலும் இந்திய இராணுவம் எதிரி நாட்டோடு நேரடியான யுத்தத்தில் பங்கேற்று பல ஆண்டுகளாகி விட்ட நிலையில், தேசத்தின் நிகழ்ச்சி நிரலில் எல்லையில்லா தேசபக்தி கரைபுரண்டு ஓடச் செய்வதற்கு எந்த முகாந்திரமும் இல்லை. அவ்வப்போது எல்லையில் நிகழ்ந்து வரும் சில்லறைச் சண்டைகளும் அமெரிக்காவின் மனம் கோணாத வகையில் சில ‘ஷெல்’ வீச்சுக்களோடு முடித்துக் கொள்ளப்படுகிறது.

மற்றபடி, இன்றைய நிலையில் இராணுவம் அதன் முழு பலத்தோடு உள்நாட்டு மக்களின் மேல் தான் திருப்பி விடப்பட்டுள்ளது. காஷ்மீர், வடகிழக்கு மற்றும் மத்திய இந்தியாவில் குவிக்கப்பட்டுள்ள இராணுவ மற்றும் துணை இராணுவப் படைகளை மக்கள் வெறுப்பதால், மக்களிடமிருந்து தனிமைப்பட்டிருப்பது, மக்களால் வெறுக்கப்படுவது, அதிகாரிகளால் நிர்ப்பந்திக்கப்படுவது ஆகிய அனைத்தும் சேர்ந்து சிப்பாய்களைத் தற்கொலை எனும் மனநிலைக்குத் தள்ளுகின்றன.

அதிகாரிகள் பற்றாக்குறை தான் படைவீரர்களின் தற்கொலைகளுக்குக் காரணம் என்பதாக முதலாளித்துவ ஊடகங்கள் எழுதுகின்றன. ஆனால் மக்களுக்கோ ஜனநாயகப்பூர்வமான வேறு எந்த நிறுவனங்களுக்கோ பதிலளிக்கத் தேவையற்ற ஒரு வெட்டிப் புனிதம் இராணுவத்தின் மேல் சுமத்தப்பட்டுள்ளதன் விளைவாக அதன் உள்ளடுக்குகளில், உயரதிகாரிகள் மட்டத்தில் எதேச்சதிகாரப் போக்கு தோன்றியுள்ளது. இதோடு சேர்த்து, முடிவற்ற தாழ்நிலைப் போர்களில் சொந்த நாட்டு மக்களின் மேல் பாய்ந்து குதறும் கூலிப்



காணாமல் போனவர்களின் படத்தொகுப்பில் தனது மகனை முத்தமிடும் காஷ்மீர் தாய்.

படைக் கும்பலாகச் செயல்படுவதன் உளவியல் அழுத்தங்களும், பணி ஓய்வுக்குப் பின் சொந்த கிராமத்தில் காத்திருக்கும் மரித்துப் போன பொருளாதார வாய்ப்புகள் ஏற்படுத்தும் விரக்தியுமே படையினரிடையே தற்கொலைகளாகவும், உத்தரவுகளுக்குக் கட்டுபட மறுக்கும் கலகங்களாகவும் வெளிப்பட்டுக் கொண்டுள்ளன.

தரகு அதிகார வர்க்கத்தினரின் அடியாள் படையான இராணுவம் பற்றி ஊடகங்களும் திரைப்படங்களும் தொடர்ச்சியாகச் செய்து வரும் பிரச்சாரங்களும், அர்ஜூன் விஜயகாந்த் படங்களும், தேசியப் பெருமிதத்தை உருவாக்குவதற்கு செய்யப்படும் செயற்கையான முனைப்புகளும் எதையும் ஏற்படுத்தாது என்பதைத் தான் இந்த நெருக்கடிகள் உணர்த்துகின்றன.

வட கோடி காஷ்மீரிலிருந்து தென் கோடி கூடங்குளம் வரை அன்றாடம் நிகழும் போராட்டங்கள் அறிவிக்கும் செய்தி இது தான் - தேசத்தின் பெரும்பான்மையான மக்களான ஏதுமற்றவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு தேசமே வர்க்க ரீதியில் பிளவுண்டு வருகிறது. இதில் ஆளும் கும்பலின் அடியாள் படையாகத் தலையிடும் இராணுவம் சொந்த முறையில் மதிப்பிழந்து போகிறது. இன்னொரு புறம், ஒரு வேலை என்கிற அளவிலும் இராணுவத்தை மக்கள் அண்டி விடாதவாறு அரசின் பொருளாதாரக் கொள்கைகளே நேரடியாக அடித்தட்டு வர்க்கத்து மக்களையும், மறுகாலனியாக்க கலாச்சாரம் என்கிற வகையில் நடுத்தர வர்க்கத்தினரையும் அந்நியப்படுத்தி நிறுத்துகின்றன.

தேசம், இறையாண்மை போன்ற சொற்களையே மறுகாலனியாக்க கொள்கைகள் பொருளிழக்கும்படி செய்து கொண்டிருக்க, பன்னாட்டு மூலதனத்தின் கூலிப்படையாகவே நாடுகளின் இராணுவங்கள் மாறிக் கொண்டு வருகின்றன. ஆளும் வர்க்கத்தின் புனிதக் குண்டாந்தடியான இராணுவத்திடமிருந்து, அதன் சொல்லிக் கொள்ளப்படும் புனிதத் தன்மையும் உதிர்ந்து வருகிறது. தேசம், தியாகம் என்ற பரவச உணர்ச்சியை இனிமேலும் இராணுவம் சந்தைப்படுத்த முடியாது.

• வெற்றிவேல்

*இராணுவம் பற்றி ஊடகங்களும் திரைப்படங்களும் தொடர்ச்சியாகச் செய்து வரும் பிரச்சாரங்களும், அர்ஜூன் விஜயகாந்த் படங்களும், தேசியப் பெருமிதத்தை உருவாக்குவதற்கு செய்யப்படும் செயற்கையான முனைப்புகளும் எதையும் ஏற்படுத்தாது என்பதைத் தான் இந்த நெருக்கடிகள் உணர்த்துகின்றன.*

# உலகப் போலீசின் உள்ளத்தை வெளிப்படுத்தும் மூன்று திரைப்படங்கள்!

2012-ம் ஆண்டுக்கான ஆஸ்கர் விருதுகள் கடந்த மாதம் 24-ம் தேதி அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் பதினைந்து திரைப்படங்கள் இருபத்து நான்கு பிரிவுகளின் கீழும் விருதுகளுக்குப் போட்டியிட்டன. இவற்றில் ஆர்கோ, ஜீரோ டார்க் தர்டி மற்றும் லிங்கன் ஆகிய திரைப்படங்கள் நமது கவனத்துக்குரியவை.

ஆர்கோ சிறந்த திரைப்படத்திற்காகவும் மற்றும் வேறு இரண்டு பிரிவுகளின் கீழும், ஜீரோ டார்க் தர்டி சிறந்த ஒலிப்பதிவுக்காகவும், லிங்கன் சிறந்த நடிகர் மற்றும் சிறந்த தயாரிப்பு வடிவமைப்புக்காகவும் விருதுகளை வென்றுள்ளன.

இந்த மூன்று திரைப்படங்களும் அமெரிக்காவின் இன்றைய உலக மேலாதிக்கத் திட்டத்துக்குப் பொருத்தமான பிரச்சாரத்தை ஒத்திசைவான முறையில் மேற்கொண்டிருக்கின்றன.

**ஆர்கோ:** 1979-ல் நடந்த இரானியப் புரட்சியின் பின்புலத்தில் சித்தரிக்கப்படும் இந்தக் கதையைப் புரிந்து கொள்ள கொஞ்சம் வரலாற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். 1951-ல் இரானின் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மொகமத் மொசாதே, அன்று பிரிட்டனுக்கு சொந்தமாக இருந்த எண்ணெய் நிறுவனத்தை நாட்டுடைமை ஆக்கினார். நிலச் சீர்திருத்தம், குத்தகை உச்சவரம்பு, மக்கள் நலத் திட்டங்கள் போன்றவற்றை அடுக்கடுக்காக அமலாக்கினார். இதனால் உள்நாட்டு நிலவுடைமை சக்திகள் மற்றும் ஏகாதிபத்தியங்களின் கூட்டணி ஆத்திரம் கொண்டது.

1953-ல் சி.ஐ.ஏ மற்றும் பிரிட்டனின் கூட்டுச் சதியின் மூலம் ஒரு இராணுவ ஆட்சிக்கவிழ்ப்பு நடத்தப்பட்டு, மொசாதே சிறை வைக்கப்பட்டார். அதிகாரம் அமெரிக்க கைப்பாவையான மன்னர் ஷாவிடம் ஒப்படைக்கப்பட்டது. 1953 முதல் 1979 வரை நீடித்த ஷாவின் கொடுங்கோல் ஆட்சி, சித்திர வதைக்கு உலகப் புகழ் பெற்றது. 1979 புரட்சி ஷாவின் இந்தக் கொடுங்கோல் ஆட்சியைத் தூக்கி எறிந்தது. ஷா வுக்கு அமெரிக்கா அடைக்கலம் தந்தது. மக்கள் விரோதியான ஷாவை விசாரணைக்கு உட்படுத்தித் தண்டிக்க வேண்டுமென்றும், அவனைத் தங்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும் கோரினார்கள் இரான் மக்கள். அமெரிக்கா மறுத்தது. ஏற்கெனவே அமெரிக்காவுக்கு எதிராகக் குமுறிக்கொண்டிருந்த மக்களின் ஆத்திரம் வெடித்தது.

தலைநகர் டெஹ்ரானில் இருந்த அமெரிக்கத் தூதரகத்தை 1979-ம் ஆண்டு நவம்பர் 4-ம் தேதி இரான் போராட்டக்காரர்கள் முற்றுகையிடுகிறார்கள்; பின் கைப்பற்றுகிறார்கள். இந்த நடவடிக்கையில் சுமார் 52 அமெரிக்கர்கள் கைது செய்யப்படுகிறார்கள். ஆறு அமெரிக்கர்கள் போராட்டக்காரர்களிடம் சிக்காமல் தப்பித்து, கனடா நாட்டு தூதரகத்தில் மறைந்து கொள்கிறார்கள். இந்த ஆறு அமெரிக்க அதிகாரிகளையும் விடுவிக்க அமெரிக்க உளவுத்துறையான சி.ஐ.ஏ எடுத்த நடவடிக்கை தான் ஆர்கோவின் கதை. உண்மையில் நடந்த சம்பவத்தை அடிப்படையாக வைத்தே ஆர்கோவின் கதை பின்னப்பட்டிருக்கிற து.

மீட்புப் பணிக்குப் பொறுப்பேற்கும் சி.ஐ.ஏ அதிகாரி டோனி மென்டஸ், கனடாவைச் சேர்ந்த நிறுவனம் ஹாலிவுட் திரைப்படம் ஒன்றைத் தயாரிப்பது போலவும், அதற்கான வெளிப்புறப் படப்பிடிப்பு நடத்த இரானில் இடம் தேட வருவது போன்றும் நாடகம் ஒன்றை அரங்கேற்றுகிறார். ஹாலிவுட்டின் நம்பத்தக்க திரைப்படத் தயாரிப்பு நிறுவனம், இயக்குநர்கள் போன்றோர் சி.ஐ.ஏ வின் இந்த நாடகத்துக்கு ஒத்துழைக்கிறார்கள். போலி ஆவணங்களைத் தயாரித்துக் கொண்டு கனடா நாட்டுக்காரரைப் போல இரானுக்குள் சட்டப்பூர்வமாக ஊடுருவுகிறார் டோனி. பின் கத்தியின்றி, ரத்தமின்றி இரானிய அதிகாரிகளின் கண்களில் மண்ணைத் தூவி ஆறு அமெரிக்க அதிகாரிகளையும் டோனி எப்படி மீட்கிறார் என்பதே ஆர்கோவின் கதை.

ஜீரோ டார்க் தர்டி என்ற படத்தின் கதை பின்லேடன் வேட்டை. பின்லேடனை உயிருடனோ பிணமாகவோ பிடிக்கும் பணி மாயா எனும் சி.ஐ.ஏ பெண் அதிகாரியிடம் ஒப்படைக்கப்படுகிறது. சுமார் பத்தாண்டுகள் இந்தக் கதை பயணிக்கிறது. பல்வேறு நாடுகளில் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்படும் முசுலீம் இளைஞர்களை, வெவ்வேறு நாடுகளின் சித்திர வதைக் கூடங்களில் துன்புறுத்தி சேகரித்த சின்னச் சின்ன தகவல்களை ஒரு வரிசையில் கோர்க்கும் மாயா, பின்லேடன் ஆப்கான் குகையில் இல்லை, ஏதோ நகரத்தில்தான் இருக்கிறார் என்று ஊகிக்கிறார். இதனடிப்படையில் பின்லேடனின் வெளியுலகத் தொடர்பாக செயல்பட்டு வந்த தூதுவர் அபு அஹமத்தை அடையாளம் காண்கிறார்.

அபு அஹமத்தைப் பின்தொடந்து பின்லேடன் பாகிஸ்தானின் அப்போதாபாத் நகரில் ரகசியமாகத் தங்கியிருக்கும் பங்களாவைக் கண்டுபிடிக்கிறார். ஆனால் அங்கே தான் பின்லேடன் தங்கியிருக்கிறார் என்பதற்கு உறுதியான தகவல்கள் இல்லாத நிலையில் மாயாவின் மேலதிகாரிகள் நேரடி நடவடிக்கையில் இறங்கத் தயங்குகிறார்கள். மாயாவோ அங்கே தான் பின்

*எனக்குத் தேவைப்படும் நீதியை உலகின் எந்த மூலைக்கும் சென்று நிலைநாட்டும் உரிமை எனக்கு உள்ளது என்பது தான் அமெரிக்கா ஜீரோ டார்க் தர்டியின் மூலம் சொல்லும் செய்தி. டேனியல் தனது கைதியைப் பார்த்து ‘‘எனக்குத் தேவையான தகவல்களைத் தரா விட்டால் உன்னைக் காயப்படுத்துவேன்’’ என்று திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டேயிருக்கிறான்.*


லேடன் பதுங்கியிருப்பதாக உறுதியாக நம்புகிறார். மேலதிகாரிகளிடம் நடவடிக்கை எடுக்குமாறு தொடர்ந்து வற்புறுத்துகிறார். மாயாவின் நீண்ட போராட்டத்துக்குப் பின்னர்தான் நேரடி நடவடிக்கைக்கு ஒப்புதல் கிடைக்கிறது. பின்லேடன் கொல்லப்படுகிறார் - கதை முடிகிறது.

மொழி தெரியாத ஒரு நாட்டில், மாறுபட்ட ஒரு கலாச்சார, அரசியல், சமூக சூழலில் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்காகப் பழிவாங்க ஜீரோ டார்க் தர்டியில் களமிறங்கும் சிஐஏ அதிகாரிகள். முப்பதாண்டுகளுக்கு முந்தைய கதையான ஆர்கோவிலும் அதே போன்றதொரு சூழலில் 'அப்பாவி' அமெரிக்கர்களை விடுவிக்க தனது உயிரையே பணயமாக வைக்கும் சி.ஐ.ஏ அதிகாரி. களத்தில் நிற்கும் சி.ஐ.ஏ அதிகாரிகள் நாட்டைக் காக்க வேண்டுமென்பதில் உறுதியாக இருக்கும் போது அவர்களது மேலதிகாரிகளோ ஊசலாட்டமான மனநிலையில் இருக்கிறார்கள். ஜீரோ டார்க் தர்டி கதையின் நாயகி இரண்டு முறை மரணத்திற்கு நெருக்கமாகச் சென்று திரும்புகிறாள். ஆர்கோ பட நாயகன் டோனியோ இரானிய அதிகாரிகளின் சந்தேகப் பார்வையின் கீழேயே இயங்குகிறான்.

இரண்டு திரைப்படங்களும் அமெரிக்கா நியாயத்தின் பக்கம் நிற்பதாகவே சித்தரிக்கின்றன. இரானில் 1953-ல் அமெரிக்கா நடத்திய ஆட்சிக் கவிழ்ப்பு, அரை நிமிடத்திற்கும் குறைவான சுருக்கமான விவரிப்பாக ஆர்கோவில் வந்து செல்கிறது. எனினும் ஷா என்ற கிரிமினலைப் பாதுகாப்பதற்காக தனது தூதரக அதிகாரிகளைப் பலி கொடுக்கவும் தயாராக இருக்கும் அமெரிக்க அரசைப் பற்றி சிக்கிக் கொண்ட பிணையக் கைதிகள் கூட விமர்சிப்பதில்லை. மாறாக, படம் நெடுக கைது செய்யப்பட்டவர்களின் நிர்க்கதியான நிலையும், அவர்களின் கண்ணீரும், ஏக்கங்களும் முன்னிலைப் படுத்தப்பட்டு, அமெரிக்கர்கள் மீது ஒரு பரிதாப உணர்ச்சி உருவாக்கப்படுகிறது.

இரானின் போராடும் மக்களோ மூர்க்கமான வெறியர்களாகக் காட்டப்படுகிறார்கள். டோனி இரானுக்குள் நுழையும்போது சாலையோரங்களில் வெள்ளையர்கள் பகிரங்கமாகத் தூக்கிலிட்டுக் கொல்லப்படும் காட்சிகளைக் கடந்து செல்கிறான். பதுங்கியிருக்கும் ஆறு பேரின் பயபீதி கொண்ட முகங்கள் திரையையும், திரைக்கு முன் அமர்ந்திருக்கும் ரசிகனின் கண்களையும் ஆக்கிரமிக்கின்றன. ஒட்டுமொத்த திரைக்கதையும் அமெரிக்க பிணைக் கைதிகளின் பார்வையிலேயே நகர்வதால், ஷாவின் ஈவிரக்கமற்ற கொடூரமான ஆட்சிக்கும், அதில் பாதிக்கப்பட்ட லட்சோபலட்சம் இரானியர்களின் ரத்தமும் தசையுமான வாழ்க்கைக்கும் படத்தில் இடமே இல்லை. சிஐஏ அதிகாரிகள் மனிதாபிமானம் மிக்க நாயகர்களாகவும், மக்கள் கொலைவெறி கொண்ட கும்பலாகவுமே சித்தரிக்கப்படுகிறார்கள்.

ஆனால், ஜீரோ டார்க் தர்டியின் திரைக்கதைக்கு 'கொன்றான் - கொல்கிறோம்' என்கிற எளிய சூத்திரமே போதுமானதாக இருக்கிறது. படத்தின் துவக்கக் காட்சிகளில் இரட்டைக் கோபுரங்கள் தகர்வதன் பின்னணியில் மரண ஓலங்கள் கேட்கின்றன - சில விநாடிகளுக்குத் தான். அடுத்த காட்சியில் பாகிஸ்தானின் சித்திரவதைக் கூடமொன்றில் குற்றுயிரும் குலை உயிருமாகக் கட்டிப் போடப்பட்டிருக்கும் முசுலீம் கைதியை விசாரிக்கும் சிஐஏ அதிகாரி டேனியல், ''இங்கே நான் தான் உனது எஜமானன்'' என்கிறான்.




கடும் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கும் முசுலீம் கைதியிடம் ''மூவாயிரம் அப்பாவிகளை அநியாயமாய்க் கொன்று விட்டீர்களே'' என்று டேனியல் கத்தும்போது சி.ஐ.ஏ அதிகாரி மாயா உணர்சிகளற்ற முகத்தோடு, கைதியிடமிருந்து கிடைக்கப் போகும் தகவலுக்காய் காத்து நிற்கிறாள். முப்பதாண்டுகளுக்கு முன் நடக்கும் ஆர்கோ கதையின் நாயகன் டோனிக்கு இந்த சுதந்திரம் இல்லை. முறைத்துப் பார்க்கும் இரானிய அதிகாரிகளின் முகங்களை நேருக்கு நேராய்ப் பார்ப்பதைத் தவிர்த்து தலை கவிழ்ந்து செல்கிறான் டோனி. ஆறு அமெரிக்கர்களை வேனில் அழைத்துச் செல்லும் போது எதிர்ப்படும் இரானிய மக்களின் அமெரிக்க எதிர்ப்புப் போராட்ட ஊர்வலத்தைக் கண்டதும் டோனி பதைத்துப் போகிறான். சிக்கினால் மரணம் நிச்சயம் எனும் நிலையில் அந்த அறுவரின் முகங்களில் மரணபீதி தாண்டவமாடுகிறது.

இரண்டு படங்களிலும் நல்ல முசுலீம் என்றால் எப்படியிருக்க வேண்டும் என்பதையும் காட்சிப்படுத்தியிருக்கிறார்கள். ஆர்கோ படத்தில் அமெரிக்கர்களைக் காப்பாற்றும் இரானிய வேலைக்காரி தனது சொந்தத் தீர்மானத்தின் பேரில் அவ்வாறு செய்கிறாள். முப்பதாண்டுகள் கழித்து நடக்கும் ஜீரொ டார்க் தர்டி கதையிலோ முசுலீம்களின் தேர்வு செய்யும் உரிமையை அமெரிக்கர்களே கட்டுப்படுத்துகிறார்கள். ''சொல்கிறாயா, இசுரேலில் இருக்கும் சித்திரவதைக் கூடத்திற்கு அனுப்பி வைக்கவா?'' என்று கைதியை மிரட்டுகிறாள் மாயா.

சி.ஐ.ஏ உலகெங்கும் நிறுவியிருக்கும் ரகசிய சித்திரவதைக் கூடங்களையும், சித்திரவதைகளையும் ஜீரோ டார்க் தர்டி இயல்பாக காட்டிச் செல்கிறது. டேனியல் தன்னிடம் சிக்கிக் கொண்டுள்ள கைதியைத் தூங்க விடாமல் செய்கிறான்; தன் சக பெண் அதிகாரியின் முன்னிலையில் நிர்வாணப் படுத்துகிறான், பட்டினி போடுகிறான்; கழுத்தில் நாய்ப் பட்டியைக் கட்டி, சங்கிலியால் பிணைத்து இழுத்துச் செல்கி

றான். இதே போன்ற வழிமுறைகள் பாகிஸ்தான் மட்டுமின்றி உலகின் பல வேறு பகுதிகளில் இருக்கும் சித்திரவதைக் கூடங்களிலும் பின்பற்றப்படுவதாகக் காட்சிகள் வருகின்றன. ஆனால், அதை விட நாம் கவனம் கொள்ள வேண்டியது இவையெல்லாம் எங்கே, யாரால், ஏன் நடத்தப்படுகின்றன என்பது பற்றித் தான்.

எனக்குத் தேவைப்படும் நீதியை உலகின் எந்த மூலைக்கும் சென்று நிலைநாட்டும் உரிமை எனக்கு உள்ளது என்பது தான் அமெரிக்கா ஜீரோ டார்க் தர்டியின் மூலம் சொல்லும் செய்தி. டேனியல் தனது கைதியைப் பார்த்து ''எனக்குத் தேவையான தகவல்களைத் தரா விட்டால் உன்னைக் காயப்படுத்துவேன்'' என்று திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டேயிருக்கிறான். அவை உண்மையில் நம்மைப் பார்த்து - நமக்காகச் சொல்லப்படும் வார்த்தைகள். ''நீ எங்களோடு இல்லா விட்டால் எமது எதிரியாவாய்'' எனும் புஷ்ஷின் வார்த்தைகள் அவை.

முப்பதாண்டுகளுக்கு முன் அமெரிக்காவால் இப்படிப் பச்சையாகப் பேச முடியவில்லை. இன்று அடாவடியாகச் செய்யும் எல்லா நடவடிக்கைகளையும் அன்று கள்ளத்தனமாகவே அமெரிக்கா செய்ய வேண்டியிருந்தது. எனவே தான் ஆர்கோவில் சி.ஐ.ஏ அதிகாரிகள் அடக்கி வாசிக்கிறார்கள். உண்மையில் இந்த ஆறு அமெரிக்கர்களும் டோனியின் முயற்சியால் தப்பித்த பின் எஞ்சிய 52 பேரை இரானுடன் பேச்சு வார்த்தை நடத்தி 444 நாட்கள் கழித்தே அமெரிக்கா விடுவித்தது. இதே நிலை இன்று அமெரிக்காவுக்கு ஏற்பட்டிருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதை நாம் ஜீரோ டார்க் தர்டியிலிருந்து தெரிந்து கொள்ள முடியும்.

ஆர்கோ கதை நடக்கும் காலப் பகுதியில் நிலவிய உலக அரசியல் சூழலில் அமெரிக்காவுக்கு எதிர்த் தரப்பு என்கிற ஒன்று பெயரளவிற்காவது இருந்தது. இன்றைக்கு இருப்பதைப் போன்ற ஒற்றைத் துருவ மேலாதிக்கம் அன்று இல்லை. தேச எல்லைகளைக் கடந்து, பல்வேறு நாடுகளின் இறையாண்மையை ஊடுருவிச் சென்று, தான் நினைத்த நேரத்தில், நினைத்த இடத்தில் பூமிப் பந்தின் எந்த மூலையிலும் தனது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள அமெரிக்காவுக்கு இன்றைக்கு இருக்கும் அரசியல் மற்றும் இராணுவ ரீதியிலான 'சுதந்திரம்' அன்றைக்கு இல்லை. ரசியா தலைமையிலான எதிர் முகாம் ஒன்று இருந்தது.

இன்றோ ரசிய முகாம் சிதைந்து விட்டது. பிற மேற்குலக வல்லரசுகளின் நலன்களும் அமெரிக்காவின் பொருளாதார இராணுவ நலன்களோடு பிரிக்க முடியாதபடிக்கு இணைந்துள்ளன. பிற நாடுகளின் பொருளாதாரங்கள் அனைத்தும் அமெரிக்க நுகர்வை அடிப்படையாகக் கொண்டு இயங்குவதால், மொத்த உலகின் பொருளாதார இயக்கமும் அமெரிக்கா என்கிற ஒற்றை எஞ்சினோடு பிணைக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் மரணம் பிற நாடுகளையும் புதைகுழிக்குள் இழுத்து விடும் என்பதே இன்றைய உலகப் பொருளாதாரக் கட்டமைப்பின் எதார்த்தமாக இருக்கிறது.

எனவே தான் இன்று இரண்டாயிரங்களில் கதை நகரும் ஜீரோ டார்க் தர்டியில் பின்லேடனை பாகிஸ்தானுக்குள் புகுந்து எந்தக் கேள்வி முறையுமின்றி வேட்டையாடும் அமெரிக்காவால் அன்று எந்த இரானியன் மேலும் சுண்டு விரலைக் கூட வைக்க முடியவில்லை.

தற்போது இந்தப் படங்கள் வெளிவந்துள்ள காலம் கவனத்திற்குரியது. இன்று உலகப் பொருளாதாரம் கடும் நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. அமெரிக்காவைத் தொடர்ந்து ஐரோப்பிய நாடுகள் மீதும், ஆசிய நாடுகள் மீதும் பொருளாதார நெருக்கடி எனும் இருள் கவிழ்ந்து வருகிறது. இந்த நெருக்கடிகளில் இருந்து மீள்வதற்கும், இதனைச் சாக்காக வைத்து தனது உலக மேலாதிக்கத்தை நிறுவிக் கொள்வதற்கும் அமெரிக்கா முயற்சிக்கிறது. பொருளாதாரச் சீர்திருத்தங்கள் என்ற பெயரில் உலகநாடுகளின் பொருளாதாரங்களையும், பொதுச் சொத்துக்களையும், இயற்கை வளங்களையும் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வருகிறது. அதற்குத் தடையாக நிற்கும் நாடுகளின் மேல் நேரடியாகவே அரசியல் மற்றும் இராணுவ ரீதியில் தலையிடுகிறது.

ஆப்கானில் நுழைந்ததை பழிவாங்கல் எனும் பெயரில் நியாயப்படுத்தியாகி விட்டது; ஈராக்கை கபளீகரம் செய்ததற்கு 'பேரழிவு ஆயுதங்களைக்' காரணம் காட்டியாகி விட்டது; லிபியாவைக் கைப்பற்றியாகி விட்டது. பாடம் புகட்டப்பட வேண்டிய நாடுகளின் பட்டியலில் இரான், சிரியா, வெனிசுவேலா மட்டுமின்றி பல்வேறு மத்திய கிழக்கு நாடுகளும், வட கொரியாவும் கூட உண்டு.

தனது தலையீட்டுக்கு அமெரிக்கா கூறிய காரணங்கள் பொய் என்று பின்னர் பலமுறை நிரூபிக்கப்பட்டாலும், தனது பொய்ப் பிரச்சாரத்தை அமெரிக்கா நிறுத்தி விடல்லை. ஆக்கிரமிப்புகளையும், மேலாதிக்கத்தையும் நிறுத்தி விட்டு அமெரிக்கா உயிர் வாழ முடியாது என்ற காரணத்தினால், பொய்ப் பிரச்சார நிறுவனங்கள் மற்றும் ஐந்தாம் படைகள் என்பவை அமெரிக்க மேலாதிக்கத்தின் கட்டுமானத்தில் நிரந்தரமாக அங்கம் வகிக்கின்றன. புதிய முறைகளில், புதிய வடிவங்களில், புதிய நிறுவனங்கள் மூலம் தனது பொய்யைப் பரப்ப அவை இடையறாது சிந்தித்து செயல்படுகின்றன.

ஜார்ஜியாவிலும், செக்கோஸ்லோவாகியாவிலும், மத்திய ஆசிய நாடுகளிலும் நடைபெற்ற ஆட்சிக் கவிழ்ப்புகள் மற்றும் வண்ணப் புரட்சிகளையும், தற்போது சிரியாவில் ஆட்சிக் கவிழ்ப்பை அரங்கேற்றும் நோக்கத்துடன் நடந்து வரும் கலகங்களையும் கருத்தியல் தளத்தில் பின் நின்று இயக்கியது அமெரிக்க என்.ஜி.ஓ.(தன்னார்வ தொண்டு நிறுவனம்) வான ஜனநாயகத்துக்கான தேசிய அறக்கட்டளை மற்றும் ஹியூமன் ரைட்ஸ் வாட்ச் போன்ற அமைப்புகள் தான்.

*தனது ஆக்கிரமிப்புகளின் நோக்கம் உலகம் முழுவதும் ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதுதான் என்பதை எப்படி நம்ப வைப்பது? அதற்கு புஷ்ஷும், ஒபாமாவும் பயன்பட மாட்டார்கள் என்பதனால், அமெரிக்க ஜனநாயகத்தின் மேன்மையையும், தூய்மையையும் நிரூபிக்க ஆபிரகாம் லிங்கன் வரவழைக்கப்படுகிறார்.*


தனது அரசியல், இராணுவ காய் நகர்த்தல்களுக்கு ஏற்ற முறையில் இயங்கும் கருவிகளாக ஊடகங்களையும், என்.ஜி.ஓ.க்களையும் பொருத்தமான முறையில் அமெரிக்கா பயன்படுத்துகிறது. சுகாதாரம், கல்வி, மருத்துவம், சுய தொழில், பெண்கள் உரிமை, விளிம்பு நிலை மக்களின் உரிமை, புற்றுநோய், எய்ட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வு என்று சகல தளங்களிலும் புகுந்து புறப்படும் என்.ஜி.ஓ.க்களின் ஒவ்வொரு சமூக அக்கறைக்கும் பின்னால் குறிப்பிட்ட பன்னாட்டு நிறுவனங்களின் நலனோ அல்லது அமெரிக்க, ஐரோப்பிய அரசுகளின் மேலாதிக்க நோக்கமோ இருக்கின்றன.

நேர்மறையான பிரச்சினைகள் சிலவற்றைக் கையில் எடுப்பதன் மூலம் தமது செயல்பாடுகளுக்கு மக்கள் மத்தியில் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் ஊடகங்களும், தொண்டு நிறுவனங்களும் மக்களிடம் பெற்றிருக்கும் அந்த அங்கீகாரத்தை உரிய நேரத்தில், உரிய முறையில் அமெரிக்காவின் நோக்கத்துக்குப் பயன்படுத்துகின்றன. நீயா நானா நிகழ்ச்சியில் கருத்துச் சுதந்திரம், அறம் ஆகியவை பற்றியெல்லாம் பொளந்து கட்டும் விஜய் டிவியின் உரிமையாளரான ரூபர்ட் முர்டோச்சின் ஸ்டார் நெட்வொர்க் தான், இராக்கில் பேரழிவு ஆயுதங்களை சதாம் மறைத்து வைத்திருப்பதாக உலகம் முழுவதும் பிரச்சாரம் செய்து ஆக்கிரமிப்புப் போருக்கு கொம்பு ஊதியது.

1953-ல் மொசாதேயின் ஆட்சியைக் கவிழ்த்து ஷா வின் ஆட்சியை இரானில் நிலைநிறுத்திய அமெரிக்கா, 1979-ல் ஷா தூக்கியெறியப்பட்ட பின் தானும் இரான் மக்களிடமிருந்து தனிமைப்பட நேர்ந்த து. அந்தக் காலகட்டத்தின் தவறுகளிலிருந்து அமெரிக்கா பாடம் படித்துக் கொண்டு விட்டது. சர்வாதிகாரிகளை ஸ்பான்சர் செய்கின்ற அதே நேரத்தில், சர்வாதிகாரிகளுக்கு எதிரான மக்கள் புரட்சியையும் தானே ஸ்பான்சர் செய்வதன் மூலம் தனது மேலாதிக்கத்தைப் பாதுகாத்துக் கொள்ளலாம் என்ற அனுபவத்தை அமெரிக்காவும், பிற ஏகாதிபத்தியங்களும் கற்றிருக்கின்றன. எனவே, சர்வாதிகாரிகளுக்கு எதிரான மக்கள் எழுச்சிகளையும் கூட என்.ஜி.ஓ-க்களே கொம்பு ஊதித் தொடங்கி வைக்கின்றன. அனைவரையும் முந்திக் கொண்டு அமெரிக்காவுக்கு எதிரான போராட்டத்தையும் என்.ஜி.ஓ.க்களே முன்கை எடுத்து நடத்துகின்றன.

2009 முள்ளிவாய்க்கால் படுகொலை வரையில் ராஜபக்சே அரசுக்குத் துணை நின்ற அமெரிக்காவின் உள்ளத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக மனிதாபிமானம் சுரப்பதும், போர்க்குற்ற ஆதாரங்கள் தவணை முறையில் வெளியிடப்படுவதும், தமிழ்ப் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டது குறித்த உண்மையை கண்டுபிடித்து ஹியூமன் ரைட்ஸ் வாட்ச் அமைப்பு இப்போது வெளியிடுவதும் இதற்கு எடுத்துக்காட்டுகள்.

அரசியல் - இராணுவ தலையீடுகள், ஊடகப் பிரச்சாரம், என்.ஜி.ஓ-க்களின் களச் செயல்பாடுகள் எனும் வரிசையில் தான் ஹாலிவுட் திரைப்படங்களும் வருகின்றன.கம்யூனிச எதிர்ப்பு




- ஜனநாயகம் என்பதற்குப் பதிலாக, பயங்கரவாத எதிர்ப்பு - ஜனநாயகம் என்ற முழக்கத்தை முன்தள்ளும் அமெரிக்கா, எந்த நாடுகளிலெல்லாம் தலையிட விரும்புகிறதோ அவை ஜனநயாக விரோதமானவை என்றோ, பயங்கரவாதத்தை ஊக்குவிப்பவை என்றோ, ரவுடி அரசுகள் என்றோ முத்திரை குத்துகிறது.

இரானின் மீது தாக்குதல் தொடுக்கத் துடிக்கும் அமெரிக்கா, அதற்கு எதிரான புதிய புரட்டுகளை உருவாக்குவதற்கு முன்னர் பழைய நினைவுகளைக் கிளறி விடுகிறது. ஆர்கோவில், மூர்க்கத்தனமான இரானியர்களிடமிருந்து பரிதாபத்துக்குரிய அமெரிக்கர்கள் காப்பாற்றப்படுகிறார்கள். ஜீரோ டார்க் தர்டியில், தமது கடமையை நிறைவேற்றுவது ஒன்றைத் தவிர வேறு எந்தப் பற்றோ, எதிர்பார்ப்போ இல்லாத மாயாவைப் போன்ற அமெரிக்க அதிகாரிகள் பயங்கரவாத ஒழிப்பு பணிக்காக தம்மை அர்ப்பணித்துக் கொள்கிறார்கள்.

இரட்டைக் கோபுரத் தாக்குதலைக் காட்டுவதன் மூலம் கூட அமெரிக்கர்களைப் பாதிக்கப்பட்ட சமூகமாக சித்தரித்து நம்பவைக்க முடியாது என்பதனால், 1979-ன் இரானியப் புரட்சியை துணைக்கழைக்கிறது ஹாலிவுட். விவகாரம் அதோடு முடியவில்லை. தனது ஆக்கிரமிப்புகளின் நோக்கம் உலகம் முழுவதும் ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதுதான் என்பதை எப்படி நம்ப வைப்பது? அதற்கு புஷ்ஷும், ஒபாமாவும் பயன்பட மாட்டார்கள் என்பதனால், அமெரிக்க ஜனநாயகத்தின் மேன்மையையும், தூய்மையையும் நிரூபிக்க ஆபிரகாம் லிங்கன் வரவழைக்கப்படுகிறார். அடிமை முறையை ஒழிக்க ஆபிரகாம் லிங்கன் நடத்திய போராட்டத்தை யாரேனும் மறுக்க முடியுமா என்ன?

ஆஸ்கர் விருதுகளை வென்றிருக்கும் இந்த மூன்று படங்களையும் ஒரே திட்டத்தின் கீழ் யோசித்து தயாரித்திருப்பார்கள் என்பது அதீதமான கற்பனை என்று சிலருக்குத் தோன்றலாம். அவ்வாறுதான் நடந்திருக்க வேண்டும் என்று நாமும் கூறவில்லை. உடுக்கை இழந்தவன் கை போல, எந்தத் திசையை நோக்கி நகர வேண்டுமோ அந்தத் திசையை நோக்கி ஹாலிவுட்டின் கரங்கள் - அதாவது மூளைகள் - யாருடைய தூண்டுதலும் இன்றி, அனிச்சையாக நகர்கின்றன என்பதில்தான் அமெரிக்க வல்லரசுடைய வெற்றியின் இரகசியம் அடங்கியிருக்கிறது.

● நாசர்

# சூரியநெல்லி: குற்றவாளிகளே நீதிபதிகளாக!

17 ஆண்டுகள் ஓடி விட்டன. கிறிஸ்தவ விசுவாசிகளான அவளது பெற்றோர்கள் இப்போதெல்லாம் தேவாலயத்திற்கு செல்வதில்லை. குடும்பத்திற்குள் கூடி இறைவனைத் தினந்தோறும் வேண்டிக் கொள்கிறார்கள். வெளியே துணையாக இருப்ப தாய் அவர்கள் நம்புவது அந்தக் கடவுளைத்தான். ஆனால் அவனது ஆலயத்திற்குள் செல்ல அவர்களால் முடியாது. 33 வயது நிரம்பிய அப்பெண்ணால் சினிமாவுக்கு போக முடியாது, ஒரு கடை கண்ணிக்கு போக முடியாது, எந்த விழாவுக்கும் ஏன் இழவுக்கும் கூட போக முடியாது.

தினந்தோறும் காலையில் பேருந்தில் அலுவலகம் சென்று விட்டு மாலையில் வீடு திரும்புகிறாள். அலுவலகத்தில் வேலை செய்யும் 13 பேரில் பெரும்பாலானோர் அவளது வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களது உறவினர்கள். எனவே தங்களது வெறுப்பை, புறக்கணிப்பை தினமும் அவள் மீது அவர்கள் உமிழ்கின்றனர். பேருந்தில் சென்றால் பயணிகள் அவளைப் பார்த்து தங்களுக்குள் பேசிக் கொள்கிறார்கள். தெரியாதவர்களை அழைத்து அவர்களிடமும் சொல்கிறார்கள் - ‘‘அவள்தான் அந்த சூரியநெல்லிப் பெண்.’’

கேரள மாநிலம், இடுக்கி மாவட்டம் சூரியநெல்லி கிராமத்தைச் சேர்ந்த அவளது அப்பா அஞ்சல் துறையில் ஒரு அலுவலர், அம்மா தேயிலைத் தோட்ட மருத்துவமனையில் செவிலியராகப் பணியாற்றி வந்தார். அவர்களுக்கு இரண்டு பெண் குழந்தைகள். இளைய மகள்தான் அப்பெண்.

இளமையில் குடல் சுருக்க நோயால் அவதிப்பட்ட அவளுக்கு இரண்டு அறுவைச் சிகிச்சைகள் நடந்துள்ளன. பள்ளிக்குச் செல்ல தினமும் 3 கிமீ தூரம் போக வேண்டியிருந்ததால் அவளுக்கு மாத்திரம் உதவிக்கு ஆள் வைத்தனர் பெற்றோர். 8-ம் வகுப்புக்கு மேல் அங்கு படிக்க வசதியில்லாத காரணத்தால் கோட்டயத்தில் விடுதியில் சேர்க்கப்பட்டாள். அந்த ஆண்டு தனிப் பயிற்சி ஆசிரியையிடம் காட்டுவதற்காக தனது புகைப்படமொன்றை எடுத்துச் செல்கிறாள் சூரியநெல்லிப் பெண்.



பேருந்தில் தவறி விழுந்த அப்புகைப்படத்தை கண்டெடுக்கிறான் நடத்துநரான அவளது நண்பன். கேட்டதற்கு தர மறுக்கிறான். மலைப்பகுதி கிராமப்புறத்தை சேர்ந்த விபரமறியாத பெண் என்பதால் மிரட்டத் துவங்குகிறான். தான் சொல்வதைக் கேட்காவிட்டால் அவளது புகைப்படத்துடன் நிர்வாணப் படமொன்றை இணைத்து நகரம் முழுவதும் போஸ்டர் ஒட்டி விடுவதாக மிரட்டுகிறான்.

இதற்கெல்லாம் பயப்பட வேண்டியதில்லை என்பதைக் கூட அறிந்திராத அப்பெண் பரிதவிக்கிறாள். பெற்றோரிடம் சொல்லவும் அவளுக்குப் பயம். தனது ஒழுக்கத்தைத்தான் கேள்வி கேட்பார்கள் என்பதால் யாரிடமும் அவள் உதவி கேட்கவில்லை. விடுதிக்குப் போன பிறகும் விடாது அவளைத் துரத்தும் அவன் அடுத்த ஆண்டு தன் வழிக்குக் கொண்டு வருகிறான்.

பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருந்த அவளைப் பார்த்த உறவினர் ஒருவர் அன்று மாலையே அவளது பெற்றோருக்கு தொலைபேசியில் தகவல் தெரிவிக்கிறார். சந்தேகமடைந்த பெற்றோர் விடுதிக்கு போன் போடவே பெண் காணாமல் போனது தெரிய வருகின்றது. காவல் நிலையத்தில் புகார் செய்கின்றனர்.

45 நாட்கள் தொடர்ந்து அப்பெண்ணை எங்கு தேடியும் கண்டு பிடிக்க முடியவில்லை. இது நடந்தது 16 ஜனவரி 1996-இல். ஒருநாள் அப்பெண் தந்தையின் அலுவலகத்திற்கு வந்து சேர்கிறாள். அவளது கோலத்தைப் பார்க்கச் சகிக்காத அவளது தந்தை கழிவறைக்குள் சென்று விம்மி அழுகிறார்.

மருத்துவமனையில் சேர்க்கிறார்கள். அவளது உடலிலும், பிறப்புறுப்பிலும் கடுமையான காயத்துடன் சீழ் பிடித்து இருந்ததுடன், நோய்த் தொற்றும் கடுமையாக இருந்திருக்கிறது. அப்போதுதான் தனக்கு நேர்ந்த பயங்கரத்தை அப்பெண் சொல்ல ஆரம்பிக்கிறாள்.

அவளைக் கூட்டிச் சென்ற நடத்துநர் முதலில் அவளை வல்லுறவு செய்கிறான். பின்னர் அவனது கூட்டாளிகள்

ஏற்கெனவே தீட்டியிருந்த திட்டத்தின் படி சூரியநெல்லிப் பெண்ணை உஷா தேவி என்ற பெண்ணும், தருமராசன் என்னும் வழக்கறிஞரும் கூட்டிச் செல்கிறார்கள். அந்த வழக்கறிஞர் முதலில் வல்லுறவுக்கு ஆளாக்குகிறான். பிறகு ஒருவர் கைமாற்றி ஒருவராக 41 நபர்கள் அப்பெண்ணை பாலியல் வல்லுறவு செய்திருக்கிறார்கள். நடக்கக் கூட முடியாத நிலைமையில் திரும்பி வந்த அப்பெண்ணின் வயது அப்போது 16 ஆண்டு 3 மாதம்.

இரண்டு வாரம் கழித்து தினசரி பத்திரிகையொன்றைப் படிக்கும்போது அதில் தன்னை இடுக்கி அரசு விருந்தினர் இல்லத்தில் வைத்து பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கினவனது புகைப் படத்தைக் காண்கிறாள். அது பி.ஜே. குரியன், அன்றைய மத்திய அமைச்சர். தற்போதைய ராஜ்யசபாவின் துணைத் தலைவர்.

அதாவது பெண்கள் மீதான வன்கொடுமைக்கெதிரான சட்ட திருத்தங்களை முன்வைக்கும் வர்மா கமிசனது அறிக்கையை ராஜ்யசபா விவாதிக்கையில் அவையை நடத்தப் போகின்ற சபா நாயகர். உடல் முழுதும் ரோமம் இருக்கும் நபர் என அடையாளம் காட்டி குரியன் மீதும் புகார் தருகிறார் சூரியநெல்லிப் பெண்.

அந்த ஆண்டு கேரள சட்டமன்றம் மற்றும் பாராளுமன்ற தேர்தல்கள் ஒன்றாக வந்தது. சூரியநெல்லிப் பெண் தான் அங்கு தேர்தல் பிரச்சாரத்தின் மையமான பேசு பொருள். தேர்தலில் வென்ற இடது முன்னணி தலைமையிலான அரசு இவ்வழக்கில் சிறப்பு நீதி மன்றத்தை அமைத்தது. ஆனால் 1999-ல் விசாரணை துவங்கியபோது குற்றம் சாட்டப்பட்டவர்கள் பட்டியலில் இருந்து குரியனது பெயர் நீக்கப் பட்டிருந்தது.


2000-ல் அப்பெண்ணுக்கு விற்பனை வரித்துறையில் கடைநிலை ஊழியர் பதவி கருணை அடிப்படையில் வழங்கப்பட்டது. அந்த ஆண்டு வந்த தீர்ப்பில் 35 பேர் 4 ஆண்டு முதல் ஆயுள் வரை தண்டனை பெற்றனர். 4 பேர் விடுவிக்கப்பட்டனர். 2 பேர் தலைமறைவாயினர். தருமராசனுக்கு மட்டும் ஆயுள் தண்டனை. 2005-இல் குற்றவாளிகளின் மேல்முறையீட்டின் பேரில் 35 பேரையும் விடுவித்த கேரள உயர்நீதி மன்றம், தருமராசனது தண்டனையை 5 ஆண்டுகளாகக் குறைத்தது. தருமராசனின் தண்டனைக்கான

மருத்துவமனையில் சேர்க்கிறார்கள். அவளது உடலிலும், பிறப்புறுப்பிலும் கடுமையான காயத்துடன் சீழ் பிடித்து இருந்ததுடன், நோய்த் தொற்றும் கடுமையாக இருந்திருக்கிறது. அப்போதுதான் தனக்கு நேர்ந்த பயங்கரத்தை அப்பெண் சொல்ல ஆரம்பிக்கிறாள்.

குற்றத்தை பாலியல் வல்லுறவு என்பதிலிருந்து பெண்ணை விபச்சாரத்தில் ஈடுபடுத்துதல் என மாற்றியது கேரள உயர் நீதி மன்றம்.

குற்றம் சாட்டும் பெண் பாலியல் உறவுக்கான வயதை எட்டி விட்டதால் தனது சம்மதமில்லாமல்தான் பாலுறவு நடந்தது என்பதை நிரூபிக்க அவர் தரப்பு தவறி விட்டதாகவும் அத்தீர்ப்பில் சொல்லப்பட்டிருந்தது. பாலியல் வல்லுறவுக்குள்ளாகிய பெண் கடைசியில் நீதித்துறையின் பார்வையில் ஒரு விபச்சாரியாக மாற்றப்படுவது நடந்தேறியது.

'வலுக்கட்டாயப்படுத்தினால் சத்தமோ அல்லது அழுகையோ வந்திருக்க வேண்டும். இப்படி ஏதேனும் நடந்ததாக அப்பெண் நிரூபிக்கவில்லை. எனவே அவளது சம்மதத்து



பாலியல் வன்முறையை விபச்சாரமாக மாற்றிய நீதிபதி பாசந்த்

டன்தான் உறவு நிகழ்ந்திருக்கிறது என்று தீர்ப்பெழுதினர் அப்துல் கபூர், பசந்த் என்ற இரு உயர்நீதி மன்ற நீதிபதிகள். உச்சநீதி மன்றத்தில் பெண் தரப்பில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

வழக்கில் குரியனையும் சேர்த்துக் கொள்ள போலீசு தவறி விட்டதாக அப்பெண் பீர்மேடு மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் வழக்குத் தொடர்கிறாள். குற்றச் சாட்டிற்கு முகாந்திரம் இருப்பதாக கருதிய நீதிமன்றம் குரியனை நேரில் விசாரணைக்கு அழைக்கிறது. கேரள உயர் நீதி மன்றத்தை அணுகிய குரியனை ஏற்கெனவே அனைவரும் விடுவிக்கப் பட்ட வழக்கில் புதிதாக யாரையும் சேர்க்கத் தேவையில்லை எனக் கூறி நீதி மன்றம் விடுவித்தது. இத்தீர்ப்பின் அடிப்படையில் உச்சநீதி மன்றம் குரியன் மீதான குற்றச்சாட்டை நிராகரித்து விட்டது. 2007-இல் இத்தீர்ப்பு வெளியானது.

முதலில் அப்பெண் மீது அனுதாபம் கொண்டிருந்த மலையாள மனோரமா போன்ற பத்திரிகைகள் பின்னாட்களில் பாசந்தின் சொற்களை வழிமொழிந்தன. அப்பெண் காதலனுடன் ஓடிப் போய் சீரழிந்தவளாக சித்தரிக்கப்படத் துவங்கினாள்.

பல முனைகளில் அவர்களுக்கு அச்சுறுத்தல் வந்தது. அவளது எதிர்காலம் பாதிக்கப்படும் என்பதற்காக வழக்கை வாபஸ் பெறச் சொல்லி சிலர் 'நல்லுபதேசம்' செய்தனர். காவல்துறையினர் மிரட்டினர். உறவினர்களிடமிருந்தும் தனிமைப்படுத்தப்பட்டனர். தேயிலைத் தோட்டத்தில் இருந்தபோது தோட்டத் தொழிலாளர்கள் இவர்களுக்கு பக்கபலமாக இருந்துள்ளனர்.

அவளது தாய் ஓய்வுபெற்ற பிறகு சமவெளிக்கு வந்து சூரியநெல்லியில் சொந்த வீட்டில் குடியேறினார்கள். உறவினர்கள், சுற்றத்தார் யாருடனும் பேச்சுவார்த்தை வைத்துக்கொள்ள முடியாத சமூக விலக்கு அவர்கள் மீது அப்போது அமுலில் இருந்தது. ஒதுக்குபுறமாக இருக்க வேண்டும் எனப் பார்த்தே அந்த வீட்டை அவர்கள் கட்டியிருந்தனர்.

ஆனால் அப்பகுதிக்கு சுற்றுலா வரும் பலரும் சூரியநெல்லிக்கு வந்து அந்த வீட்டை நோக்கி வரத் துவங்கினர். தாங்கள் வந்த வாகனங்களை வெளியில் நிறுத்திவிட்டு, அனுமதியின்றி வீட்டிற்குள் வந்து பார்ப்பதும், அப்பெண்ணிடம் எப்படி சம்பவம்



ராஜ்ஜிய சபா துணைத் தலைவர் பி.ஜே. குரியன், சூரிய நெல்லி குற்றவாளிகளில் ஒருவர்.

நடந்தது ? என்ன செய்தார்கள்? எனக் கேள்விகளால் சூறையாடவும் துவங்கினர். சூரியநெல்லிப் பெண்ணின் துயரம் கேளிக்கை சுற்றுலாவின் அங்கமாக மாறியது.

2005 கேரள உயர்நீதி மன்றத் தீர்ப்பு அவர்களை அங்கிருந்து விரட்டத் துவங்கியது. யாரும் வர முடியாத தனிமையான வீடு ஒன்றை கோட்டயம் சிங்கவனம் பகுதியில் அவர்கள் தேடிக் கொண்டார்கள். ''நாங்கள் இங்கு வரும் போது சுற்றிலும் ஒன்றிரண்டு வீடுகள்தான் இருந்தன. யாரையும் பார்க்க வேண்டியதிருக்காது என்பதால் இதுதான் எங்களுக்கு நல்லது எனக் கருதினோம்'' என்கிறார் அவளது தாய்.

ஏற்கெனவே அவர்களது தொடர்ச்சியான சட்டப் போராட்டங்களால் உறவினர்கள் புறக்கணித்திருந்தனர். சுற்றுமுற்றும் யாருக்கும் அவர்களைத் தெரிந்திருக்கவில்லை. வீட்டிற்குள் தினமும் முழங்கால் படியிட்டு இறைவனிடம் வேண்டத் துவங்கினர். இடையில் அவர்கள் உச்சநீதி மன்றத்தில் செய்திருந்த மேல்முறையீட்டு மனுவிற்கு வழக்கு எண் வழங்கப்படுகிறது. விரைவில் மனு விசாரிக்கப்படும் எனத் தெரிகிறது. இறைவன் தங்களைக் கைவிடவில்லை என அவர்கள் மகிழ்ச்சி அடைகின்றனர்.

ஆனால் இந்த மகிழ்ச்சி நீண்டநாள் நிலைக்கவில்லை. கடந்த ஆண்டு பிப்ரவரி மாதத்தில் ஒருநாள் பேருந்து நிறுத்தத்தில் நின்றிருந்த அப்பெண் கைது செய்யப்படுகிறாள். விற்பனை வரித்துறை அலுவலகத்தில் ரூ.2.26 லட்சங்களைக் கையாடல் செய்து விட்டாள் என்பது குற்றச்சாட்டு. ஆனால் வங்கியில் பணம் கட்டியதற்கான பதிவேடு தொலைந்து போயிருந்ததால் கட்டியதற்கான ஆதாரம் இல்லை எனச் சொல்லிதான் இந்த வழக்கே பதிவானது.

இப்பெண்ணுடன் இன்னும் இரண்டு பெண்களும் துறைவாரியான விசாரணைக்குட்படுத்தப்பட்டாலும், இவளுக்கு மட்டும் பிணை மறுக்கப்பட்டு ஒருவாரம் சிறையில் இருக்க நேர்ந்தது. மற்றவர்களுக்கு வெறும் இட மாறுதல் மட்டும் தான். தங்களது இரு மகள்களின் திருமணத்திற்காக சேர்த்து வைத்திருந்த நகைகளை அடகு வைத்து, பணத்தைக் கட்டி மகளை மீட்டனர் அப்பெற்றோர். பின்னர் நகையை மீட்க இயலாமல் அதுவும் மூழ்கிப் போனது.

தன் மீது குற்றம்சாட்டுபவர்கள் யோக்கியமானவர்கள் இல்லை என்று அவதூறு செய்வதன் மூலம், தன்னை யோக்கியனாகக் காட்டிக் கொள்வதற்கு குற்றவாளிகள் செய்யும் முயற்சி இது என்பது அப்பட்டமான உண்மை. இருப்பினும் பேருந்து நிறுத்தத்தில் வைத்து கைதானதாலும், திருடி எனப் பட்டம் கிடைத்ததாலும் அந்தப் பகுதி மக்களும் அவளை திருடி என எச்சரிக்கையோடு பார்த்து விலகி நடக்கத் துவங்கினர்.

கடந்த இரண்டாண்டுகளுக்கு முன்னர்தான் சூரியநெல்லிப் பெண் இங்கிருப்பதையே தெரிந்துகொள்ள முடிந்தது என்கிறார் அகில இந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் அப்பகுதித் தலைவி. பகுதியின் முன்னாள் பஞ்சாயத்து உறுப்பினரான பெண் ஒருவர், அப்பகுதி மக்களது புறக்கணிப்பால் இவர்களுக்கு உதவி கிடைப்பது சாத்தியமில்லாமல் இருந்ததை ஒத்துக்கொள்கிறார். கைதான போது அப்பெண் உறுப்பினராக இருந்த பணியாளர் சங்கமும் உதவ முன்வரவில்லை.

''உச்சநீதி மன்றத்தில் வழக்கு எண் இடப்பட்டிருந்த காரணத்தால் அவளது நேர்மையின்மையை நிரூபிக்க முயன்ற எதிர்தரப்பின் கைங்கர்யமே இது'' என்கிறார் சி.பி.எம். சார்பு கலைக்குழுவைச் சேர்ந்த சுஜா சூசன் ஜார்ஜ்.

இந்தியா விஷன் என்ற மலையாள சேனலில், ''அப்பெண் விபச்சார சிறுமி! அது பாலியல் வல்லுறவுமல்ல! அவள் பள்ளிக்கு கட்ட வேண்டிய பணத்தை தந்தையிடம் பெற்றுக் கொண்டு வீணாக செலவு செய்வாள். சிறுவயது முதலே அவளது நடத்தை யோக்கியமானதல்ல..'' எனப் பலவாறாக உளறியுள்ளார் நீதிபதி பாசந்த்.


**''புதிய கலாச்சாரம்'' உரிமையாளர் மற்றும் இதர விவரங்கள்**
**படிவம் IV (விதி 8-இன் படி)**

1. வெளியிடும் இடம் : 3, செக்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு சென்னை - 600 031.
2. வெளியிடும் காலம் : மாதம் ஒருமுறை
3. அச்சிடுபவர் பெயர் : இரா. சண்முகராசு
இந்தியக் குடிமகனா? : ஆம்
முகவரி : எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை - 600 024.
4. உரிமையாளர் மற்றும் வெளியிடுபவர் பெயர் : வி. வல்லபேசன்
இந்தியக் குடிமகனா? : ஆம்
முகவரி : 3, செக்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு சென்னை - 600 031.
5. ஆசிரியர் பெயர் : வி. வல்லபேசன்
இந்தியக் குடிமகனா? : ஆம்
முகவரி : 3, செக்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு சென்னை - 600 031.

வி. வல்லபேசனாகிய நான், மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என்று உறுதியளிக்கின்றேன்.

1.3.2013 (ஒப்பம்) வி. வல்லபேசன்
வெளியிடுபவர்.

அதற்கு சில நாட்கள் முன்னர்தான் ஜன வரி 31, 2013 அன்று அப்பெண்ணின் தாய் போட்ட மனுவை ஏற்றுக் கொண்ட உச்சநீதி மன்றம் ஆறு மாதங் களுக்குள் மறுவிசாரணை நடத்தி முடிக்க கேரள உயர்நீதி மன்றத்திற்கு உத்திரவிட்டிருந்தது.

இதற்கிடையில் தலைமறைவாக உள்ள தருமராசன் ஒரு தொலைக் காட்சி நேர்காணலில் குரியனை விருந் தினர் மாளிகைக்கு அனுப்பியது தான் என ஒத்துக்கொண்டிருக்கிறார். விடு விக்கப்பட்ட சிலர் ''நாங்கள் தவறு செய்தது உண்மைதான், நான் பார்த்துக் கொள்கிறேன் என எங்களுக்கு பக்க பலமாக இருந்தவர் குரியன்'' என்றும் சொல்லத் துவங்கியுள்ளனர்.

கேரளத்தில் 2007 முதல் கடுமை யான போராட்டங்கள் நடந்து வருகின் றன. ஆனாலும் மொத்த இந்தியாவும் எழுந்து விடவில்லை. வல்லுறவுக் குற்ற வாளியின் சமூக அந்தஸ்தும், பாதிக்கப் படுபவர்களின் வர்க்கப் பின்னணியும் தான் பிரச்சினையை பேச வைக்கவோ அல்லது பேசாமல் இருத்தவோ வைக் கிறது. வல்லுறவு செய்தவர்கள் டெல்லி யின் பேருந்து தொழிலாளியாய் இருந்து பாதிக்கப்பட்ட பெண் நடுத்தர வர்க்கமாகவும் இருந்தால் நடுத்தர வர்க்கம் மெழுகுவர்த்தி பிடிக்கிறது. வாச்சாத்தி பெண்கள், ராஜஸ்தானின் பன்வாரி தேவி, அரியானாவில் கும்பல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்ட தலித் பெண்கள் என இதற்கு ஏராள மான சான்றுகள் உண்டு.

*முதலில் அப்பெண் மீது அனுதாபம் கொண்டிருந்த மலையாள மனோரமா போன்ற பத்திரிகைகள் பின்னாட்களில் பாசந்தின் சொற்களை வழிமொழிந்தன. அப்பெண் காதலனுடன் ஓடிப் போய் சீரழிந்தவளாக சித்தரிக்கப்படத் துவங்கினாள்.*

குரியன் வழக்கை மீண்டும் நீதிமன் றத்தில் எழுப்புவதற்கு 16 ஆண்டு களும், டெல்லி பாலியல் பலாத்காரத் துக்கு எதிரான பெரும் மக்கள் போராட் டமும் தேவைப்பட்டிருக்கின்றன.

சமீபத்தில் மகாராஷ்டிர மாநிலத் தில் பாலியல் வல்லுறவுக்குள்ளான தலித் சிறுமிகளின் பெயர்களை வெளிப்படையாக உள்துறை அமைச்சர் ராஜ்ய சபாவில் தெரிவித்து விட்டார். பாதிக்கப்பட்ட பெண்ணின் பெயரை வெளியிடுவது சட்டப்படி குற்றம் என்று முழங்கினார் அருண் ஜெட்லி.

அருண் ஜெட்லி கூறியதை கவ னிக்க வேண்டிய முக்கியமான செய்தி என ஷிண்டேக்கு ஞாபகமூட்டினார் அவையை நடத்திக் கொண்டிருந்த குரி யன். 2007-ல் குரியனுக்காக உச்சநீதி மன்றத்தில் வாதாடி அவரைக் குற்றத்தி லிருந்து விடுவித்தவர் ராஜ்ய சபா எதிர்க்கட்சித் தலைவரான பா.ஜ.க-வின் அருண் ஜேட்லி.

எப்படியும் என் சாவுக்கு முன்னரே நீதி கிடைத்து விடும் என நம்புகிறார் சூரியநெல்லிப் பெண்ணின் நடமாட இயலாத 75 வயது தந்தை. ''இந்த வேத னையையும், அவமானத்தையும் சுமக் கவா பிழைக்க வைத்தாய் இறைவா'' எனக் கதறியபடி நியாயத் தீர்ப்பு நாளை மனதில் வைத்து, நம்பிக்கையுடன் காத் திருக்கிறாள் அந்தத் தாய்.

● வசந்தன்

# அயோத்தி: ரியல் எஸ்டேட் மாஃபியாக்களாக சாமியார்கள்!

**பா**பர் மசூதி இருந்த இடத்தில் தான் இராமன் பிறந்தான் என்றும், அங்கே இருந்த கோயிலை இடித்து விட்டுத்தான் பாபர் மசூதியை கட்டிய தாகவும் ஒரு பொய்யை அவிழ்த்து விட்டு, அதை வரலாறாக்கி, வழக்காக வும் ஆக்கி, அலகாபாத் உயர்நீதி மன் றத்தில் தனக்கு சாதகமாகத் தீர்ப்பும் பெற்றிருக்கிறது சங்க பரிவாரக் கும் பல். இப்பிரச்சினைக்காக நாடு முழுவ தும் கொல்லப்பட்ட முசுலீம் மக்களின் எண்ணிக்கை கணக்கில் அடங்காதது.

ஆனால் இதே ராம ஜென்ம பூமி பிரச்சினை அயோத்தி நகரின் இந்து சாமியார்களையும் காவு வாங்கியிருக் கிறது. அவர்களுடைய மடங்களைப் பறித்திருக்கிறது என்றால் உங்களால் நம்ப முடிகிறதா? இந்த உண்மையை சமீபத்திய 'ஓபன் தி மாகசின்' ஒரு கட்டுரையாக வெளியிட்டுள்ளது. அதன் சுருக்கப்பட்ட தமிழாக்கத்தை கீழே தருகிறோம்.


ராமஜென்ம பூமி என்பது மத நம் பிக்கை தொடர்பான பிரச்சினை அல்ல, பார்ப்பன இந்து மதவெறி பாசிஸ்டுகள் அதிகாரத்தைக் கைப்பற்றும் பொருட்டு, பயன்படுத்தும் அரசியல் பிரச்சினை என்பதை நாம் அறிவோம். மக்களின் மத நம்பிக்கை என்ற போர் வைக்குள் ஒளிந்து கொள்ளும் பாசிச கிரிமினல்களின் உண்மையான முகத்தை அம்பலப்படுத்திக் காட்டு கிறது இக்கட்டுரை.

• • •

**ம**ரணம் நெருங்கி விட்டது போலி ருந்தது. கை கால்களை அசைக்க முடிய வில்லை; கண்கள் இருண்டு போயிருந் தன; தாடைகள் இறுகியிருந்தன; மூக்கும், வாயும் நசுக்கப்பட்டு மூச்சுத் திணறியது. மூச்சு விடப் போராடியதில் உடலெங்கும் சுரீரென்று வலி பரவி யது.

''அப்புறம் என்ன ஆச்சு?'' ராம் அசாரே தாஸ் சொல்கிறார்,

''அவ்வளவுதான், இதற்கு மேல் போராடி பலனில்லை என்று நினைத்த சமயம் என் கண்ணெதிரே பகவான் ஹனுமான் முழு தேஜசுடன் காட்சிய ளித்தார். அவர் காலில் விழுந்து என்னைக் காப்பாற்றும்படி கதறினேன். அந்த கணத்திலேயே என் கைகளிலும் கால்களிலும் புதிய சக்தி பாய்ந்தது; புது வேகத்துடன் அந்த கொலைகாரப் பிடி யிலிருந்து தப்பினேன். படுக்கையிலி



பாபர் மசூதி இடித்த பிறகு பக்தியோடு போட்டி போடும் ரியல் எஸ்டேட்!

ருந்து குதித்து இறங்கி, அலறிக் கொண்டே கோயிலிலிருந்து ஓடி னேன்.''

ராம் அசாரே தாசைப் பொறுத்த வரை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு இரவில் நடந்த அந்த தாக்குதலிலி ருந்து அனுமான்தான் அவரை காப் பாற்றினார். இருப்பினும் அனுமாரால் அவருடைய சொத்தைக் காப்பாற்ற முடியவில்லை. அவர் பீடாதிபதியாக இருந்த அயோத்தியின் ராம்கோட் பகுதியில் 7.5 ஏக்கரில் அமைந்துள்ள சௌபுர்ஜி கோயிலின் பல கோடி மதிப் பிலான சொத்து அவருடைய கையை விட்டுப் போய் விட்டது. 'நாகா வைராகி' என்று அழைக்கப்படும் முரட்டுச் சாமியார் பிரிவைச் சேர்ந்த அவர் இன்றைக்கு தன்னுடைய 90 வய தில் நாடோடியாக வாழ்ந்து வருகிறார்.

கோவிலுக்குத் திரும்பிப் போனால், புதிய பீடாதிபதியாக முடி சூட்டிக் கொண்டிருக்கும் தன்னுடைய முன்னாள் சீடரால் கொல்லப்பட்டு விடுவோம் என்று அவர் பயப்படுகி றார். விசுவ இந்து பரிசத்தின் அயோத்தி நகரக் கிளைத் தலைவரான பிரிஜ் மோகன் தாஸ் என்பவர்தான் அந்த 'கொலைகார ராம சீடர்.

''மூன்று ஆண்டுகளுக்கு முன்பு கோயிலின் விவகாரங்களைக் கையா ளுவதற்கு வசதியாக தனக்கு பவர்-ஆப்-அட்டர்னி எழுதித் தரும்படி என் னிடம் கேட்டான். ஆனால், கோவி லின் பீடாதிபதி பதவியையே தன் பெய ரில் பதிவு செய்து கொண்டு, என்னை ஏமாற்றி ஆவணங்களில் கையெழுத்து வாங்கி விட்டான். ஒரு வருடம் எது வும் சொல்லவில்லை. அதற்குப் பிறகு அங்கு இருப்பதற்கு எனக்கு உரிமை இல்லை என்றும், நான் இடத்தைக் காலி செய்ய வேண்டும் என்றும் மிரட்ட ஆரம்பித்தான். நான் கிளம்பாததால், அன்றிரவு என்னைக் கொல்லப் பார்த் தான். அத்தோடு அந்த இடத்தைக் காலி செய்து விட்டேன்'' என்கிறார் ராம் அசாரே தாஸ்.

இப்போது கோவிலையும் அதன் சொத்தையும் முழுமையாகத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பிரிஜ் மோகன் தாஸ், குருவின் மென்னியைத் திருக முயற்சித்ததையோ, கோவில் சொத்தை ஏமாற்றி வாங்கியதையோ மறுக்கிறார். ''என் குரு அயோத்தியின் நில மாஃபியாக்களின் கைக்குள் போய் விட்டார். அவர் கோவிலின் நிலத்தை விற்று விட விரும்பினார். அதை நான் அனுமதிக்கவில்லை. அதனால்தான் என் மீது இது போன்ற அவதூறுகளைச் சொல்கிறார்'' என்கிறார். ''இந்து மதத்தைப் பாதுகாப்பதுதான் என் முதல் கடமை. அதை நான் செய்யவில்லை என்றால் அயோத்தியில் வாழ்வதற்கே எனக்கு உரிமை இல்லை.''

ஒரு விதத்தில் பார்த்தால் ராம் அசாரே தாஸ் அதிர்ஷ்டசாலி. அவர் உயிரோடு தப்பிப் பிழைத்ததற்காக சந்தோஷப்பட வேண்டும். சொத்துக் காக பீடாதிபதிகள் கொலை செய்யப் படுவது அயோத்தியில் அதிகரித்திருக் கிறது. கோவில்களுக்கும், மடங்களுக் கும் சொத்தாக பெருமளவிலான நிலங்கள் இருக்கின்றன. நவாபுகளும் காலனி ஆட்சிக் காலத்து சிற்றரசர் களும் தானமாகக் கொடுத்த நிலங்கள் அவை.

அயோத்தியின் அனைத்துக் கோவில் நிலங்களும் ''தேவதா'' நிலங் களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றின் உடைமை எந்த மனிதரின் பெயரிலும் இல்லாமல் கடவுளின் பெயரில் இருப்பதால், கடவுளை (கோவிலை) தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர் அதன் உரிமையாளர் ஆகி விடுகிறார். (பாபர் மசூதி வழக்கி லும் குழந்தை இராமன் சிலைதான் இடத்தின் உரிமையாளர். இராமனு டைய காப்பாளரான தேவகி நந்தன் அகர்வால் என்பவர்தான் வழக்கின் எதிர் மனுதாரர்- கட்டுரையாளர்).

உத்திர பிரதேசத்தின் சொத்து கைய ளிப்பு சட்டத்தின்படி, ஒவ்வொரு பகுதியின் ஆணையரும் தேவதா நிலத்தை விற்பதற்கு அனுமதி வழங்க முடியும். கடவுளின் காப்பாளர்களான மடாதிபதிகள்தான் நிலத்தின் உரிமை யாளர்கள் என்பதால், கடவுளின் பெய ரில் இருக்கும் நிலங்கள் அடிக்கடி கைமாறுகின்றன.

நிலங்களைக் கைப்பற்றுவதற்காக தமது குருநாதர்களுக்கு எதிராக சீடர்

*கோவிலுக்குத் திரும்பிப் போனால், புதிய பீடாதிபதியாக முடிசூட்டிக் கொண்டிருக்கும் தன்னுடைய முன்னாள் சீடரால் கொல்லப்பட்டு விடுவோம் என்று அவர் பயப்படுகிறார். விசுவ இந்து பரிசத்தின் அயோத்தி நகரக் கிளைத் தலைவரான பிரிஜ்மோகன் தாஸ் என்பவர்தான் அந்த 'கொலைகார ராமசீடர்.*

கள் தீட்டும் சதித் திட்டங்களின் நெடி நகரம் முழுவதும் நிரம்பியிருக்கிறது. குருவைக் கொல்ல சீடர்கள் சதி செய்கிறார்கள். சீடர்கள் ஒருவரையொருவர் கொல்லச் சதித்திட்டம் தீட்டுகிறார்கள். சச்சரவுக்குள்ளாகாத எந்த ஒரு கோவிலையும் அயோத்தியில் பார்க்க முடிவதில்லை.

ராமன் பிறந்த இடம் என்ற சிறப்பு அப்பாவி பக்தர்கள் மனதில் அயோத்திக்கு இருக்கிறது. ஆனால், அயோத்தியின் கோவில்களிலும் ஆசிரமங்களிலும் நடக்கும் வாரிசுரிமைப் போர்களைப் பற்றி அவர்களுக்குத் தெரியாது. நகரத்தின் சாது சமூகத்துக்கு சட்டம் ஒழுங்கு என்றால் என்னவென்றே தெரியாது என்று சொல்லுமளவுக்கு பல வன்முறை சம்பவங்கள் அரங்கேறுகின்றன. ‘தடி எடுத்தவன் தண்டல் காரன்’ என்பதுதான் நடைமுறை விதியாக இருக்கிறது. இது மக்கள் மத்தியில் நாட்டுப்புற பாடலாகவே உருவெடுத்திருக்கிறது.

‘காலைப் பிடிச்சி சாமியாரு
ஆனாங்க!
மென்னியப் பிடிச்சி மடாதிபதி
ஆனாங்க;
பாரம்பரியத்தையும் மறந்தாச்சு!
பாடங்களையும் மறந்தாச்சு;
ஹே ராமா, மீண்டும் பூமிக்கு வா!
இவங்களுக்கு நல்ல புத்தி கொடு’

1980-களின் மத்தியில்தான் இது எல்லாம் ஆரம்பித்தது என்று என்கிறார்கள் அயோத்தியின் சாதுக்கள். பாபர் மசூதி இருந்த இடத்தில் ராமர் கோயில் கட்டுவதற்காக சங்க பரிவாரத்தின் விசுவ இந்து பரிசத் அந்த நேரத்தில்தான் ஆள் திரட்ட ஆரம்பித்திருந்தது.

அயோத்தியின் மடாதிபதிகளைக் கைக்குள் போட்டுக் கொள்வது வி.எச்.பி-இன் திட்டத்தில் முக்கியமான ஒரு பகுதி. சில மடாதிபதிகள் சங்க பரிவாரத்தின் திட்டத்துடன் சேர்ந்து கொண்டார்கள்; அப்படிச் சேராதவர்கள் இந்த வாய்ப்பைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட சீடர்களால் தூக்கி எறியப்பட்டார்கள். தாமும் சொந்தமாக குண்டர் படையை வைத்திருக்கும் மடாதிபதிகளைத் தவிர வேறு யாரும் வி.எச்.பி-இன் இறுகும் பிடியிலிருந்து தப்ப முடியாத சூழல் உருவானது.

ராம ஜென்ம பூமி விவகாரத்திற்கு பிறகு வெளியூர் பக்தர்களின் வருகை பெருமளவு அதிகரித்தது. அவர்கள் தங்குவதற்கான தர்ம சாலைகளாக பல கோவில்கள் மாற்றப்பட்டன. ரியல் எஸ்டேட் மதிப்பு பல மடங்கு அதிகரித்தது.

‘‘பக்திச் சுற்றுலாவில் பெரிய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. முன்பெல்லாம் தமது குருவுடனும், கோவில்களுடனும் பாரம்பரியத் தொடர்பு உடைய பக்தர்கள்தான் வருவார்கள். இந்தக் கோவில் பிரச்சினை ஆரம்பித்ததிலிருந்து வெளியூர்க்காரர்கள் பெரும் எண்ணிக்கையில் வர ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்கள் எளிமையான பக்தர்களும் அல்ல. அவர்களது பணத்துக்கும் டாம்பீகத்துக்கும் பலியான அயோத்தியின் பல சாதுக்கள் துறவைத் துறந்து விட்டார்கள்'' என்கிறார் அயோத்தியைச் சேர்ந்த ஹரிதயாள் மிஸ்ரா என்ற சாது.




**ரியல் எஸ்டேட் கிரிமினல்கள்தான் விசுவ இந்து பரிசத்தின் தளபதிகள்!**

தன்னைத் துறவிகளின் அமைப்பாக சித்தரித்துக் கொள்வதால், விசுவ இந்து பரிசத்திற்கு துறவிகள் தேவைப்படுகிறார்கள். அதுவும் ராமன் பிறந்த ஊராதலால், அயோத்தி நகரின் துறவிகள் அவசியம் தேவைப்படுகிறார்கள். புத்திசாலி மடாதிபதிகள் வி.எச்.பி-யுடன் சேர்ந்து கொண்டார்கள். முடியாது என்று மறுப்பவர்களை வி.எச்.பி குண்டர்கள் உதவியுடன் தூக்கி வீசி விட்டு சொத்தையும் கைப்பற்றிக் கொண்டார்கள். ‘‘காரியத்தை சாதித்துக் கொள்வதற்கு எந்த விதமான கிரிமினல் வேலையையும் கூசாமல் செய்வதற்கு மடாதிபதிகளை வி.எச்.பி பழக்கி விட்டது'' என்கிறார் சத்சங் ஆசிரம் என்ற மடத்தின் துறவி ரகுநந்தன் தாஸ்.

‘‘முன்பெல்லாம் மூத்த பீடாதிபதிகளுக்கு மரியாதை இருந்தது. ஆனால் ராமர் கோயில் இயக்கம் ஆரம்பித்த பிறகு அயோத்தியின் மடாதிபதிகள் பயத்திலேயே வாழ வேண்டியிருக்கிறது. பீடங்களின் தலைமை இப்போது லாபகரமான வியாபாரமாகியிருக்கிறது. அயோத்தியின் பல கோவில்களில் தங்களது ஆட்களைப் புகுத்துவதில் விசுவ இந்து பரிசத் வெற்றியடைந்திருக்கிறது'' என்கிறார் ராம் அசாரே தாஸ்.

‘‘அயோத்தியில் நடக்கும் 90 சதவீத கிரைம்கள் கோவில் சொத்து தொடர்பானவை'' என்கிறார் பைசாபாத்தை சேர்ந்த ரஞ்சித் லால் என்ற வழக்கறிஞர். ‘‘பெரும்பான்மை கோயில்கள் கிரிமினல்களின் கூடாரங்களாக மாறியிருக்கின்றன. நாட்டின் பிற பகுதிகளில் ஏதாவது குற்றம் செய்து விட்டு இங்கு வந்து சாதுக்களின் வேஷத்தில் புகுந்து விடுகிறார்கள். 10-15 ஆண்டுகளில் அரசியல் கட்சி உதவியோடு மடாதிபதி ஆவதில் வெற்றி பெற்றால் இங்கேயே தங்கி விடுகிறார்கள். அல்லது சொந்த ஊருக்குத் திரும்பிப் போய் புதிய வாழ்க்கையை தொடங்குகிறார்கள்''.

ஹனுமான் கர்ஹி என்ற கோயிலில் 500-க்கும் மேற்பட்ட நாக வைராகிகள்

வசிக்கின்றார்கள். நகரத்தில் கோவில் பதவி தொடர்பான சண்டைகளில் இந்த வைராகிகள் முக்கியப் பங்கு வகிக்கின் றனர். ''பெரும்பான்மை கோவில் உரிமை பிரச்சினைகளில் ஹனுமான் கர்ஹியின் நாகாக்கள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ தொடர்புடையவர் கள்'' என்கிறார் ஹரிதயாள் மிஸ்ரா.

ஹனுமான் கர்ஹியின் நாகாக்கள் அந்தக் கோவிலைத் தமது கோட்டை யாகக் கருதுகிறார்கள். அவர்கள் ஆச் சார்யா ராமானந்தர் பாரம்பரியத்தில் வந்த ராம பக்தர்கள். நாகா பாரம்பரி யத்தில் வைராகி என்ற சொல் போர்க் குணமிக்க வைணவத் துறவிகளைக் குறிக்கின்றது.

அயோத்தியின் பெரும்பகுதி கோவில் நிலங்கள் தங்களுக்கு உரி யவை என்று அவர்கள் கருதுகின்றனர். அயோத்தியிலும், வட இந்தியாவின் மற்ற பகுதிகளிலும் உள்ள கோயில் சொத்துக்களை நிர்வாகம் செய்கின்ற னர். கந்து வட்டிக்கு கடன் கொடுப்பது, கோவில் நிலங்களை வாடகைக்கு விடு வது போன்ற தொழில்களில் ஈடுபடு கின்றனர். இந்த வியாபாரங்கள் தொடர்பாக அவர்களுக்கிடையே சண்டை நடப்பதும் வழக்கம்.

''சட்டப்படி ஹனுமான் கர்ஹியும், அதன் சொத்துக்களும் பஞ்சாயத்து முறைப்படி நிர்வாகம் செய்யப்பட வேண்டும். ஆனால் நடைமுறையில் வல்லவன் வகுப்பதுதான் வாய்க் கால்.'' என்கிறார் ஹனுமான் கர்ஹியில் வசிக்கும் பல்ராம் தாஸ். அவரது குரு ஹரிசங்கர் தாஸ் நான்கு ஆண்டு களுக்கு முன்பு கொலை முயற்சியிலி ருந்து தப்பினார். ''என்னை நோக்கி 6 குண்டுகளைச் சுட்டனர். ஆனால் நான் எப்படியோ தப்பி விட்டேன்' என்கி றார் ஹரிசங்கர் தாஸ். அவர் படே பயில்வான் என்று அழைக்கப்படு கிறார். சக சாது ஒருவர்தான் அவரைக் கொல்ல முயற்சித்ததாகச் சொல்கிறார்.

இது போன்ற சம்பவங்கள் நடப்பது ஹனுமான் கோவில் வளாகத்தில் சகஜ மாகி விட்டது. அலகாபாத் உயர்நீதி மன்றமே ஹனுமான் கர்ஹியின் சொத்து தொடர்பான வழக்குகள் அதிக ரித்து வருவதைப் பற்றி கவலை தெரி வித்து, ஹனுமான் கர்ஹியின் நிர்வாகி யாக ஒரு மூத்த அதிகாரியை நியமிக் கும்படி உத்திர பிரதேச மாநில அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறது. காசி விசு வநாதர் கோவிலுக்கு இருப்பதைப் போன்ற ஒரு அறக்கட்டளையை உரு வாக்கலாமா என்பதைப் பரிசீலிக்கும் படியும் சொல்லியிருக்கிறது. அப்படி எதுவும் செய்யவிடாமல், உயர்நீதி மன் றத்தின் அந்த உத்தரவுக்கு ஹனுமான் கர்ஹி நாகா சாமியார்கள் உச்சநீதி மன்றத்தில் தடை உத்திரவு வாங்கியி ருக்கின்றனர்.

80 வயதான ராம்ரூப் தாஸ், ரங் நிவாஸ் கோவிலின் தலைமைப் பீடத்தை தனது சீடர் ரகுநாத் தாசுக்கு கொடுத்து விட்டு பீகாரின் சமஸ்டிபூரி லுள்ள கோயில் நிலங்களைப் பார்த்துக் கொள்ளப் போய் விட்டார். இந்த ஆண்டு பிப்ரவரி 9-ம் தேதி ரகுநாத் தாஸ் வாரிசு யாரையும் அறிவிக்காம லேயே இறந்து விட்டார். ''அவரது இறப்புக்குப் பிறகு ஹனுமான் கிரஹி யைச் சேர்ந்தவரும், பாஜக தலைவரு மான மன்மோகன் தாஸ் கோவிலை சட்ட விரோதமாக கைப்பற்றிக் கொண் டார்'' என்கிறார் ராம்ரூப் தாஸ்.

சீடரின் இறப்பைக் கேள்விப்பட்டு அவசர அவசரமாக அயோத்திக்கு திரும்பிய ராம்ரூப் தாஸ், தான் இன்னும் உயிரோடு இருப்பதால் கோயிலின் தலைமை தனக்குத்தான் வர வேண்டும் என்று வலியுறுத்தினார். ரகுநாத் தாஸ் சிறிது காலம் ஹனுமான் கார்ஹியில் இருந்ததால், தாங்கள் அவ ருடைய குரு சகோதரர்கள் என்றும், கோயில் தங்களுக்குத்தான் சேரும் என்று கூறிய மன்மோகன் தாஸ், குரு ராம் ரூப் தாசை கோயிலுக்கு உள் ளேயே விடவில்லை. ஹனுமான் கார் ஹியின் நாகாக்கள் அதைச் சுற்றி காவ லாக நின்றிருந்தார்கள்.

இந்து சாஸ்திரங்களில் புலமை பெற்ற அர்ஜூன் தாஸ் என்பவர் செட் டில் ஆவதற்கு ஒரு கோவிலை தேடிக் கொண்டிருந்தார். அவரிடம் ராம்ரூப் தாஸ் உதவி கேட்டார். ''கோயில் சொத் தில் எனக்கும் பங்கு கொடுப்பதாக இருந்தால் பணம் வாங்கிக் கொண்டு அவருக்கு உதவி செய்யத் தயார் என்று சொன்னேன்'' என்கிறார் அர்ஜூன் தாஸ். அடுத்த நாளே அர்ஜூன் தாசை தனது சீடராக ஏற்றுக்கொண்டு பீடாதி பதி பதவியை அவர் பெயருக்கு எழுதி வைத்தார் எண்பது வயதான ராம்ரூப் தாஸ்.

இதற்கிடையில் மன்மோகன் தாஸ் தன் தரப்பை பலப்படுத்திக் கொள்ள வி.எச்.பி-யைச் சேர்ந்த ராஜ்குமார் தாஸ் என்ற துறவியிடம் கோவிலை ஒப் படைத்து விட்டார். ராஜ்குமார் தாஸ் பல கொலை வழக்குகளில் தொடர்பு டையவர். இனிமேல் வழக்கு நீதிமன் றங்களில் தீர்மானிக்கப்படலாம்.

அடுத்த கதை யுகல் பீகாரி தாஸ் என்பவருடையது. ஹனுமான் கர்ஹி யைச் சேர்ந்த இந்த வைராகிக்கு அதிர்ஷ்டம் குறைவுதான். 10 ஆண்டு களுக்கு முன்பு அவர் ஏதோ வேலை யாக அயோத்தியை விட்டு வெளியூர் போயிருந்த போது அவரது சீடர் ராமாக்ய தாஸ், 'தன்னுடைய குருநாதர் யுகல் பீகாரி தாஸ் இறந்து விட்டதாக அறிவித்து, அவருடைய முக்தியடைந்த ஆத்மாவுக்கு மரியாதை செலுத்தும் விதமாக தடபுடலாக ஒரு விருந்தையும் ஏற்பாடு செய்து நடத்தி யுகல்பீகாரி தாசின் இடத்தைக் கைப்பற்றிக் கொண் டார்.

அயோத்திக்குத் திரும்பிய யுகல் பீகாரி தாஸ் தான் உயிரோடு இருப்ப தாக சாதுக்களையும், அதிகாரிகளை யும் நம்ப வைக்க எவ்வளவோ முயற்சி செய்தும் பலனில்லை. ''நாங் கள்தான் கருமாதி விருந்தே சாப்பிட்டு விட்டோமே! அவ்வாறிருக்க நீ எப்படி உயிரோடு இருக்க முடியும்?'' என்று மடக்கினர். வெறுத்துப் போன யுகல் பிகாரி தாஸ், அயோத்தியை விட்டே வெளியேறி பீகாரில் எங்கோ வசிக்கி றார்.

அவரைப் போன்று பல துறவிகள் அயோத்தியை விட்டுப் போய் விட விரும்புகிறார்கள். கோயில்களிலிருந்து துரத்தி விடப்படும் கட்சி சாராத பீடாதி பதிகள் வேறு வழியில்லாமல் அதை ஏற்றுக்கொள்கிறார்கள். வெளியேற்றப் பட்ட பல பீடாதிபதிகள் அயோத்தி யின் ஆளரவமற்ற மூலையான சரயு நதிக் கரையில் வாசுதேவ் காட் மஞ்சா என்ற இடத்தில் குடிசைகளில் வசிக்கின்றனர்.

அப்படிப்பட்ட ஒரு குடிசையில் சித்திரகூட்டி பாபா வசிக்கிறார். 10 ஆண்டுகளுக்கு முன்பு வரை அயோத் தியின் பிரபலமான சித்திரகூட்டி அஸ் தானின் பீடாதிபதியாக இருந்தவர் அவர். கோவிலிலிருந்து வெளியேற் றப்பட்டதிலிருந்து அவர் மௌனவிர தம் பூண்டிருக்கிறார். யாரிடமும் பேசு வதில்லை, அவரது எளிமையான குடி சையிலிருந்து எப்போதாவதுதான் வெளியில் வருகிறார். யாராவது அவரிடம் பேச முயற்சித்தால் கெட்ட வார்த்தை சொல்லித் திட்டுகிறார்.

● **தமிழாக்கம்: செழியன்**

2-ஆம் பக்கத் தொடர்ச்சி...

அவரது குடும்பத்தினரின் உலகமே இடிந்து போனது. ''போலீசின் சித்திர வதையும் கொடுமைகளும் துப்பாக்கி தூக்குவதை தவிர அவருக்கு வேறு வழியில்லாமல் செய்து விட்டன'' என்கிறார் முசாமிலின் தந்தை.

**2. குறைவாக அடிப்பதற்காக போலீசுக்கு லஞ்சம் கொடுத்த சிறுவன்**

பெயர் : அதீர் அகமத் தர்
வயது : 19
ஊர் : சோப்போர்
பணி: கல்லூரி முதலாமாண்டு மாணவர்.

கடந்த சில ஆண்டுகளாக அதீர் அப்பாவிடமிருந்து வாரத்துக்கு ரூ 200 வாங்கிக் கொண்டு போவான். 'அது அவனது கைச்செலவுக்கு இல்லை, போலீஸ் நிலையத்தில் குறைவாக அடிக்கும்படி காவலர்களுக்கு லஞ்சமாக கொடுப்பதற்கு' என்பது வெகு காலத்துக்குப் பிறகுதான் அவரது குடும்பத்துக்கு தெரிய வந்தது.

சோபோரின் தெருக்களில் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் அதீர் ஒரு லஷ்கர் போராளியாக மாறியது, காஷ்மீர் இளைஞர்களின் கதைகளுக்கு ஒரு எடுத்துக்காட்டு.

கடந்த டிசம்பர் மாதம் சோப்போரிலிருந்து 5 கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் சைத்புரா கிராம மக்கள் அதிகாலையில் துப்பாக்கிச் சத்தத்தால் எழுப்பப்பட்டனர். பாதுகாப்புப் படையினருடனான மோதலில் 5 பாகிஸ்தானி ஊடுருவலாளர்களும் ஒரு உள்ளூர் தீவிரவாதியும் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட உள்ளூர் போராளி தான் அதீர்.

கால்பந்து ரசிகனான அதீர், கிறிஸ்டினோ ரொனால்டோவின் சிகையலங்காரத்துடன் கறுப்புக் கோடு போட்ட ஸ்வெட்டர் அணிந்திருக்கும் புகைப்படம் மட்டும்தான் அவனது குடும்பத்தின் பொக்கிஷமாக இருக்கிறது. 'போலீஸ் பொய்யான வழக்குகளில் அதீர் போன்ற இளைஞர்களை சிக்க வைத்து அவர்களது குடும்பங்களையும் சேர்ந்து தண்டிக்கின்றனர்' என்று அவரது உறவினர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

2011-ல் நடந்த ஒரு கல் எறிதல் சம்பவத்தில் அவனுக்கும் தொடர்பு உண்டு என்று ஒத்துக் கொள்ளுமாறு அதீர் போலீஸ் நிலையத்தில் சித்திரவதை செய்யப்பட்டான். நான்கு வாரங்களுக்கு இரக்கமில்லாமல் அடித்து துவைத்த பிறகு அவனை பிணையில் வெளியில் விட்டனர். அடி வயிற்றில் உதைப்பது, கம்பால் அடிப்பது, பெல்டுகளால் விளாசுவது என்று சித்திரவதை செய்யப்பட்டதாக அதீர் குடும்பத்தினரிடம் சொல்லியிருக்கிறான்.

பிணையில் வந்த பிறகும் சித்திரவதையும் கொடூரங்களும் தொடர்ந்தன. அருகில் இருக்கும் போலீஸ் நிலையத்துக்கும் சிறப்பு படையினர் முகாமுக்கும் அடிக்கடி அழைக்கப்பட்டு அவன் சித்திரவதை செய்யப்பட்டான். அதை போலீஸ் உயர் அதிகாரிகள் மேற்பார்வை இட்டனர்.

சென்ற ஆண்டு ஜூலை மாதம் அதீர் தலைமறைவாகி விட்டான். 'விடாமல் தொடரும் கொடுமைகளிலிருந்து தப்பிக்க அவனுக்கு வேறு வழியே இருக்கவில்லை' என்கிறார் போலியோவால் பாதிக்கப்பட்டவரான அதீரின் சகோதரர் தவ்ஹீத் அகமது தர்.

அதீரின் குண்டு பாய்ந்த உடலின் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியான போதுதான் குடும்பத்துக்கு அவனைப் பற்றிய கடைசி செய்தி வந்து சேர்ந்தது.

**3. மீண்டும் போராளியாக மாறிய பையன்**

பெயர் : ஆஷிக் அகமது லோன்
வயது : 22
ஊர் : ஷோப்பியன்
பணி : கல்லூரி முதலாண்டு மாணவன்

10ம் வகுப்பில் படிக்கும் போது ஆஷிக் போராளி அமைப்பு ஒன்றில் சேர்ந்தான். ஆனால் இரண்டு மாதங்களுக்கு பிறகு அதிலிருந்து விலகி போலீசில் சரணடைந்தான். வெளியில் வந்ததும் ஒரு மளிகைக் கடை நடத்த ஆரம்பித்ததோடு உள்ளூர் கலைக் கல்லூரியில் படிப்பதற்கும் பதிவு செய்தான்.

ஆனால், அதன் பிறகுதான் சோதனைகள் ஆரம்பித்தன. ஷோப்பியனில் உள்ள போலீஸ் முகாமுக்கு அவன் அடிக்கடி அடிக்கப்பட்டான். ஒவ்வொரு முறையும் அவன் வருவதற்கு முன்பு அவனது இரத்தம் தோய்ந்த உடலுக்கு ஒத்தடம் கொடுப்பதற்கு சுடுநீரை அவனது 45 வயதான அம்மா ஜரீபா அக்தர் தயாராக வைத்திருப்பார். ''அப்போதெல்லாம் குறைந்தது வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்தான்' என்கிறார் அவர். ஆனால் சென்ற ஆண்டு ஜூலை மாதம் ஊரை விட்டு ஓடி போய் விட்ட அவன் எப்போது வேண்டுமானாலும் பாதுகாப்பு படையினரால் கொல்லப்படலாம் என்ற பயத்துடனேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார் அவனது அம்மா.

ஆஷிக் சரணடைந்தால் அரசு வேலை வாங்கித் தருவதாக போலீஸ் குடும்பத்தினரிடம் சொல்லியிருக்கிறது. ''அவனை போராளி அமைப்பில் சேர வைத்ததே இவர்கள்தான், இப்போது வேலை வாங்கித் தருவதாக பசப்புகிறார்கள்'' என்று குமுறுகிறார் ஜரீபா.

*கால்பந்து ரசிகனான அதீர், கிறிஸ்டினோ ரொனால்டோவின் சிகையலங்காரத்துடன் கறுப்புக் கோடு போட்ட ஸ்வெட்டர் அணிந்திருக்கும் புகைப்படம் மட்டும்தான் அவனது குடும்பத்தின் பொக்கிஷமாக இருக்கிறது. 'போலீஸ் பொய்யான வழக்குகளில் அதீர் போன்ற இளைஞர்களை சிக்க வைத்து அவர்களது குடும்பங்களையும் சேர்ந்து தண்டிக்கின்றனர்' என்று அவரது உறவினர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.*


இந்த மூன்று பேரின் குடும்பத்தினர் கூறுவதையுமே பொய் பிரச்சாரம் என்று ஒதுக்கித் தள்ளுகிறது காஷ்மீர் போலீசு.

2012-ல் மட்டும் 40 சிறுவர்கள் ஹிஜ்புல் முஜாகிதினிலும், லஷ்கர்-ஈ-தொய்பாவிலும் சேர்ந்தார்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் படித்தவர்கள். வசதியான குடும்பங்களை சேர்ந்தவர்கள். அரசைப் பொருத்த வரை இது போராளிகளின் புள்ளிவிவரக் கணக்கில் ஒரு சேர்க்கையாக இருக்கலாம். ஆனால் காஷ்மீர் மக்களை பொறுத்த வரை இவர்கள், இராணுவமும் போலீசும் நிகழ்த்தும் கொடுமைகளால் உருவாக்கப்படும் தியாகிகள்.

**நன்றி: தெகல்கா – 19.1.2013,**
**தமிழாக்கம்: செழியன்.**

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளேரி

PUTHIYA KALACHARAM
(Tamil Monthly)
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPERS FOR INDIA UNDER No: 42647/87
Regd. No: TN / CCN / 434 / 09-11



# நடைப்பிணங்கள் ஜாக்கிரதை!

கந்தக வெம்மையில்
கருகிய இலைகளின் நரம்புகள்,
கொஞ்சம் அழுந்தத் தொட்டால்
உதிரும் மழலையின் நாவுகள்.

அடுத்தடுத்து விழுந்து
ஆக்சிஜன் உறிஞ்சிய குண்டுகள்
அடுத்த தலைமுறையே இல்லாமல்
பிள்ளைகள் எரிய
தாயுடல் விறகுகள்.

முண்டம் வேறு தலை வேறாய்
முடிந்தவர்கள் கதையை விட
பயங்கரமானது,
முள்வேலிக்குள் அடைத்துவைத்து
முழு நிர்வாணமாக்கி
உணர்வுகளை சோதனையிட்டு
உறுப்புகளில் 'பயங்கரவாதத்தை' தேடும்
மீட்புப் பணி!

வெடித்துச் சிதறி
இரத்தத்தில் பிசறிக் கிடப்பது
பனை நுங்கின் சிதறலா?
இல்லை,
நிறைமாதக் கர்ப்பிணியின் சிசுக் கூழா?
வளி மண்டலமே
வலி மண்டலமாகும்படி
அதிர்ச்சியில் அலறிய காற்று
பிதுங்கிய விழிகளில்
பீதியில் உறைந்தது.

உரிமைகள் உச்சரித்த
உதடுகள் குதறி...
தாய் மண் நிறைந்த
விழிக்கோளம் சிதறி...
உடல் திசுக்களெல்லாம்
வெறிப்பல் நுழைத்து...
பெண் என்பதற்கும் மேலாக
அவளது பிறப்புறுப்பில் இறங்கி,
இராணுவம் வேட்டையாடிய
ஈழத்து இசைப்பிரியாக்களின் உடம்பில்
இந்திய அரசின் மேலாதிக்கம்
அம்பலமானது!

ஈழக்கொலைக்களத்தை
இயக்கி நடத்தியதே இந்திய அரசுதான்!
இந்த உண்மையை உரைக்காமல்
இந்திய மேலாதிக்கம் எதிர்க்காமல்,
ஈழத்தைக் காப்பாற்ற
இந்தியாவிடமே வலியுறுத்தும்
தில்லிவாய்க்கால்களின் மோசடிகள்
முள்ளிவாய்க்காலை விட பயங்கரமானவை!

சனம்
தவியாய்த் தவிக்கையில்
பிணமாய்க் கிடந்தவர்கள்,
பிணங்கள் உறுதியானவுடன்
சனங்களுக்காக பேச
எழுந்துவர ஆரம்பித்து விட்டார்கள்,
தளபதியாய்... புரட்சித் தலைவியாய்...
புரட்சிப் புயலாய்.
எச்சரிக்கை!

நடமாடும் தமிழகமே
நடை பிணங்கள் ஜாக்கிரதை!

● துரை. சண்முகம்